இரண்டாம் பதிப்பு

விலை: 20
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32
கதிர் 263
ஆடி 31ஆம் நாள்
புதன்கிழமை
16 ஒகஸ்ட் 2017
வள்ளுவர் ஆண்டு 2048

### தமிழ் மக்கள் பொறுமையிழந்து விட்டார்கள்

# உலக நாடுகள் உடன் தலையிடவேண்டும்

### கூட்டமைப்பு வலியுறுத்து; ஐ.நா செயலர், தூதர்களுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஒகஸ்ட் 16

இலங்கை அரசின் அரசியல் போக்கு திசைமாறி வரும் நிலையில் இனியும் பார்த்துக்கொண்டிராமல் உலக நாடுகள் தலையிடவேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. "தமிழ் மக்களின் காணிகளில் இராணுவம் தொடர்ந்தும் குடியிருப்பது நல்லிணக்கத்துக்குச் சாதகமான சமிக்ஞை இல்லை. மக்கள் பொறுமை இழந்துவிட்டார்கள். உலக நாடுகள் இனியும் பார்த்துக் கொண்டிராமல் தலையிட வேண்டும்" என்று ஐக்கியநாடுகள் சபையின் பொதுச்செயலாளர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் மற்றும் வெளி-நாடுகளின் தூதுவர்களுக்குத் தான் எழுதிய கடிதத்தில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை இராணுவத்தின் பிடியிலிருந்து விடுவிக்குமாறு கோரி 170 நாள்கள் வீதியிலிருந்து தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்தக் காணி விடுவிப்புத் தொடர்பில் இரா.சம்பந்தன், அரச தலைவருடன் நேரடியாகப் பேச்சு நடத்தியிருந்தார். அதன் பின்பும் காணி >> 25

## மின்னல் தாக்கி மீனவர் இறப்பு

### குருநகர் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக.16

குருநகர் கடலில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவர் மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.

யாழ்ப்பாணம் குருநகர், >> 25



## அயலுறவு அமைச்சராக மாரப்பன பதவியேற்பு

### செயலாளராக பிரசாத் காரியவசம் நியமனம்

கொழும்பு, ஓக. 16

அவன்கார்ட் சர்ச்சையில் சிக்கி அமைச்சுப் பதவியிலிருந்து விலகிய திலக் மாரப்பன அயலுறவுத்துறை அமைச்சராகவும், அமைச்சின் செயலாளராக பிரசாத் காரியவசமும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவியேற்றனர்.

அரச தலைவர் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னான்டோவும் கலந்து கொண்டார்.

பிணை முறி மோசடி விவகாரத்தால் சர்ச்சையில் சிக்கியிருந்த அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க, பதவியிலிருந்து கடந்த வாரம் விலகுவதாக >> 25

## பிரபாகரன் போன்றோர் உதயமாக சிங்களத் தலைமைகளே காரணம்

### சுதந்திரக் கட்சி தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசுபவர்கள் பரம்பரை பரம்பரையாக இங்குள்ளவர்கள். அவர்களுக்கு ஏதும் தவறிழைக்கப்பட்டிருந்தால் அதனை நாம் பார்க்காமல் வேறு யார் பார்ப்பது? நாங்கள் அவர்களைப் பார்க்காததாலேயே பிரபாகரன் போன்றோர் உதயமாகினர் என்று தெரிவித்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இரா ஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா, >> 25



## காணி அபகரிப்புக்கு எதிராக சுமணரத்ன தேரர் களத்தில்

### கண்ணீர் புகைக்குண்டு வீசி கட்டுப்படுத்தியது பொலிஸ்

மட்டக்களப்பு, ஓக.16

மட்டக்களப்பு,மீராவோடை சக்தி வித்தியாலய மைதானக் காணி அபகரிப்புக்கு எதிராக நேற்று நடத்தப்பட்ட ஆர்ப்பாட்ட >> 25

### 20ஆவது திருத்தச்சட்ட வரைவு இழுபறி:

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தை இன்று அவசரமாகக் கூட்டுகிறார் மைத்திரி

கொழும்பு, ஓக. 16

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும் 20ஆவது திருத்தச் சட்டவரைவு பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது தொடர்பில் >> 25

see more news in newuthayan.com

## ரெலோ உயர்மட்டத்தால் டெனீஸ் மீண்டும் அழைப்பு

### தன்னை பதவி விலக்கும் வழிகளையும் சொல்கிறார்

யாழ்ப்பாணம், ஓக. 16

அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு ரெலோ அமைப்புக் கோரிக்கை விடுத்திருந்த நிலையில், அதனை நிராகரித்து பதவி விலகப் போவதில்லை என்று தெரிவித்திருந்த அமைச்சர் >> 25

### முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பத்தில் இயங்கிய

## மருத்துவ சேவை நிலையம் சுற்றிவளைத்துச் சோதனை



வவுனியா, ஓக.16

வவுனியாவில் முழுமைப்படுத்தப்படாத விண்ணப்பத்தில் இயங்கிய நடமாடும் மருத்துவ சேவை நிலையம் நேற்றுச் சுற்றி வளைக்கப்பட்டது. >> 25

ஷிரந்தியிடம் 4 மணி நேரம் துருவியது சி.ஐ.டி

ஆதரவாளர்கள் கூடி ஆர்ப்பாட்டம்

விரிவு பக். 2

## சீனி விலையில் மாற்றமில்லை

### வரி அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 16

பன்னாட்டுச் சந்தையில் ஒரு கிலோ சீனியின் விலை 10 ரூபாவால் குறைவடைந்துள்ளது. இதனால் உள்நாட்டு >> 25






# கடும் மழைக்கும் மத்தியிலும் மடுவில் திரண்டனர் மக்கள்

மன்னார்,ஓக.16
மன்னார் மடு மாதா தேவாலயத்தின் ஆவணி மாதத் திருவிழாவில் 7 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்றனர். கடந்த இரு தினங்களாக அங்கு கடும் மழை பெய்த போதும் ஆலயத்துக்குச் சென்ற மக்கள் கூட்டுத் திருப்பலி முடிவடைந்த பின்னரே தமது



இடங்களுக்குத் திரும்பினர். திருவிழா திருப்பலி 6.15 மணிக்கு கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. கொழும்பு மறை மாவட்ட பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தலைமையில் மன்னார் மறை மாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை, கண்டி மறைமாவட்ட ஆயர் வியானி பெர்னான்டோ ஆண்டகை, காலி மறை மாவட்ட ஆயர் றேமன் விக்கிரமசிங்க ஆண்டகை, அனுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபட் அன்றாடி ஆண்டகை , கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் மெக்சஸ் சில்வா ஆண்டகை ஆகியோர் இணைந்து திரு நாள் திருப்பலியைக் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனி இடம் பெற்றது. திருச்சொரூப ஆசிர்வாதத்துடன் திருவிழா நிறைவடைந்தது.

அதன் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டு மடு அன்னையின் ஆசி பெற்றனர்.
அதேவேளை நேற்று முன்தினம் மதியம் முதல் மடுத் திருத்தலத்தில் வரலாறு காணாத வகையில் மழை பெய்தது. வெள்ளப்பெருக்கால் மடு அன்னையின் ஆவணி விண்ணேற்பு திருநாளை வழக்கமான முறையில் கொண்டாட முடியாத நிலை ஏற்பட்டது என்று மடுத் திருத்தல பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ் பிள்ளை தெரிவித்தார். பல நூற்றுக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மடுத் திருத்தலத்தில் இருந்து வெளியேறி இருந்தனர். நேற்று முன்தினம் இரவிலிருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை வரை மழை பெய்யவில்லை. அதனால் மடு திருத்தலத்தை சூழ தேங்கியிருந்த வெள்ளம் வற்றியது. திருவிழா திருப்பலி இடம் பெறும் சூழல் ஏற்பட்டிருந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. திருவிழா திருப்பலி நிறைவடைந்த நிலையில் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது. பல மணி நேரங்களின் பின்னரே பக்தர்கள் மடு திருத்தலப் பகுதியில் இருந்து பிரதான வீதியைச் சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-ரி.56)

# ஆவா குழுவின் தலைவர் ஜேர்மனிக்குத் தப்பியோட்டம்

## பொலிஸார் தெரிவித்தனர் என வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16
ஆவா குழுவின் முக்கிய தலைவர் தற்போது ஜேர்மனியில் உள்ளார். அவரைக் கைது செய்வதற்கு பன்னாட்டுப் பொலிஸாரின் உதவி கோரப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், மூத்த பொலிஸ் அதிகாரிகள் மற்றும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வர னுக்கும் இடையில் சந்திப்பு வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது. கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
ஆவா குழு தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு அல்லது அது தொடர்பான விவரங்களைத் தெரியப்படுத்துமாறு கடந்த மாதம் இடம்பெற்ற பொலிஸாரின் கலந்துரையாடலின் போது விவரத்தைக் கோரியிருந்தீர்கள். அவ்வாறான விவரங்களை பொலிஸார் சமர்ப்பித்துள்ளனரா? என்று முதலமைச்சரிடம் கேட்கப்பட்டது.
அதற்குப் பதிலளித்த வடக்கு முதல்வர், "ஆவா குழு தொடர்புடன் சேர்ந்த முக்கிய நபர் ஒருவர் தற்போது ஜேர்மனி நாட்டில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. அவர் இங்குள்ளவர்களுடன் தொடர்பைப் பேணுகின்றார். அது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பன்னாட்டுப் பொலிஸாரின் உதவியுடன் அவரைப் பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று பொலிஸார் பதிலளித்தனர் - என்றார். அதேவேளை கூட்டத்தில், யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ்மொழி தெரிந்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் போதுமானதாக இல்லாத காரணத்தால், மக்களிடம் சரியான முறையில் முறைப்பாடு களைப் பெற்றுக் கொள்ள முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது என்று பொலிஸ் அதிகாரிகள் சுட்டிக் காட்டினர்.
"பொலிஸ் சேவைக்கு வடக்கு மாகாணத்தில் 474 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. நீதிமன்றங்களில், முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளும் போது தமிழ் தெரிந்தவர்கள் தேவையாக உள்ளது. ஆனால் தற்போது தமிழ் தெரிந்த உத்தியோகத்தர்கள் போதிய அளவில் இல்லை. இதனால் பெரிய சிரமத்துக்கு முகம்கொடுக்க வேண்டி உள்ளது. மக்களிடம் முறைப்பாடு பெற்றுக் கொள்வதற்கும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. பொலிஸாருக்கு உரிய கட்டடம் இல்லை. அதற்கான நடவடிக்கை வேண்டும். தற்போது வாடகைக்குப் பெற்றுள்ள தனியார் கட்டடங்களில் பொலிஸ் நிலையங்கள் இயங்குகின்றன. என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.
சில இடங்களில் வறுமையின் நிமித்தம் நன்றாகப் படிக்கக்கூடிய மாணவர்களும் பாடசாலையை விட்டு விலகுகின்றனர். அவர்களுக்குப் புலமைப் பரிசில் திட்டம் கொடுத்து தொடர்ச்சியாக கல்வி கற்பதற்கு உரிய வழிவகைகள் மேற்கொள்வது தொடர்பாகவும் கூட்டத்தில் ஆராயப்பட்டது. யாழ்ப்பாணத்தில் இளைஞர்களின் குற்றச்செயல் கள் தொடர்பாக ஆராயப்பட்டது. ஆவா குழுவுடன் சம்பந்தப்பட்ட பெருமளவினலானோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
நீதிமன்றங்களில் குடும்ப சச்சரவுகள் அதிகளவில் உள்ளன என்று பொலிஸார் சுட்டிக்காட்டினர். அதற்கு குடும்ப ஆலோசகர்ளை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூட்டத்தில் கோரப்பட்டது. (ஜ.10.101)

# 4 மணி நேரம் ஷிரந்தியிடம் வாக்குமூலம் பெற்றது சி.ஐ.டி.

## ஆதரவாளர்கள் திரண்டு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஓக.8
றகர் விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீனின் கொலை தொடர்பான விசாரணைகளுக்காக நேற்று குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மனைவி ஷிரந்தி ராஜபக்சவிடம் மூன்று மணிநேரம் தொடர் விசாரணை நடத்தப்பட்டது.



செஞ்சிலுவைச் சங்கத்தால் சிரிலிய அமைப்புக்கு வழங்கப்பட்ட டிபெண்டர் வாகனத்தின் நிறம் மாற்றியமைக்கப்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் பெறுவே ஷிரந்திக்கு குற்றப் புலனாய்வுப் பிரிவு அழைப்பாணை விடுத்திருந்தது.
அந்த வாகனம், ஷிரந்தியின் பாதுகாப்பு அதிகாரிகளால் வசீம் தாஜுதீனின் கொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் கொலை இடம்பெற்ற பின்னர் திடீரென அது நிறமாற்றம் செய்யப்பட்டது என்றும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாகவே வாக்குமூலம் பெறப்பட்டது. முற்பகல் 10 மணியளவில் ஷிரந்தி குற்றப் புலனாய்வுப் பிரிவு வளாகத்துக்கு வந்தார். அவருடன் மகிந்த ராஜபக்சவும் வந்திருந்தார்.

ஆர்ப்பாட்டம்
ஷிரந்தி ராஜபக்சவை விசாரணைக்கு அழைத்தது அரசியல் பழிவாங்கல் நடவடிக்கை எனத் தெரிவித்து மகிந்தவின் ஆதரவாளர்கள் குற்றப்புலனாய்வுப் பிரிவு வளாகத்தில் கறுப்புப் பட்டியணிந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.
அரசை விமர்சித்தும், ஷிரந்தியைப் புகழ்ந்தும் அவர்கள் கோசம் எழுப்பினர். மகிந்தவுக்குச் சார்பான மகளிர் அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது எதிரணி உறுப்பினர்கள் உட்பட பல பெண்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். "எங்கள் அம்மா எமக்கு வேண்டும்" என்று அவர்கள் கோசம் எழுப்பினர்.

பின்னணி
2012 ஆம் ஆண்டு வசீம் தாஜுதீன் சடலம் நாரஹேன்பிட்டிய பகுதியில் காரொன்றிலிருந்து எரிந்த நிலையில் மீட்கப்பட்டது. அது விபத்து என்று தெரிவிக்கப்பட்டது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் மேற்படி சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பமாகின. அது விபத்து அல்ல படுகொலை என்று உறுதியானது. (ற-30)

# விபத்தில் இருவர் காயம்

கொழும்பு, ஓக.16
ஹற்றன் - மஸ்கெலியா பிரதான வீதியில் முச்சக்கர வண்டி விபத்துக்குள்ளானது. அதில் இருவர் காயமடைந்தனர்.
இந்த விபத்து நேற்று மாலை மூன்று மணியளவில் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
மஸ்கெலியாவிலிருந்து நோர்வூட் நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியே, நோர்வூட் - றொக்குட் பகுதியில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.
விபத்தில் முச்சக்கரவ ண்டியின் சாரதியும், முச்ச க்கர வண்டியில் பயணித்த ஒருவருமே காயமடைந்துள்ளனர். (ற)

# கொழும்பில் துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஓக.8
கொழும்பு, வெயாங்கொட மேம்பாலத்தில் நேற்று மாலை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று நடந்துள்ளது.
காரொன்றில் வந்த சிலர் வான் ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
வெயாங்கொட மேம்பாலம் தற்காலிகமாக மூடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# புனர்வாழ்வு பெற்றவர்கள் வன்முறையில் இறங்கார்

## அண்மைய சம்பவங்களுடன் அவர்களுக்கு தொடர்பில்லை என புனர்வாழ்வு ஆணையாளர் உறுதி

வவுனியா, ஓக. 16

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்று வரும் வாள் வெட்டுச் சம்பவங்களுக்கும், புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை.

இவ்வாறு புனர்வாழ்வு ஆணையாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியாவில் புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்ற பயிலுநர்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களில் மறுவாழ்வு வழங்கப்பட்டு சமூக மயமாக்கப்பட்ட பயிலுநர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாகவே அவர்களுக்கு இந்த உதவித்திட்டங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு, மன்னார், வவுனியா



போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கே அவை வழங்கப்பட்டன. வடக்கில் அண்மைக்காலமாக இடம்பெறும் வன்முறைச் சம்பவங்களுக்கு முன்னாள் போராளிகள் காரணம் என்ற கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இது தவறான கருத்து. முன்னாள் போராளிகள் இந்தச் சம்பவங்களுடன் தொடர்புபடவில்லை. வாள்வெட்டுக் குழுக்களுக்கும் அவர்களுக்கும் தொடர்பும் இல்லை - என்றார்.

நிகழ்வில் வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தில் மறுவாழ்வு பெற்ற 54 பயிலுநர்களுக்கு வாழ்வாதார உதவிகளான கோழிக்குஞ்சுகள், கோழிக்குஞ்சுக்கான உணவுப் பொதிகள் என்பன வழங்கப்பட்டன. வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தின் பின்னாய்வு இணைப்பு அதிகாரி இ.பி.எவ். பெர்னான்டோ தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் பூந்தோட்டம் புனர்வாழ்வு நிலையத்தின் பொறுப்பதிகாரி கேணல் ஹேமில்டோன், மற்றும் சர்வமதக் குருக்கள், பொதுமக்கள், புனர்வாழ்வு பெற்ற பயிலுநர்கள், உறவினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-10)

# கழிவகற்றல் சிக்கலுக்கு அடுத்த ஆண்டில் தீர்வு

## அரச தலைவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

நாட்டில் ஏற்பட்டுள்ள கழிவகற்றல் தொடர்பான பிரச்சினைக்கு அடுத்த வருடத்தில் நிலையான தீர்வு வழங்கப்படும்.

இந்த வருட இறுதிக்குள் 9 மாகாணங்களில் கழிவு முகாமைத்துவத்துக்கான உரிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவ செயற்பாடுகளை முறைமைப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் அரச தலைவர் செயலகத்தில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். என்று அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது,

கொழும்பு மற்றும் அதனையண்டிய பிரதேசங்க ளில் கழிவுகளை வெளியேற்றும் செயற்பாடுகளின் தற்போதைய முன்னேற்றம் தொடர்பாக அரசதலைவர் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். உள்ளூராட்சி நிறுவனங்களின் கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தல், கழிவு முகாமைத்துவம் தொடர்பாக பொதுமக்களை அறிவூட்டும் நடவடிக்கைகளை மேலும் விருத்தி செய்தல், பாடசாலைகளில் கழிவு முகாமைத்துவத்தை செயற்படுத்தல் மற்றும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருள்களின் பாவனையை குறைப்பதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

அதில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்களான பாட்டலி



சம்பிக்க ரணவக்க, கயந்த கருணாதிலக்க, அகில விராஜ் காரியவசம், சாகல ரத்நாயக்க, சரத் பொன்சேகா, மேல் மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய, அரச தலைவரின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, அமைச்சுக்களின் செயலாளர்களும், அரச அதிகாரிகள், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் கலந்து கொண்டனர் என்றுள்ளது. (ஐ-10)



# தடை செய்யப்பட்ட மீன்பிடி: 9மீனவர் கைது

பருத்தித்துறை ஓக. 16

பருத்தித்துறைக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட மீன்பிடியில் ஈடுபட்ட உள்ளூர் மீனவர்கள் 9பேர் நேற்றுக் காலை கடற்படையிரால் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தும்பளை, இன்பசிட்டி, மாமுனைப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். மீனவர்கள் குழைபோட்டு கணவாய் பிடித்தனர் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

அவர்கள் பயன்படுத்திய மீன்பிடி உபகரணங்கள், 4 படகுகள் மற்றும் பிடிக்கப்பட்ட கணவாய் என்பன கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட மீனவர்கள் யாழ்.மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

உரிய பதிவுகளின் பின்னர் மீனவர்கள் பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

அவர்களை தலா ஒரு இலட்சம் ரூபா ஆட்பிணையில் நீதிமன்று விடுவித்தது இந்த வழக்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

(ஐ-26, ரி)

# துன்னாலை இளைஞன் கைது

வடமராட்சி, ஓக.16

திருட்டுக்கள் மற்றும் வன்முறைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் துன்னாலை இளைஞர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். என்று தெரிவிக்கப்பட்டது.

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞன் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். இளைஞனை முள்ளிப் பகுதியில் வைத்து நெல்லியடிப் பொலிஸார் கைது செய்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் இளைஞனிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-26, ரி)

# 21 வயது இளைஞன் கொக்குவிலில் கைது

யாழ்ப்பாணம்,ஓக.16

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொக்குவில் மேற்கு கேணியடிப் பகுதியில் வைத்து, சிறப்பு அதிரடிப்படையினர் அவரைக் கைது செய்தனர். கொக்குவில் பகுதியில் பொலிஸார் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில், ஆவா குழு என அடையாளப்படுத்தப்பட்ட இளைஞர்கள் 13 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து சுன்னாகம், அராலிப் பகுதிகளிலும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன. சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கு சிறப்பு அதிரடிப்படையினர் களமிறக்கப்பட்டனர். அவர்கள் கொக்குவில் பகுதியில் வைத்து 21 வயதான இளைஞனை சந்தேகத்தில் நேற்றுக் கைது செய்தனர். சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார். சந்தேகநபர் ஆவாக் குழு உறுப்பினர்களுடன் குழுவாக எடுத்த புகைப்படங்களை தனது முகநூலில் பதிவேற்றியுள்ளார். அதனடிப்படையில் இளைஞன் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ,ரி-1,8,106)



# கூட்டரசுக்கு அழுத்தம்

கொழும்பு, ஓக.8

கூட்டரசு அமைக்கப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ளன. வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை நிறைவேற்ற உடனடியாக நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

இவ்வாறு அரசை வலியுறுத்தி கொழும்பு விகாரமாதேவி பூங்காவுக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்காக பொது வேட்பாளராக நிறுத்தப்பட்ட மைத்திரிபால சிறிசேனவுடன் கைகோர்த்து நாடு தழுவிய ரீதியில் சோபித தேரர் தலைமையிலான சிவில் அமைப்புகள் பரப்புரைகளை மேற்கொண்டனர். அந்தச் சிவில் அமைப்புகளின் ஏற்பாட்டிலேயே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுடன் நல்லாட்சி அரசின் அமைச்சர்களான மங்கள சமரவீர, ராஜித சேனாரத்ன, மனோ கணேசன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர். (ற-30)

# ரோகிதவிடம் நேற்று எவ்.சி.ஐ.டி. வாக்குமூலம்

கொழும்பு, ஓக.16

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் மூன்றாவது மகனான ரோகித ராஜபக்சவிடம் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு நேற்று விசாரணை நடத்தியது.

சீனாவின் உதவியுடன் ஏவப்பட்ட சுப்ரீம் செட் 1 செய்மதி விவகாரத்தில் இடம்பெற்றது என்று கூறப்படும் நிதி மோசடி தொடர்பாக வாக்குமூலம் பெறவே அவர் அழைக்கப்பட்டிருந்தார்.

அவர் வாக்குமூலம் அளிக்கச் சென்றபோது முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் பொலிஸ் நிதிக்குற்ற விசாரணைப் பிரிவு வளாகத்துக்குச் சென்றார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், கெஹலிய ரம்புக்வெல உட்பட மகிந்த அணி உறுப்பினர்களும் சென்றனர்.

(ற-30)



நல்லூர் கந்தசுவாமி ஆலயத் திருவிழாவில் கார்த்திகை உற்சவம் வழமை போன்று சிறப்புற இடம் பெற்றது. வள்ளி, தெய்வானை சமேதரராய் முத்துக்குமார சுவாமி கார்த்திகை ரதத்தில் அடியவர்களுக்கு காட்சியளித்தார். (வ-37)

# கலாநிதி ஆறு திருமுருகனுக்கு யாழ் விருது வழங்கி மதிப்பளிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனின் சமய சமூகப் பணிகளைப் பாராட்டி யாழ். விருது வழங்கி யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு மதிப்பளித்தது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு நல்லூர்க் கந்தனின் திருவிழாவை முன்னிட்டு வெளியிடும் நல்லைக் குமரன் மலர் வெளியீடு நேற்று யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்விலேயே தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவரும் சிவபூமி அமைப்பின் நிறுவுனருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகனுக்கு யாழ். விருது வழங்கப்பட்டது. ஈழத்தில் சமய சமூகப் பணிகளை மிகச் சிறப்பாக ஆற்றி வருவதற்காகவே அவருக்கு இந்த மதிப்பளிப்பு வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.



இதேவேளை, சைவ சமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் வெள்ளி விழா மலர் நல்லூர் ஆலயத்திலிருந்து மங்கல வாத்தியம் சகிதம் ஊர்வலமாக நாவலர் கலாசார மண்டபத்துக்கு எடுத்துவரப்பட்டு நிகழ்வின் முதன்மை விருந்தினரான வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவனால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

(வ)

# அமைச்சுப் பதவி பறிக்கப்படுமோ? என்ற அச்சத்தில் அனந்தி சசிதரன்

## *கிளிநொச்சி கூட்டுறவாளர் நிகழ்வில் அவர் கவலை*

கிளிநொச்சி, ஓக. 16

"வடக்கு மாகாண அமைச்சராகப் பொறுப்பெடுத்துள்ள நான் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றேன். வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியும் எப்போது பறிக்கப்படுமோ? என்ற அச்சமும் உள்ளது" என்று வடக்கு மாகாண மகளிர் விவகாரம், சமூக சேவைகள், மறுவாழ்வு மற்றும் கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

உலக கூட்டுறவு தின நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு சபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் வடக்கு மாகாண அமைச்சர் அனந்தி சசிதரன், கூட்டுறவு ஆணையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் அனந்தி சசிதரன் மேலும் தெரிவித்ததாவது:

போர்க் காலத்தில் கூட்டுறவுப் பணியாளர்களின் பங்கு அளப் பரியதாக இருந்தது. போர் இடம்பெற்ற சூழலில் காயமுற்றவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் எனப் பலருக்கும் பல்வேறு உதவிகள் கூட்டுறவுச் சங்கங்களால் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக வடக்கில் கூட்டுறவுச் சங்கங்கள் மிகவும் சிறப்பாக இயங்கின

இன்று நான் அமைச்சராகப் பொறுப்பெடுத்துள்ள நிலையில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்கின்றேன். வழங்கப்பட்ட அமைச்சுப் பதவியும் எப்போது பறிக்கப்படுமோ? என்ற அச்சம் எனக்கு உள்ளது. எனினும் நான் ஒரு பெண்ணாக சாதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளேன்.

போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு எவ்வாறு உதவலாம்? என்பது தொடர்பில இன்று கிளிநொச்சி மாவட்டச் செயலர் மற்றும் பிரதேச செயலாளர்களுடன் சற்று முன் பேசியுள்ளேன். எவ்வாறாயினும் நான் ஒரு பெண்ணாக இருந்து எதையாவது சாதிக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை, உலக கூட்டுறவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. வடக்கு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சின் செயலாளரும் கிளிநொச்சி மகாதேவா சுவாமிகள் சைவச் சிறார்கள் இல்லத் தலைவருமான திருநாவுக்கரசு இராசநாயகம் முதன்மைக் கூட்டுறவாளர் விருது வழங்கிக் மதிப்பளிக்கப்பட்டார். கூட்டுறவு பணியில் ஈடுபட்டவர்களும் மதிப்பளிக்கப்பட்டனர். (வ-35)

# தொடருந்தை மறித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஓக. 16

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி தொடருந்தை வழிமறித்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். வவுனியா தாண்டிக்குளம் தொடருந்துக் கடவைக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது." பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவைகளில் கடவைக்காப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். பத்தினியார் மகிழங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் தாண்டிக்குளம் முச்சக்கர வண்டிகளின் சாரதிகள், மக்கள் என 200 க்கும் அதிகமானோர் ஒன்று திரண்டு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர். தொடருந்தைப் பொதுமக்கள் மறித்துப் போராடப்போகும் தகவலைத் தாண்டிக்குளம் தொடருந்துப் பணியாளர்கள் அறிந்தனர். அவர்கள் ஓமந்தைத் தொடருந்து நிலையத்துக்கு தகவல் வழங்கினர். ஓமந்தைத் தொடருந்து நிலையத்தில் காலை 8 மணியளவில் பயணித்த தொடருந்து சற்றுத் தாமதித்து வேகம் குறைத்துத் தாண்டிக்குளம் தொடருந்து நிலையத்தை நோக்கிப் பயணித்தது. தாண்டிக்குளத்துக்கும், நொச்சிமோட்டைப் பகுதிக்கும் இடையில் திரண்ட ஒரு சிலர் சிவப்புக்கொடிகளைக் காட்டி தாண்டிக்குளம் பாதுகாப்பற்ற கடவையில் தொடருந்தை நிறுத்து மாறு தொடருந்துச் சாரதியிடம் கோரிக்கை விடுத்தனர். தாண்டிக்குளம் பாதுகாப்பற்ற கடவையில் பொதுமக்கள் ஒன்று திரண்டு தொடருந்தை மறித்தனர். தொடருந்து நிறுத்தப்பட்டது. அங்கு வடக்கு முன்னாள் சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா. முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன், வவுனியா மாவட்ட மேலதிக செயலர் திரேஸ்குமார் ஆகியோர் வருகை தந்தனர். அவர்கள் பொலிஸாருடன் உரையாடினர். பொலிஸார் பொதுமக்களிடம் சமரசம் பேசினர். "தொடருந்துக் கடவையில் இன்று மாலை (நேற்று மாலை) கடவைக்காப்பாளர் பணிக்கு அமர்த்தப்படுவார். இனிமேல் இவ்வாறான விபத்துக்கள் ஏற்டாதவாறு தொடருந்துத் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விடயம் தொடர்பாக பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும். " என்று வவுனியா பொலிஸ் அதிகாரி உறுதியளித்தார். அதனையடுத்து மக்களின் போராட்டம் கைவிடப்பட்டது. "வவுனியா தாண்டிக்குளத்தில் நேற்று (நேற்று முன்தினம்) மாலை 4.30 மணியளவில்" பாதுகாப்பற்ற தொடருந்துக்கடவையைக் கடக்க முற்பட்ட முச்சக்கர வண்டியைத் தொடருந்து மோதியது. அதில் முச்சக்கரவண்டியின் சாரதி உயிரிழந்தார். விபத்தின் போது அந்தப் பாதுகாப்பற்ற தொடருந்துக் கடவையில் பாதுகாவலர்கள் எவரும் கடமையில் இருக்கவில்லை. கடந்த சில வாரங்களாக இந்தப் பாதுகாப்பற்ற கடவையில் எவரையும் தொடருந்துத் திணைக்களம் கடமையில் அமர்த்தவில்லை. மின்சார சமிக்ஞை மட்டும் பொருத்தப்பட்டிருந்தது. அதே கடவையில் கேற் எதுவும் இருக்கவில்லை. கடந்த சில மாதங்களுக்கு முன் இந்தக் கடவையில் கடவைக்காப்பாளர் ஒருவரை வேலைக்கு அமர்த்துமாறு தொடருந்துத் திணைக்களம் மற்றும் பொலிஸாருடனும் தொடர்பு கொண்டும் பயன் எதுவும் கிடைக்கவில்லை" என போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.



(ஜ-10, 402)



இந்தியாவின் 71ஆவது சுதந்திரதின நிகழ்வுகள் நேற்றுக் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்றன. பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. யாழ்ப்பாணத்தில் உள்ள தூதரகக் கிளையிலும் நிகழ்வுகள் நடைபெற்றன. (ற)




## தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி கவனவீர்ப்பு

மட்டக்களப்பு, ஓக. 16
தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி பாதிக்கப்பட்ட மக்களால் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.
மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதேச செயலகம் முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.
வாழைச்சேனைப் பிரதேசத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. ''தமிழர் தேசத்தை அங்கீகரி, அரசே தமிழர் வாழ்க்கையை சிதைக்காதே, காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எங்கே, அரசியல் கைதிகளை உடன் விடுதலை செய், வடக்கு கிழக்கு எங்கள் தாயகம், வடக்கு கிழக்கு இணைப்பு வேண்டும், அரசியல் கைதிகளை நிபந்தனையின்றி விடுதலை செய்" என பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். " அரசு தமிழ் மக்கள் விடயத்தில் எந்தவித கரிசனையும் காட்டுவதில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல்வாதிகளும் இதில் அக்கறை காட்டுவதில்லை. நல்லாட்சி அரசால் தமிழ் மக்களாகிய எங்களுக்கு எந்தவித தீர்வும் கிடைக்கவில்லை. இது நல்லாட்சி அரசு இல்லை போலி அரசு. காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகள் பெரிதும் ஏக்கத்துடன் வாழ்ந்து வருவதுடன், பிள்ளைகள் கல்வியைத் தொடர முடியாமல் தந்தையின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றார்கள்.
போரின் போது தமிழ் மக்களைக் கொன்றதும் இல்லாமல் தமிழ் மக்களை கைது செய்து சிறையில் அடைத்து வைத்தனர். எனவே நல்லாட்சி வேடம் பூண்டுள்ள அரசு அரசியல் கைதிகளை எந்தவித நிபந்தனைகளும் இன்றி விடுதலை செய்ய வேண்டும்" என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர். (ஜ-10-47)

# ராணுவத்தின் பிடியிலிருந்த 38 ஏக்கர் காணி விடுவிப்பு

கிளிநொச்சி ஓக 16
கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் அவர்களது பயன்பாட்டில் காணப்பட்ட 38 ஏக்கர் விவசாயக் காணியை ராணுவத்தினர் நேற்று விடுவித்தனர்.
அந்தக்காணி விடுவிப்பு தொடர்பிலான ஆவணங்களை இராணுவத்தினர் கிளிநொச்சி மாவட்டச் செயலாளரிடம் நேற்றுக் கையளித்தனர்.
கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளைப் பகுதியில் உள்ள காணிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன. அவற்றை இனங்கண்டு காணி உரிமையாளர்களிடம் கையளிப்பதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளதாக மாவட்டச் செயலர் தெரிவித்தார். கரைச்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் பரவிப்பாஞ்சான் பகுதியில் ஒரு ஏக்கர் காணி கையளிக்கப்பட்டுள்ளது. கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் கோரக்கன் கட்டு வை.எம்.சி.ஏ காணி 3.5 ஏக்கரும், மணியம்தோட்டம் 33.5 ஏக்கரும் இராணுவத்தால் மக்களின் பாவனைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வில் மாவட்ட செயலாளர், உதவி மாவட்ட செயலாளர் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர்கள் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-6)



# கணக்காய்வாளர்கள் 13பேருக்கு நியமனம்

யாழ்ப்பாணம், ஓக. 16
வடக்கு மாகாண உள்ள கக் கணக்காய்வாளர்களுக்கான நியமனங்களை வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று வழங்கி வைத்தார்.
வடக்கு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவாகிய 13 பேருக்கான நியமனக் கடிதங்களை ஆளுநர் செயலகத்தில் வைத்து அவர் கையளித்தார்.
சம்பிரதாயபூர்வமாக நியமனக் கடிதங்களை வழங்கி வைக்கும் இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதன்மைச் செயலர் பத்திநாதன், ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். 'அனைவரும் நாட்டின் முன்னேற்றத்துக்காகச் செயலாற்ற நிர்ப்பந்திக்கும் அதே வேளை குறிப்பாக வடக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்காக உங்களை அர்ப்பணிக்க வேண்டும்.



வடக்கு மாகாணத்தில் படித்த இளையோரின் வேலை வாய்ப்புத் தொடர்பில் கூடிய கவனத்தை நான் செலுத்தி வருகின்றேன். எதிர்காலத்தில் வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுப்பேன்' என இதன் போது ஆளுநர் தெரிவித்தார். (ய-10)

## சிறுமி மீது பாலியல்வதை; சந்தேகநபர் தலைமறைவு

*தென்மராட்சியில் சம்பவம்*

தென்மராட்சி ஓக.16
தென்மராட்சி மேற்குப் பகுதியில் 13வயது பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் வதைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டது.
குறித்த மாணவியின் தாயாரது இரண்டாவது கணவரே இக்குற்றத்தைப் புரிந்துள்ளார் என சந்தேகம் வெளியிடப் பட்டது.
பாடசாலை விடு முறை என்பதால் மாணவி வீட்டில் தனித்து இருந்துள்ளார். தாயார் வெளியே சென்றவேளையில் சிறியதந்தை தன்னை பாலியல் வதைக்கு உட்படுத்தினார் என மாணவி சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.
சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில் பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர். (ய-9)

## துன்னாலை இளைஞன் மீது சூடு: சந்தேகநபர்களின் மறியல் நீடிப்பு

வடமராட்சி, ஓக. 16
துன்னாலை இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களின் விளக்க மறியல் நீடிக்கப்பட்டுள்ளது. அவர்கள் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான்மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.
வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் பொலிஸாரின் கட்டுப்பாட்டை மீறிச் சென்றதாக ஹன்ரர் வாகனம் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. அதில் துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய இளைஞன் ஒருவர் உயிரிழந்தார்.
ஹன்ரர் ஒன்றில் மணலுக்குள் புதைத்து கஞ்சா கடத்தப்படுவதாகக் கிடைத்த தகவலை அடுத்தே, அந்தப் பகுதியில் பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். தப்பிச் சென்ற வாகனம் மீதே துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இருவரும் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந் தனர். சந்தேக நபர்கள் நேற்று மீண்டும் பருத்தித்துறை நீதி மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிவான் சந்தேக நபர்கள் இருவரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ஜ-10-109)



# வடக்கு மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு கன்னியமர்வு நேற்று

யாழ்ப்பாணம், ஓக. 16
வடக்கு மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட புதிய பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் முதலாவது அமர்வு நேற்று நடந்தது. நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள பொதுச்சேவைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது. "வடக்கு மாகாணத்தில் அதிகாரிகளின் திறன்களை அதிகரிக்க செய்வதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டை நாம் மிகவும் எதிர்பார்க்கின்றோம்" என்று பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஸ் தெரிவித்தார். "பொதுச் சேவைகள் ஆணைக்குழு அரசியல் கலப்பற்றதாக இருக்கும் ஒரு அமைப்பு.
எதிர்காலத்தில் வடக்கு மாகாணத்தில் நிர்வாக மட்டத்தில் காணப்படும் பல பிரச்சினைகளுக்கு ஆணைக்குழுவிரைவான நடவடிக்கைகளை பாரபட்சம் இன்றி மேற்கொள்ளும். பொதுச் சேவைகள் ஆணைக்குழு முறைப்பாடுகள், தீர்மானங்கள், பரிந்துரைகளை காலம் தாழ்த்தாது முடிவுறுத்த வேண்டும் என்ற ஆளுநரின் கோரிக்கைக்கு ஏற்ப நாம் செயற்படுவது அவசியம்" என்று பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் தலைவர் முன்னாள் மாவட்டச் செயலர் பத்மநாதன் தெரிவித்தார். நிகழ்வில் ஆளுநரின் பொதுசன தொடர்பு அதிகாரி நிசாந் அல்விஸ், பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் மோகன்ராஸ், முதன்மைச் செயலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டனர். (ஜ-10-115)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 800 | 700 | 900 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 500 |
| கணவாய் | 500 | 600 | 700 | 700 |
| பாரை | 400 | 550 | 500 | 500 |
| சுறா | 600 | 700 | 800 | 900 |
| சீலா | 400 | 450 | 500 | 550 |
| விளை | 300 | 400 | 350 | 300 |
| முரல் | 300 | 350 | 350 | 300 |
| கும்பிளா | 450 | 300 | 450 | 450 |
| கிளாக்கன் | 800 | – | 600 | 600 |
| ஓரா | 400 | 350 | 300 | 400 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 280 | 150 | 400 | 200 |
| சூடை | 150 | 100 | 250 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 450 | 250 |
| மதனம் | 200 | 150 | 200 | 300 |
| கொய் | 150 | 50 | 80 | 50 |
| பாலை | 1200 | 200 | 500 | 300 |
| வாழை | 150 | 200 | 400 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 80 | 70 | 60 | 70 |
| கத்தரி | 80 | 80 | 90 | 70 | 80 |
| மரவள்ளி | 70 | 60 | 50 | 60 | 50 |
| பயிற்றை | 120 | 130 | 150 | 100 | 130 |
| பாகல் | 160 | 120 | 200 | 160 | 200 |
| க.கிழங்கு | 120 | 130 | 140 | 130 | 100 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 150 | 170 | 150 | 160 | 140 |
| பூசணி | 90 | 60 | 50 | 50 | 70 |
| தக்காளி | 120 | 110 | 130 | 140 | 130 |
| வாழைக்காய் | 80 | 90 | 70 | 60 | 60 |
| கீரை | 20 | 20 | 25 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 20 | 30 | 20 |
| ப.மிளகாய் | 280 | 290 | 350 | 290 | 280 |
| புடோல் | 90 | 80 | 60 | 100 | 80 |
| கோவா | 100 | 140 | 130 | 100 | 100 |
| வெண்டி | 90 | 80 | 80 | 100 | 60 |
| போஞ்சி | 100 | 150 | 130 | 160 | 150 |
| லீக்ஸ் | 100 | 100 | 90 | 100 | 90 |
| தேங்காய் | 60 | 60 | 70 | 70 | 60 |
| உ.கிழங்கு | 90 | 110 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 50 | 60 | 70 | 50 | 50 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 10 |
| கறிமிளகாய் | 140 | 150 | 150 | 160 | 150 |
| கரட் | 160 | 180 | 190 | 270 | 200 |
| முருங்கைக்காய் | 80 | 90 | 50 | 20 | 30 |



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவின் 19ஆவது நாளான நேற்றுக் காலை சூர்யோற்சவம் நடைபெற்றது. சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் விதமாக சூர்யோற்சவ விழா நடைபெற்றது. இதன் போது ஏழு குதிரைகள் பூட்டிய தேரில் சூரிய பகவான் வீதியுலா வந்தார். திருவிழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்துகொண்டனர். (ஐ)

## நாட்டுக் கூத்து நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக.16

பாசையூர் புலவர் இன்னிசைக் கவமணி பெஞ்சமின் கிறிஸ்தோப்பரின் நாட்டுக் கூத்து நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 3.30 மணிக்கு பாசையூர் பங்கு மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கலாபூஷணம் பி.யூல்ஸ் கொலின் தலைமையில் இடம்"பெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தேசிய ஒன்றிணைப்புக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சேதியும், சிறப்பு விருந்தினராக சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி இமல்டா சுகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (21- 23)

## நல்லூர் பஜனையில் பங்குகொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஒக. 16

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் யாழ். சின்மயா மிஷன், பள்ளிக்கூட மாணவர்கள் மற்றும்அறநெறிப்பாடசாலைமாணவர்களைஇணைத்து காலை, மாலை இரு நேரமும் சுவாமி வீதி உலா வரும் போது பஜனை செய்து வருகின்றனர்.

இது தொடர்பான கூட்டம் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெற்றபோது பங்கு பற்றத் தவறிய பள்ளிக்கூட நிர்வாகத்தினர் மற்றும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், இப் பஜனையில்தமதுபாடசாலைமாணவர்களைஇணைத்தும் கொள்ளலாம். விரும்பினால் 077 337 8665 மற்றும் 077 691 4170 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களை அறிந்து, தங்களுக்கான தினத்தைப்பதிவு செய்து அந்தத் தினத்தில் பங்கு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டது. (4)

## நல்லூரில் ஏ.ரி.எம்.

ஏரிஎம் இயந்திரத்துடனான தேசிய சேமிப்பு வங்கியின் சிறப்பு கருமபீடம் ஒன்று நல்லூர் முன்சாலையில் யாழ். மாநகர சபைக்கட்டடத்துக்கு அண்மித்து அமைக்கப்பட்டுள்ளது. காலை 8 மணி தொடக்கம் இரவு 8.30 மணி வரையில் இது இயங்கி வருகிறது என்று கொடிகாம தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (4)

## நல்லூர் கைலாச வாகனத் திருவிழா

### திருமுருகாற்றுப்படை

யாழ்ப்பாணம், ஒக. 16

நல்லூர் கந்தசுவாமிகோயில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பாசுவாமிகள்நினைவாலயத்தில் இன்று திருமுருகாற்றுப்படை எனும் பொருளில் சொற்பொழிவு இடம்பெறும்.

யாழ். கதிர் கலையகத்தின் ஏற்பாட்டில் வண்ணை வீரமாகாளி அம்பாள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சொற்பொழிவை வே.சிவகுருநாதன் நிகழ்த்தவுள்ளார். கந்தபுராண தொடர் சொற்பொழிவை பண்டிதர் சைவப்புலவர் பொ.சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (4)

+++++++++++++++++++++++

### இசைக்கச்சேரி

யாழ்ப்பாணம், ஒக. 16

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இன்று மாலை 6.45 தொடக்கம் 8 மணி வரை இசைக்கச்சேரி இடம்பெறும்.

தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நடத்தும் இந்தத் தெய்வீக இசையரங்கில் வயலின் சு.கோபிதாஸும், துவாரகி சுரேஸ்குமாரும் மிருதங்கம் வி.ரமணாவும் கடம் கே.ரவிசங்கரும் கெஞ்சிரா நா.சிவசுந்தரசர்மாவும் முகர்சிங் சி.செந்தூரனும் இசைக்கவுள்ளனர். (4)

+++++++++++++++++++++++

### கந்தபுராண எழுச்சி

யாழ்ப்பாணம், ஒக. 16

"கந்தபுராண கலாசாரம் இந்த மண்ணின் அடையாளம்" தொனிப்பொருளிலான நிகழ்வில் இன்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் தலைவருமான விடைக்கொடிச் செல்வர் சின்னத்துரை தனபாலா கலந்து கொள்ளவுள்ளார்.

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவில் கந்தராண வாழ்வியல் தொடர்பான விழிப்புணர்வை மேம்படுத்தும் கந்தபுராண எழுச்சிவிழா இன்று மாலை 6.30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப்பணிப்பாளர் இ.கர்ஜின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும் . (4)

+++++++++++++++++++++++

### நாடகத்திருவிழாவில் மூன்று நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஒக.16

செயற்றிறன் அரங்க இயக்கம் வழங்கும் நல்லூர் நாடகத்திருவிழாவில் இன்று புதன்கிழமை மாலை மூன்று நாடகங்கள் அரங்கேறுகின்றன. தே.தேவானந்தின் பசுவும் புலியும், மாயச் சங்கு ஆகிய சிறுவர் நாடகங்களும், ஏகாந்தம் எனும் வேடமுக நாடகமும் அரங்கேறுகின்றன. நல்லூர் கந்தன் திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நாடகத் திருவிழா கடந்த 10 ஆம் திகதி முதல் நல்லூர் குறுக்கு வீதியில் பாணண் குளத்துக்கு முன்பாக அமைந்துள்ள செயற்றிறன் அரங்க இயக்கத்தின் பஞ்சபூத அரங்கில் இடம்பெற்று வருகின்றன. (21)

+++++++++++++++++++++++

### சங்கீத கதாப்பிரசங்கம்

யாழ்ப்பாணம் நல்லூர் கந்த சுவாமி ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் சைவமகா சபையின் ஏற்பாட்டில் " சங்கீத கதாப்பிரசங்கம்" கடந்த 6ஆம் திகதி முதல் இடம்பெறுவருகின்றது. இதனை கான கதா வாரிதி கலாபூஷணம் பிரம்மஸ்ரீ சிவ. வை. நித்தியானந்தசர்மா நிகழ்த்திவருகிறார். தினமும் நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் மாலை 6.30 மணி தொடக்கம் 8 மணிவரை நிகழ்வு இடம்பெறும் 11ஆம் நாளான இன்று புதன் கிழமை கம்பராமாயணத்தின் "அனுமன் தூது " எனும் பகுதி இடம்பெறவுள்ளது. என அறிவிக்கப்பட்டது. (21,ரி)

## அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம்,ஒக.16

ஏழாலை அருள்மிகு சிவபூதவராயர் ஆலய அலங்காரத்திருவிழா நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 26 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. தினமும் மாலை 6.30 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் இரவு 7.45 க்கு வசந்தமண்டபப் பூசையும் நடைபெறவுள்ளது. எதிர்வரும் 27ஆம் திகதி மு.ப. 10 மணிக்குச் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து அன்னதான நிகழ்வும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது. (21)



# அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுகள் ஜனநாயகப் பண்புகளை மீறும் செயல்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கண்டனம்

யாழ்ப்பாணம் ஓகஸ்ட் 16

வடக்கு மாகாணசபை அமைச்சுக்கள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படாத நிலையில் பதவி விலகக்கோருவதை ஜனநாயகப் பண்பியல்புகளைமீறுகின்றசெயற்பாடுகளாகவேகருதுகிறோம் என ஜனநாயக போராளிகள் கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பில்கட்சியினர் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்கில் இடம்பெறும் பதவிசார் அரசியல்பூசல்கள் தாயகத்தில் இதுவரை செய்யப்பட்ட எண்ணிலடங்கா தியாகத்தின் மீது சேற்றை வீசுவதற்கு சமனானது. மக்கள் பொருண்மியம், தாயக நலன் பற்றிய பொறுப்புணர்வு இல்லாமல் முதலமைச்சர்தன்னிச்சையாக நடந்து கொள்வதாகவே நாம்கருதுகிறோம்.

மக்களின் வாழ்வியல், பண்பாட்டியல் மற்றும் அரசியல் எழுச்சிக்கு வித்திடாமல் வெறும் அமைச்சரவைக்கானவாதப்பிரதிவாதங்களால்மிச்சமுள்ள காலத்தைக் கடத்த முதலமைச்சர் அடங்கிய வடமாகாணசபைமுயற்சின்றது.

இதுமிகவும்கடுமையான போர்விளைவுகளை எதிர்கொண்டு மீட்சிபெற முயற்சிக்கும்எமது இனத்திற்குஎதிரானசெயற்பாடு.

குறிப்பாக வடக்கு மாகாண அமைச்சர் பாலசிங்கம் டெனீஸ்வரனை பதவிவிலகநிர்ப்பந்திப்பது ஜனநாயக மற்றும் அதனடிப்படையிலானபொறிமுறைகள் மீது கைவைப்பதற்கானமுதலமைச்சரின் முயற்சியாகஇருக்குமோ என்றசந்தேகம்வலுத்துள்ளது. இதற்குகாரணமான சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றன.

கடந்தகாலச் செயற்பாடுகளில் பா.டெனீஸ்வரன் மாவீரர் போராளிகளது குடும்ப பொருண்மிய மேம்பாடுமற்றம்சமூகஅபிவிருத்தி செயற்பாடுகளைஇந்தநேரத்தில்நன்றியுடன்நினைவில்கொள்கின்றோம்.

அவருக்கெதிராக ஜனநாயகவிழுமியங்களைமீறி எடுக்கும் நடவடிக்கைகளைவன்மையாககண்டிக்கின்றோம். அத்துடன் அவரது தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு ஜனநாயகப்போராளிகள்கட்சி தனது ஆதரவினையும் தெரிவிக்கின்றது.

வாக்களித்த மக்களின் ஜனநாயகஉரிமைகளுக்காக மக்களை அணிதிரட்டி தாயக ஜனநாயகத்திற்கான மாபெரும் மக்கள் போராட்டங்களை முன்னெடுக்கும் சந்தர்ப்பங்களை எமக்கு ஏற்படுத்த வேண்டாம்.

சட்டம் மற்றும்ஜனநாயக விழுமியங்களை மதித்து வடக்குமாகாணசபையும் அதன் தலைமைத்துவமும்பயணிக்குமா? என்ற நியாயப்பாடானசந்தேகம் உள்ளது.

மக்கள் பணியை நிறைவேற்றாத மாகாணசபையாக வரலாற்றில் இடம்பிடிப்பதற்கானமுயற்சியில், வடக்கு முதல்வர் 'எடுத்தாற்கைப்பிள்ளை' போல் செயற்படுகின்றார். இது ஜனநாயகமுறைமைக்கு திரும்பி யுள்ள எமக்கும் தாயகமக்களுக்கும்வருத்தமளிக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ய-106)

## சுன்னாகம் இளைஞர் கொலைவழக்கு

# சிந்தக்க உள்ளிட்ட பொலிஸாருக்கு யாழ்.மேல் நீதிமன்று பிணை மறுப்பு

யாழ்ப்பாணம், ஓக.16

சுன்னாகம் இளைஞர் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சுன்னாகம் பொலிஸ்நிலைய முன்னாள் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 5 பேரின் பிணைமனு நிராகரிக்கப்பட்டது.

குறித்த 5பேர் சார்பிலும் சட்டத்தரணி மொஹமட் அக்மல் யாழ்ப்பாணமேல்நீதிமன்றில்பிணைமனுத்தாக்கல் செய்திருந்தார். அது நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த வியாழக்கிழமை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டது.

பிணைவழங்கஅரசசட்டத்தரணிநிஷாந்நாகரட்ணம் ஆட்சேபனைதெரிவித்தார். அதனால்பிணைநிராகரிக்கப்பட்டது.

சுன்னாகத்தைச் சேர்ந்த சுமணன் என்ற இளைஞர் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்டுபொலிஸ்நிலையத்தில்வைத்துச்சித்திரவதைசெய்யப்பட்டுக்கொல்லப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

பின்னர் இரணைமடுக் குளத்திலிருந்து சுமணனின் சடலத்தை மீட்டதாகப் பொலிஸார் கூறியிருந்தனர்.

குற்றச்சாட்டில்சுன்னாகம்பொலிஸ்நிலையமுன்னாள் பொறுப்பதிகாரி சிந்தக்க பண்டார உள்ளிட்ட 8 பொலிஸார் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு எதிரான சித்திரவதை வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் விசாரிக்கப்பட்டு 6 பேர் குற்றவாளி களாக அறிவிக்கப்பட்டு10 வருடங்கள் கடூழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவர்களில் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீதுகொலைக்குற்றமும்சாட்டப்பட்டிருக்கிறது. அவர்கள் மீதான வழக்கு கிளிநொச்சி நீதிமன்றில் விசாரணை நிறைவடைந்து சட்டமா அதிபர் திணைக்களத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

(ய-4)

# முச்சக்கர வண்டிகளுக்கு வடக்கிலும் மீற்றர் மானி

யாழ்ப்பாணம் ஓகஸ்ட் 16

வடக்குமாகாணத்தில்உள்ளமுச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் மானி பொருத்துவதற்கான பரீட்சார்த்த வேலைத்திட்டம் மிக விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளதாக வடக்கு மாகாண வீதிப்பயணிகள் அதிகார சபையின் தலைவர் அ.நீக்லஸ்பிள்ளை தெரிவித்தார்

வடக்கு மாகாணத்தில் முச்சக்கரவண்டிகளுக்கான கட்டண அறவீட்டுமுறையில்இடத்திற்கிடம்மாறுபட்ட நிலை காணப்படுகின்றது. சாரதிகள் தாம் நினைத்தவாறு பயணிகளிடம் கட்டணம் அறவிடுவதுண்டு. இதனால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அவசரத்திற்கு ஒரு பயணம் செய்வதானாலும்கூட பேரம் பேசுதலிலேயே அதிக நேரத்தைச் செலவளிக்க வேண்டும்.

கட்டணவிவகாரத்தில்சாரதிகள்மற்றும் பயணிகளிடையே ஏற்படும் தர்க்கம் கைகலப்புவரை கூட சென்றுள்ள சந்தர்ப்பங்களும் உண்டு. இதனால்நாட்டின் ஏனைய இடங்களைப்போன்றுவடக்குமாகாணத்திலும் முச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர்கள் பொருத்தப்பட வேண்டும் என பொதுமக்கள் கோரிவந்தனர்.

இந்தநிலையில்,

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குமாகாணத்தில்உள்ளமுச்சக்கரவண்டிகளுக்கு மீற்றர் மானிகள் பொருத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கான மனிகள் கொழும்பு நிறுவனத்தில் இருந்து பெறப்பட்டுள்ளன. அவ்வாறு பெறப்பட்டுள்ள மானிகளை முச்சக்கரவண்டிகளில் பொருத்தி பரீட்சிக்கும் நடவடிக்கையை மிகவிரைவில் மேற்கொள்ள திட்டமிட்டுள்ளோம்.

எமது மாகாணத்தைப் பொறுத்தவரையில்ஏனைய மாகாணங்களில் முச்சக்கரவண்டிகளுக்கு உள்ள நடைமுறைகள் போன்று நாமும் சில ஒழுங்குபடுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

பொதுவாக நாம் போக்குவரத்து சார்ந்த விடயத்தில் பொதுமக்களுக்கும், போக்குவரத்துத் துறையினருக்கும் பாதிப்பு ஏற்படாத வகையிலேயே திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய தேவை இருக்கின்றது.

தனியார் பேருந்தினரையும், இலங்கை போக்குவரத்து சபையினரையும் ஒருங்கிணைத்து இணைந்த நேர அட்டவணை ஊடாக சீரான போக்குவரத்து சேவையை வழங்க முயற்சித்து வருகின்றோம்.

அதேபோல முச்சக்கரவண்டி ஓட்டுநர்களையும் நாம் இணைத்து மீற்றர்மானிதிட்டத்தைநடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த திட்டத்தை நாம் பல சவால்களுக்குமத்தியிலேயேமுன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

இதேவேளை, வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சில் கடந்த மார்ச்மாதம் இடம்பெற்ற அமைச்சுமட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில்முச்சக்கரவண்டிகளுக்குமீற்றர் மானிகளைப் பொருத்த நடவடிக்கைஎடுக்கப்படும்எனதீர்மானிக்கப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது.

(ய-8)




## 20ஆம் திருவிழா

### முருகா வருவாயா வரம் தருவாயா

கார்த்திகை வேலவா
உனைக் காண கோடி
கண் வேண்டும் அல்லவா
காவடி முருகையா
நீ ஆடிவரும் அழகை
வர்ணிக்க கவிதை
ஏதையா கந்தா
உன் இருப்பிடம் நான்
தேடிவரும் என்னை
நீ உளம் கனிந்து வரம்
தருவாயா கதிர்வேலா
உன் திருவடியதை
நாம் தொட்டு வணங்க
எம் உள்ளம் குதூகலம்
ஆனதையா !

*சுபானுஜன், தெல்லிப்பழை.*

### நல்லூர் குமரனின் கோல எழிலைக் காண கோடி கண்கள் வேண்டுமய்யா

தங்கத் தேரேறும் வள்ளி
மணவாளன் கோல
எழிலைக்காண
அருள் நல்லையம்பதி
மண்ணை நாடு மனமே
சித்தர்கள் தடம்பதித்த நல்லை
மண்வீதியிலே
பக்தர்கள் எழில் பொங்கி
தொழுதிட பலரங்கு
அடுதிடுவர்
தூக்குக் காவடிகள் ஆடி வந்து
பரவசமாய் மெருகூட்ட
காண்டா மணி ஓசை முருகா
முருகா என்று எதிரொலிக்கும்
கோடி கண்கள்
வேண்டுமய்யா குமரன்
எழிலைக்காண
கொடுத்து வைக்க வேண்டும்
கந்தன் திருவருளைப் பெற
இருள் கொண்ட வாழ்வின்
துன்ப துயரங்கள் நீங்க
அருள் கொண்ட வேலன் வடம்
தொட்டிழுப்போம் வாரீர்

*கலாவித்தகர் கலைமாமணி*

### நலமெலாம் அருள்வாய் நாயகனே

திக்கெட்டும் புகழ்பரப்பும்
நல்லூர் பதிநாயகனே
மஞ்சத்தில் பவனி வருக
தீந்தமிழால் உன் புகழ் பாடிய
ஔவைக்கு அருள் புரிந்தவளே
மஞ்சத்தில் பவனி வருக
ஞானச் செருக்குடைய நாதர்க்கு
ஓம் எனும் பொருள்
உரைத்தவனே மஞ்சத்தில்
பவனி வருக
ஞானப் படித்திற்காய்
போட்டியிட்டு
ஆண்டியாய் பழனியில்
நின்றவனே மஞ்சத்தில்
பவனிவருக
உன்னை நாடி வந்த பக்தர்கள்
துயர் தீர்த்திட
நலமெல்லாம் அருள்வாய் ஞான
நாயகனே மஞ்சத்தில் பவனி
வருக

திருமதி மலர்விழி கனகசபை




## இரும்புச்சத்து உடலுக்கு தரும் நன்மைகள்

- சோம்பல் இல்லாத சுறுசுறுப்பான இயக்கம்.
- ஞாபக சக்தியையும் நுண்ணறிவு விருத்தியையும் அதிகரிக்கும் உள விருத்தியை அதிகரிக்கும்.
- நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும.
- குருதிச் சோகையை தடுக்கும்.
- இரும்புச் சத்து அகத்துறிஞ்சலை தேனீர், கோப்பி, சோடா போன்ற பானங்கள் குறைக்கும்.

*தகவல்*
*சு.ம.அ.பணிமனை,*
*யாழ்.மாநகர சபை.*



# சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்ட பயனாளிகளின் விண்ணப்பங்கள் மீளாய்வு

யாழ்ப்பாணம், ஓக.16
சமுர்த்தி நிறுத்தப்பட்டவர்களின் விண்ணபங்களை மீளாய்வு செய்யும் பணிகள் ஆரம்பிக்கபட்டுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட சமுர்த்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:
சமுர்த்திப் பயனாளிகளின் தெரிவுதொடர்பாக பல்வேறு குழப்ப நிலைகள் காணப்பட்டு வருகின்றன. இந்த நிலையில் சமுத்திப் பயனாளிகளின் கொடுப்பனவுகள் இல்லாமல் ஆக்கப்பட்டது தொடர்பாக மக்கள் பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்களை முன்னெடுத்துள்ளனர். எனவே அவர்களின் விடயம்கருத்தில்கொள்ளப்பட்டது.

அரசு சமுர்த்தி உதவியை நிறுத்திவிட்டது என்று மக்களால் கூறப்பட்டு வருகின்றது. ஆனால் சமுர்த்தி பயனாளிகளின் இவ்வாறன நிலைக்கு நடைமுறையில் சில தவறுகள் நடந்திருக்கலாம் என்ற காரணத்தினால், சமுர்த்திக் கொடுப்பனவு நிறுத்தப்பட்டவர்களின் நன்மைகருதி அவர்களின் விண்ணப்பங்கள் மீள்பரி சீலனை செய்யும் நடவடிக்கை தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கான விண்ணப்படிவம் நிரப்பும் பொழுது, பிரதேசத்தில் உள்ள சமுர்த்தி உத்தியோகத்தர்களின் உதவியுடன் அவை நிரப்பப்பட்டிருந்தால் இவ்வாறான தவறுகளைக் குறைத்திருக்கலாம்.

குறிப்பாகச் சமுர்த்திப் பயனாளிகளின் தெரிவு விண்ணப்பத்தில் மாதவருமானம் தொடர்பான தொகை உள்ளடக்கப்படவேண்டும்.

பயனாளிகள் இந்தப் படிவத்தை நிரப்பும் பொழுது மாத வருமானத்துக்கு குறிப்பிட்ட தொகையையும், அந்த வருமானத்தின் ஊடான செலவில் வருமானத்தைவிட அதிகமான செலவீனத்தையும் குறிப்பிட்டு தவறாக நிரப்பியுள்ளனர். இந்த விடயங்கள் யாவும் கணினி மயப்படுத்தும்போது சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம்.

இவைபோன்ற சில காரணத்தினால் நாம் சமுர்த்தி கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்ட மக்களிடம் மறுபரிசீலனை விண்ணப்பங்களைக் கோரியுள்ளோம். மக்கள் அதனை அவர்களின் பிரதேச செயலகத்தின் ஊடாக விண்ணப்பிக்க முடியும்.

ஆனால் இவ்வாறு மறுபரிசீலினை செய்யப்பட்டு பிழைகள் திருத்தப்பட்டாலும் இம்முறை இவர்களுக்கான சமுர்த்திக் கொடுப்பனவுகள் வழங்கலில் உள்வாங்கப்பட மாட்டார்கள்.

அடுத்த முறைக்கான கொடுப்பனவில் உள்வாங்கப்படலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# மானிய விலையில் கோழிக்குஞ்சுகள்

யாழ்ப்பாணம், ஓஓ.16
வடக்கு மாகாண மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பொருட்டு மானிய விலையில் கோழிக்குஞ்சுகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.
வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பண்ணைகளில் வளர்க்கப்படும் கொல்லைப்புறக் கோழிக்குஞ்சுகள் பொது மக்களுக்கு மானிய விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. பொதுவாக வெளியிடங்கில் உள்ள பண்ணைகளில் புறையிலா் இன கோழிக்குஞ்சுளே அதிகளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தவகை குஞ்சுகளை இறைச்சிக்காக மட்டுமே வளர்க்க முடியும்.

ஆனால் கொள்ளைப்புறக் கோழிக்குஞ்சுகள் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்னர் முட்டையிடும். எனவே புறொயிலர்; குஞ்சுக ளைக் வளர்ப்பதை விட கொல்லை ப்புற கோழிக்குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதன் ஊடாக முட்டை வியாபரத்தை யும் மேற்கொள்ள முடியும்.

எமது பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிக்குஞ்சு ஒன்று 75 ரூபாக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. எமது திணைக்கள பண்ணையில் இதனைப் பெற்று வளர்ப்பில் ஈடுபடும் பயனாளிகளுக்கு எம்மால் மருத்துவ உதவிகள், உதவித் திட்டங்கள் போன்றனவும் வழங்கப்படுகின்றன.

சில அரசசார்பற்ற நிறுவனங்கள் எமது திணைக்களத்தில் கோழிக்குஞ்சுகளைப் பெற்று வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை செய்து வருகின்றன. இந்த உதவித் திட்டங்கள் ஊடாக முட்டை உற்பத்தியை அதிகரிக்க முடிவதுடன். பயனாளிகளும் தமது வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடிகின்றது.

எனவே, பண்ணை வளர்ப்பு ஊடாக வாழவாதரத்தை பெருக்க விரும்பும் பயனாளிகள் அவர்களின் பிரதேசங்களில் உள்ள கால்நடை உற்பத்தி சுகாதார தினணக்களங்கள் ஊடாக தமக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளைப் பெற்றுக்கொண்டு பயனடைய முடியும்.

அவ்வாறு பண்ணை வளர்ப்பாளர்களுக்கு நாம் ஆலோசனைகளையும், தொழில் நுட்பஉதவிகளையும்வழங்க முடியும் என்றார். (ய,8)

## வவுனியாவில் அரச பங்களா கேட்கிறார் அமைச்சர் ரிசாத்

வவுனியா, ஓக.16
வவுனியா மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான பங்களாக்களில் ஒன்றை தொடர்ந்தும் பயன்படுத்த அனுமதிக்குமாறு அமைச்சர் ரிசாத்பதீயுதீன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிடம் எழுத்தில் கோரியுள்ளார்.

வவுனியா மாவட்டச் செயலகத்தின் மூன்று பங்களாக்கள் நீண்டகாலமாக மூன்று அரசியல்வாதிகளின் பாவனையில் உள்ளன. சுமார் 20 வருடகாலம் வரையிலான வாடகைப்பணமும் மாவட்டச் செயலகத்துக்கு வழங்கவேண்டிய நிலுவையில் உள்ளது.

இந்தநிலையில். 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாத மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குறித்த மூன்று பங்களாக்களையும் மாவட்டச் செயலகத்திடம் ஒப்படைக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

இதன் பிரகாரம் மூன்று விடுதிகளையும் உடன் மாவட்டச் செயலகத்திடமே ஒப்படைக்குமாறு மாவட்டச்செயலகம் கோரிக்கை விடுத்திருந்தது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தனது பாவனையில் உள்ள விடுதிக் கட்டிடத்தை மீள எடுத்துக்கொள்ளலாம் என மாவட்டச் செயலாளருக்கு எழுத்தில் அறிவித்திருந்தார்.

தற்போது அமைச்சர் ரிசாத் பதியுதீன் அமைச்சிடம் அனுமதிகோரி விண்ணப்பித்துள்ளதோடு, அதன் பிரதியை மாவட்டச் செயலகத்துக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

இதேநேரம் மூன்றாவது கட்டடம் ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் செயலாளர் சிவசக்தி ஆனந்தனிடம் உள்ளது. அந்தக் கட்டடத்திலேயே அவரின் கட்சி அலுவலகம் இயங்குகின்றது.

அதனை மீளக் கையளிப்பதற்கு அவர் மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (ய-101)

## மாகாண கலாசார நிகழ்வுகளில் வடக்குக் கலைஞர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படுகிறது

### *அமைச்சின் செயலர் கூறுகிறார்*

யாழ்ப்பாணம் ஓக.16
வடக்கு மாகாணத்தில் உள்ள இசைக் கலைஞர்களுக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டே வடக்கு மாகாணத்தின் பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் கலை கலாசார நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ. இரவீந்திரன் தெரிவித்தார்.

வடக்கில் கல்வி அமைச்சு முன்னெடுக்கும் கலாசார நிகழ்வுகளுக்கு இந்தியாவிலிருந்து கலைஞர்களை அழைத்துவந்து நிகழ்ச்சிகளை முன்னெடுக்கின்றனர். வடக்கிலுள்ள கலைஞர்களை வடக்கு கலாசார அமைச்சுக் கண்டுகொள்வதில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. தவிர இந்தியக் கலைஞர்களை அழைத்து வந்து நிகழ்வுகளை நடத்துவதற்கு வடக்கு கலாசார அமைச்சின் பல லட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வவுனியாவில் இசை நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது. இதுதொடர்பில் கேட்டபோதுதே செயலர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,
எமது மாகாணத்தில் பல்வேறு கலைத்துறைகளில் பாண்டித்தியம் பெற்ற இசைக் கலைஞர்கள் உள்ளனர். அவர்களை நாம் புறக்கணிப்பது இல்லை. எமது அமைச்சு சார்பான கலாசார நிகழ்வுகளில் நாம் அவர்களை உள்ளவாங்காமல் வெளிநாட்டுக் கலைஞர்களை மாத்திரம் உள்வாங்கி நிகழ்வுகளை நடத்துவது இல்லை. எமது மாகாணத்தில் உள்ள இசைக்கலைஞர்களின் திறமைகளை நாம் முன்னுக்குகொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

வெளிநாட்டில் இருந்து கலைஞர்களைக் கொண்டு வருவதற்குக் காரணம் அவர்களிடம் இருந்து எமது கலைஞர்கள் நிறைய விடயங்களை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே. அத்துடன் நட்பு ரீதியான தொடர்புகளும் கிடைக்கும். அவர்கள் எமது மாகாணத்துக்கு நிகழ்ச்சிகளைச் செய்வதற்கு ஆர்வமாக உள்ளனர் என்பதால் அவர்களை இங்கே அழைக்கின்றோம்.

வவுனியா ஸ்ரீகந்தசுவாமி ஆலய மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை இசை நிகழ்வொன்று நடைபெறவுள்ளது. அதனை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத் தூதரகமே ஏற்பாடு செய்துள்ளது.

அதில் வடக்கு கலாசார அமைச்சின் நீதி செலவிடப்படவில்லை. எமது அமைச்சு கலாசாரத்தை வளர்க்கும் நோக்கில் நிகழ்வுகளை ஒன்றிணைத்து நடத்துகிறது. இந்த நிகழ்விலும் எமது கலைஞர்கள் புறக்கணிக்கப்படவில்லை. எமது மண்ணின் நாதஸ்வர வித்துவான் கெ.பி. குமரனின் சிறப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது - என்றார். (ய-4-ரி)

# மன்னாரின் ஆறு பாடசாலைகள் விரைவில் புத்தளத்துடன் இணைப்பு

மன்னார், ஓக.16
புத்தளத்தில் இயங்கும் மன்னார் மாவட்டப் பாடசாலைகள் அனைத்தையும் நிரந்தரமாக புத்தளத்துடன் இணைக்கும் நடவடிக்கை விரைவுபடுத்தப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்தீரன் தெரிவித்தார்.

ஆறு வடக்கு மாகாணப் பாடசாலைகள் புத்தளத்தில் இயங்கி வருகின்றன. அவற்றை நிரந்தரமாக புத்தளத்துடன் இணைப்பதற்கான பேச்சுகள் இடம்பெற்றபோதும் அதற்கான பணிகள் இடம் பெறவில்லை.

இதுதொடர்பில் கேட்டபோதே இதனைத் தெரிவித்தார்.

மன்னார் கல்விவலயத்தின் கீழ் வரும் ஆறு பாடசாலைகள் தற்போது வரையில் புத்தளத்தில் இயங்குகின்றன. அவ்வாறு இயங்கும் பாடசாலைகளை மீளத் திருப்புமாறு பல தடவை கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் அவை திருப்பப்படாத காரணத்தினால் அவற்றை நிரந்தரமாகவே புத்தளம் மாவட்டத்துடன் இணைக்க நடவடிக்கை எடுக்கப் பட்டது.

இவ்வாறு நீண்டகாலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக அப்பாடசாலைகளை வடமேல் மாகாண கல்வி அமைச்சின் கீழ் இணைப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. அவ்வாறு காணப்பட்ட இணக்கத்தின் அடிப்படையில் 6 பாடசாலைகளையும் அங்கே கற்பித்தல் படணியில் உள்ள ஆசிரியர்களையும் நிரந்தரமாகவே வடமேல் மாகாணத்துடன் இணைக்கும் பணிகள் இடம்பெறுகின்றன.

இருப்பினும் குறித்த பணிகள் இந்த ஆண்டின் ஒக்டோபர் மாதத்திலேயே முழுமைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. என்றார்.

குறித்த பாடசாலைகளில் மட்டும் சுமார் 160 ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் புத்தளம் மாவட்டத்தின் பல இடங்களிலும் செறிந்து வாழ்கின்றனர். மன்னார் கல்விவலயத்தைச் சேர்ந்த சில பாடசாலைகள் அங்கு இயங்கத் தொடங்கின.

இடம்பெயர்ந்த மக்கள் சுமார் 25 வருடங்களுக்கும் மேலாக மிகநீண்ட காலமாக அங்கு வாழ்ந்து வருகின்றனர்.

வடக்கில் போர் முடிவுக்கு வந்து மக்கள் மீள்குடியமர்ந்து வருகின்ற போதிலும், புத்தளத்தில் நீண்டகாலம் வசித்துவந்த மக்கள் அப்பிரதேசத்தை விட்டு வருவதற்கு விருப்பம் தெரிவிக்கவில்லை. எனவே இதனையடுத்து அங்கு இயங்கிவரும் பாடசாலைகளை புத்தளம் மாவட்டதுடன் இணைப்பது எனத் தீர்மானிக்கட்டுள்ளது.

(ய.101)

# தமிழ் - சிங்கள உறவுக்கு வலுவூட்டும் அரசு தமிழ் - முஸ்லிம் இணக்கத்துக்கு என்ன செய்தது?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் கூட்டு அரசின் இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா

கொழும்பு, ஓக. 16

போருக்குப் பின்னர் தமிழ் சிங்கள மக்களிடையேயான உறவை மேம்படுத்த பல்வேறு வேலைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டது. போரால் விரிசலடைந்த தமிழ் முஸ்லிம் உறவைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறு கவலை வெளியிட்டிருக்கிறார் மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லா.

காத்தான்குடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

30 வருட கால பயங்கரவாத போர் நாட்டின் நிலையான சமதானத்தை சீர்குலைத்தது. போர் நிறைவடைந்த பின்னரும் அது சரியான முறையில் நிலைநாட்டப்படவில்லை. அதற்கான முயற்சிகள் இன்று வரை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழலில், இனவாதம் சமூக வலைத்தளங்கள் ஊடாக மிக மோசமான முறையில் பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் சட்டதிட்டங்கள் எம்மத்தியில் இல்லாமல் இருக்கின்றன. இனவாதத்தை பரப்பி சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதன் மூலம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற சிலர் முயற்சி செய்து வருகின்றனர். கிழக்கு மாகாணத்திலும் இந்த நிலை உருவாகியுள்ளமை மிகவும் கவலைக்குரியதாகும்.

தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையில் பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதன் ஊடாக தமது அரசியல் அபிலாசைகளை அடைந்து கொள்ள சிலர் முனைகின்றனர். தேங்காய் பூவும் பிட்டும் போல் இருந்த தமிழ் முஸ்லிம் மக்களிடையே தற்போது பெரிய விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனைச் சீர் செய்து பழைய நிலைக்கு இரு சமூகங்களுக்கிடையிலான உறவை கொண்டு செல்வதற்கு சமூக தலைவர்கள், அரசியல்வாதிகளுக்கு பெரிய பொறுப்புள்ளது.

போருக்குப் பின்னர் தமிழ் சிங்கள மக்களிடையேயான உறவை மேம்படுத்த பல்வேறு வேலைகள் அரசால் முன்னெடுக்கப்பட்டன. போரால் விரிசலடைந்த தமிழ் முஸ்லிம் மக்களிடையிலான உறவை பலப்படுத்துவதற்கான முயற்சிகள் சரியான முறையில் மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (5)

### பரீட்சை மண்டபத்தில்

## மதுமயக்கத்திலிருந்த பொலிஸார் பணியிலிருந்து தூக்கப்பட்டார்

கொழும்பு, ஓக. 16

நடைபெற்றுக் கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பாதுகாப்புப் பணியில் மதுபோதையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

வென்னப்புவ கல்வி வலயத்துக்குட்பட்ட கட்டுகேந்த சங்கபோதி வித்தியாலய மண்டபத்தில் பணியிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மதுபோதையில் இருப்பதாக தங்கொட்டுவ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் கொடுக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸ் பொறுப்பதிகாரி அவரை அண்மையில் இருந்த மருத்துவமனையில் பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

மதுபோதையில் இருந்ததாக மருத்துவர் உறுதி செய்ததையடுத்து உடனடியாக அவரது பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டது. (5)

## பாதகமற்ற வெளிநாட்டு வர்த்தகம் தவறில்லை

### சமல் ராஜபக்ச கூறுகிறார்

கொழும்பு, ஓக. 16

நாட்டுக்குப் பாதகமற்ற வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளில் தவறில்லை என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

சூரியவெள பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

'அவ்வாறான வெளிநாட்டு வர்த்தக நடவடிக்கைகளை நாம் எதிர்க்கவோ அல்லது தடுக்கவோ இல்லை. எனினும் அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பில் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கை நாட்டுக்கு பாதகமானது' என்று குறிப்பிட்டார். (5)

## மரண அறிவித்தல்கள்

### இராசரத்தினம் பாலச்சந்திரன் (பத்தர்)



"மலர்வாசம்", மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், 26/27, பூநாறி வீதி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை வதிவிடமாகவும் கொண்ட இராசரத்தினம் பாலச்சந்திரன் 14.08.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா இராசரத்தினம் - பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை - பூபதி தம்பதிகளின் அன்பு மருமகனும், இன்பஜோதியின் அன்புக் கணவரும், ஜெயமலர், சிவன்மலைச் சந்திரன் (யப்பான்), திருச்சந்திரன் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர் - தெல்லிப்பழை), செல்வச்சந்திரன், இரஞ்சிதமலர் (ஜேர்மனி), சாந்திமலர், ஜெயச்சந்திரன் (ஜெயம்), கிருபாமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சந்திரஜோதி மற்றும் மோகனதாஸ் (கனடா), ஜெகதாஸ் (பழம்), ஞானஜோதி, பகவான்தாஸ், கண்ணதாசன் (ஜேர்மனி), பிறேமதாஸ், சுபஜோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2017) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**26/27, பூநாறி வீதி,**
**கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 075 4123**

## 20ஆம் திருத்தத்தை எதிர்த்து 10 வழக்குகள் தாக்கலாகும்

### நாடாளுமன்றுக்கு திருத்தம் வர முன்பே முடக்கத் திட்டம்

கொழும்பு, ஓக. 16

நாடாளுமன்றத்தில் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ள 20ஆவது திருத்தச்சட்ட வரைவுக்கு எதிராக, உயர் நீதிமன்றத்தில் 10 மனுக்களைத் தாக்கல் செய்ய அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.

அனைத்து மாகாண சபைகளுக்கான தேர்தலை ஒரே நாளில் நடத்தும் வகையில் அரசமைப்பில் திருத்தம்செய்வதற்கான 20ஆவது திருத்தச்சட்ட வரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு, பவ்ரல் மற்றும் கபே அமைப்புகள் தயாராகி வருகின்றன.

20 ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பான வர்த்தமானி வெளியிடப்பட்டு, இரண்டு வாரங்களாகியுள்ள நிலையில், எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள முடியும்.

அனைத்து மாகாணசபைத் தேர்தலையும் ஒரே நாளில் நடத்தும் வகையிலான இந்த திருத்தச்சட்ட வரைவு அரசமைப்புக்கு முரணானது என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் மகிந்த தேசப்பிரியவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையில், அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புகள் இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 10 மனுக்களை தாக்கல் செய்யத் தயாராகி வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)

## சு.க. மாநாட்டை புறக்கணிப்போம்

### மகிந்த அணி அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16

செப்ரெம்பர் 2ஆம் திகதி நடைபெறவிருக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்வதைத் தவிர்ப்பதற்கு மகிந்த அணியின் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பண்டாரநாயக்கவின் கொள்கை தற்போது கட்சியில் இல்லை. நாட்டின் வளங்களை விற்றுப் பிழைப்பது பண்டாரநாயக்கவின்கொள்கைக்குமுரணானது. இதனாலேயே மகிந்த அணியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (5)

### கிருஷ்ணசாமி வீராசாமி (K.V.சாமி)

**(தொண்டைமானாறு, யாழ்ப்பாணம்)**

**(Photographer, Manager, ex.Fisheries Union, Saudi Catering, UNDP Project Officer Jaffna)**



தோற்றம் 09.06.1936 மறைவு 14.08.2017

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்.தொண்டைமானாறு, ஆஸ்திரேலியாவை (Brisbane) வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணசாமி வீராசாமி (K.V.Samy) அவர்கள் 14.08.2017 திங்கட்கிழமை ஆஸ்திரேலியாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கிருஷ்ணசாமி - வள்ளித்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு.திருமதி துரைராசா - இரத்தினாம்பாள் தம்பதிகளின் அன்பு மருமகனும், சுகிர்தவதியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை - யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி) பாசமிகு கணவரும், ஆனந்தி, விஜித்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, கே.சாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், ரகுபதி, உஷாராணி ஆகியோரின் அன்பு மாமனாரும், யாதவ், வேனுஷா, வேனுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2017) புதன்கிழமை ஆஸ்திரேலியா Grent Northern Garden of remembrance, Tollow wood Drive, Deception Bay இல் பிற்பகல் 1.30 மணியளவில் (ஆஸ்திரேலிய நேரப்படி) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**9,Barrhead Street,**
**Wavell Heights Brisbane QLD 4012,**
**Australia.**
**நடுத்தெரு தொண்டமானாறு.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**சண்முகபாலன்-(மைத்துனர்-+61429168358),**
**ஆனந்திரகுபதி -(மகள்-+61 433 200 971),**
**விஜித்தன் -(மகன்-+61 434 413103)**

## நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு அஞ்சவில்லை

### எதிர்கொள்ளத் தயார் என்கிறார் பைசர்

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தாமதமாவதற்கு நானே காரணமென ஒரு சில தரப்புகளிலிருந்து வெளிவரும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனக்கு எதிராக முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை எதிர்கொள்ளவும் தயாராக இருக்கின்றேன். இவ்வாறு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல் தாமதமாவதற்கு நானே காரணம் என்பதால் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை யொன்றைக் கொண்டுவர ஒரு சிலர் முயற்சிசெய்து வருகின்றபோதிலும் அந்தப் பிரேரணைக்கு நான் ஒருபோதும் அஞ்சப் போவதில்லை. எல்லை நிர்ணய விவகாரத்தாலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டு வந்திருக்கின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் சட்டத்தின் திருத்த வரைவு அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது- என்றார். (5)

# மகிந்த அணியில் 5பேருக்கு ஆப்பு

## சு.க. ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கத் தீர்மானம்

சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் அங்கம் வகிக்கும் மகிந்த அணியின் 5 உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கு முரணாகத் தொடர்ந்து செயற்பட்டு வருவதால் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் மையக் குழு தீர்மானித்துள்ளது.

கூட்டு அரசு அமையப் பெற்றதையடுத்து முன்னாள் அரச தலைவர் மகிந்த தலைமையில் நாடாளுமன்றத்தில் பொது எதிரணியாகச் செயற்பட்டுவரும் 52 உறுப்பினர்களும் இன்னமும் சுதந்திரக் கட்சியின் உறுப்புரிமையின் கீழேயே நாடாளுமன்ற உறுப்பினர்களாக அங்கம் வகிக்கின்றனர். அண்மைக்காலமாக 5 உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சிக்கு எதிராகப் பெரிய பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும், சுதந்திரக் கட்சியின் கொள்கைப் பிரகடனத்தை மீறும் வகையில் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர் எனவும் சுட்டிக்காட்டி அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சியின் மையக் குழு தீர்மானித்துள்ளது. (5)

# போராட தயாராகும் லொத்தர் முகவர்கள்

கொழும்பு, ஓக. 16

அரசுடன் தாங்கள் தொடர்ந்து நடத்திவரும் பேச்சுகள் வெற்றியளிக்காததால் தேசிய லொத்தர் சபையின் 'சம்பத் ரேகா' மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையின் 'கெலெக்ஸி' இரண்டு லொத்தர் சீட்டுகளையும் விற்பனை செய்வதைத் தவிர்த்துக் கொள்ளப்போவதாக ஐக்கிய இலங்கை லொத்தர் முகவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதி மேற்கூறிய இரண்டு ரிக்கெட்டுகளின் விற்பனையைத் தவிர்க்கப்போவதாகவும், அதன் பின்பும் தீர்வுகள் கிடைக்காவிட்டால் அதற்கடுத்த வாரத்தில் மேலும் இரண்டு ரிக்கெட்டுகள் விற்பனையை நிறுத்தப் போவதாகவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதுவரை கொள்ளுப்பிட்டியிலுள்ள கட்டமொன்றில் இயங்கிவந்த தேசிய லொத்தர் சபையை நாரஹேன்பிட்டிக்கு இடமாற்றம் செய்வதற்கும் தாங்கள் ஆட்சேபம் தெரிவிப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (5)

# டெங்கை கட்டுப்படுத்த ஆயிரம் பேர் இணைப்பு

கொழும்பு, ஓக. 16

நாடு முழுவதும் டெங்கு ஒழிப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மேலும் ஆயிரம் உதவியாளர்கள் நியமிக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

தற்போது பணியிலிருக்கும் 500 உதவியாளர்களின் சேவையை நிரந்தரமாக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோயாளிகளின் தொகை படிப்படியாகக் குறைந்து வருகின்றபோதிலும் மீண்டும் அந்த நோய் தலைதூக்காமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (5)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**சிவரூபி (துங்கா) திலீபன்**

பிறப்பு 11.06.1978
இறப்பு 16.08.2016

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தாயாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஓராண்டு பறந்தோடிச் சென்றாலும்
என்றென்றும் அவர் பாதம் போற்றியே பணிந்திடுவோம்

மாணிக்கத் தியாகராசா வீதி,
சுன்னாகம்.
கணவர், பிள்ளை.

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
**சின்னத்துரை ஆறுமுகம்**
(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர், பிரதேச செயலகம், உடுவில்)

அவர்களின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (16.08.2017) புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். தனிப்பட்ட அழைப்புக்கள் கிடைக்காதவர்கள் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொண்டு தயவு செய்து வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். அன்னாரது பிரிவுச் செய்தி கேட்டு எமது துயரில் பங்கு கொண்டதோடு பலவழிகளிலும் எம்மோடு இணைந்து செயற்பட்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோற்றம் 16.10.1934
மறைவு 17.07.2017

குடும்பத்தினர்.
இணுவில் மேற்கு, இணுவில்.

## நன்றி நவிலலும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 26 . 11 . 1944



மறைவு 19 . 05 . 2017

கடந்த 19.05.2017 இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
அமரர்
**சபாபதிப்பிள்ளை இரத்தினகோபால்**
(ஜெகா மோட்டோர்ஸ் உரிமையாளர்)

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிபுரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் நேரிலும் தொலைபேசிவாயிலாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (16.08.2017) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கடற்கரை யில் நடைபெறும். நாளை (17.08.2017) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், மதியபோசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இந்து பாடசாலை வீதி,
வல்வெட்டி.

ஜெகா மோட்டோர்ஸ்
குடும்பத்தினர்.
077 763 0152

(CS 5006) (14)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27 . 07 . 1960



மறைவு 09 . 08 . 2015

திதி: 16.08.2017

**அமரர் சின்னத்துரை இராதாகிருஷ்ணன்**

உலக வாழ்வு நிலையில்லாதது
என்பதை யாமறிவோம்
ஆயினும் எமையெல்லாம் தவிக்கவிட்டு இத்தனை
விரைவாகப் பிரிந்துவிட்டாலும் ஈராண்டு
நிறைவில் ஆறாத மனக்கவலை உங்கள்
ஆத்மா சாந்திபெற இறைவனை
இறைஞ்சுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு
உங்கள் பிரிவால் வாடும்:
அன்புச் சகோதரர்கள்

## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தர்மலிங்கம் தர்மராஜா**
(ஓய்வு பெற்ற உதவித்தொழில் ஆணையாளர், தொழில் திணைக்களம்: வவுனியா)

மலர்வு 17.07.1940
உதிர்வு 16.08.2010
திதி : 29.07.2017

காலச் சக்கரம் சுழன்று பழைய இடம் செல்லாதா ?
நாம் எல்லோரும் ஒன்றாக மீண்டும் வாழ முடியாதா ?
எதிர்பார்ப்புக்கள் வெறும் ஏக்கங்களாக.......
இது தான் யதார்த்தம்
நெடிதான ஏழாண்டுகள் – அப்பா
நீங்களின்றி நாங்கள் மட்டும்

பிள்ளையார் அருள் பெற்று உங்கள் ஆத்மா சாந்தியடையட்டும்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

"தேவி மகால்", கோப்பாய் மத்தி.
குடும்பத்தினர்.

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 09 . 1931



மறைவு 21 . 08 . 2003


**அமரர் பொன்னையா பாலசிங்கம்**
(Ret.Superintendent of Audit)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து – எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழ வைத்த – உமை
பதின்னான்காம் ஆண்டு நினைவு நாளில்
நினைந்து வணங்குகின்றோம் – அப்பா !

166/3, சேர்.பொன்
இராமநாதன் வீதி,
திருநெல்வேலி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டி.

## மிகப்பெரிய வானூர்தி கட்டுநாயக்கவில்



உலகின் மிகப் பெரிய பயணிகள் வானூர்தியாகக் கருதப்படும் ஏ380 வானூர்தி டுபாயிலிருந்து உத்தியோகபூர்வமாக கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் நேற்றுமுன்தினம் மாலை 4.30 மணியளவில் தரை இறங்கிது. (5)

# சட்டமா அதிபர் திணைக்களத்தை சாடும் கூட்டு அரசுக்கு எச்சரிக்கை

## சட்டத்தரணிகள் சங்கம் விடுக்கிறது

கொழும்பு, ஓக. 16

சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எதிராக கைநீட்டுவது தவறான செயற்பாடு இவ்வாறு செய்ய வேண்டாம் என்று கூட்டு அரசுக்கு எச்சரிக்கை விடுக்கின்றோம். இவ்வாறு அந்தச் சங்கத்தின் தலைவரும் அரச தலைவர் சட்டத்தரணியுமான ரோஹன த சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அயலுறவுத்துறை அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்கவை பிணைமுறி விவகாரத்தில் விசாரணைக்கு உட்படுத்தியமை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு எதிராகக் கைநீட்டுவதும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணிபுரியும் அதிகாரிகளை இழிவுபடுத்தும் வகையில் கருத்துகளைத் தெரிவிப்பதும் தவறான செயற்பாடாகும்.

பிணைமுறிவிவகாரத்தைவைத்து தனிப்பட்ட கருத்துகளை மக்கள் மயப்படுத்தி மக்கள் மத்தியில் சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உள்ள நற்பெயரை இழிவுபடுத்தப் பார்க்கின்றனர். மோசடி விவகாரம் வெளியாகி நீதித்துறையின் சுயாதீனம் உறுதிப்படுத்தப்படும் என்ற அச்சத்தில் அவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர்.

முறைப்பாடுகளுக்குரிய சாட்சியங்களும் நீதிமன்றில் அல்லது ஆணைக்குழுவில்தான் வழங்க வேண்டும். அதன் பின்னர் விசாரணைகள் நடைபெற்று நடவடிக்கை எடுக்கப்படும். விசாரணை செயற்பாட்டில் ஏதும் தவறுகள் இடம்பெறும் பட்சத்தில் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பும் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு உரித்துடையது -என்றார்.

மகிந்த அரசு சார்பான விசாரணைகளை மந்த கதியிலும் தற்போதைய அரசு சார்பானவர்களின் விசாரணைகளை துரித கதியிலும் சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுக்கின்றது என்ற குற்றச்சாட்டை அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித முன்வைத்திருந்தார். முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்கவும், தனது பதவி விலகலின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது குற்றம் சுமத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

# புலிகளின் கைத்துப்பாக்கியை கையாடி விற்க முயன்றவர் கைது

## வவுனியா இராணுவ முகாமில் அவர் பணியாற்றுபவர்

கொழும்பு, ஓக. 16

தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர் பயன்படுத்தியதாகக் கூறப்படும், கைத்துப்பாக்கியை விற்பதற்கு முயன்ற, இராணுவத்தின் சிறப்புப் படையணியைச் சேர்ந்தவர் கைது செய்யப்பட்டுள்ளார். வெளிநாட்டுத் தயாரிப்பான 9 எம்.எம். ரக கைத்துப்பாக்கி மற்றும் ஆறு ரவைகளை, 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கு நேற்று முன்தினம் முயன்றபோது அவர் கைது செய்யப்பட்டார்.

ஆயுதத்தை விற்பனை செய்வதற்கு, தன்னுடைய நண்பர்கள் ஊடாக, விலைபேசிக் கொண்டிருந்த வேளையிலேயே, இந்த விவகாரம் தொடர்பில், பொலிஸ் சிறப்புப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது.

அதனையடுத்து, பாதாள உலகக் கும்பலின் உறுப்பினராக, வேடமிட்டுக்கொண்டு அவருடைய வீட்டுக்கு சென்ற பொலிஸ் சிறப்புப் பிரிவின் அதிகாரி அவரைக் கைது செய்தார். சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இராணுவ சிறப்புப் படையணியின் சார்ஜன்ட், வவுனியாவில் உள்ள இராணுவ முகாமில் கடமையாற்றுபவர் என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. (5)

# கூட்டாட்சி இலங்கைக்கு பொருத்தமில்லை

## கூறுகிறார் அஸ்கிரிய துணைப் பீடாதிபதி

கொழும்பு, ஓக. 16

இலங்கை போன்ற சிறிய நாட்டுக்கு கூட்டாட்சி முறைமை பொருத்தமற்றது என்று தெரிவித்துள்ள கண்டி அஸ்கிரிய பீடத்தின் துணைப் பீடாதிபதி ஆனமடுவே தம்மதிஸ்ஸ தேரர், மகாநாயக்க தேரர்களின் கருத்துக்களை அரசு உதாசீனம் செய்யக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, கண்டி அஸ்கிரிய, மல்வத்து பீடாதிபதிகளைச் சந்தித்தார். இதன் பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துக்கூறுகையிலேயே ஆனமடுவே தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் எதிர்காலம் தங்கியிருக்கும் அரசமைப்புத் தொடர்பில் மூன்று பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களது கருத்துக்களை அரசு உதாசீனம் செய்வது ஆரோக்கியமானதல்ல. நாட்டின் தற்போதைய நிலமை தொடர்பில் தலைமை அமைச்சர், அரச தலைவருக்கு நாம் தெளிவுபடுத்தியுள்ளோம். அரசமைப்பு இதுவரையில் தயாரிக்கப்படவில்லை என்று அரச தலைவர் கூறு கின்றார். தலைமை அமைச்சர் இந்த நிலைப்பாட்டில் இருக்கின்றாரா என்பது தெரியவில்லை.

புதிய அரசமைப்பு ஊடாக மாகாண சபைகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுமாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. இலங்கை போன்ற சிறிய நாடு ஒன்றுக்கு கூட்டாட்சி முறைமை பொருத்தமாகாது என்றார். (5)

**மாடு விற்பனைக்கு**

8½, 4½ மாதக் கண்டுத்தாச்சி மாடு, ஆட்டுக்குட்டி விற்பனைக்கு.

**076 681 7733**

**பெயர்மாற்றம்**

நெத்தலியாறு: விசுவமடுவை வசிப்பிடமாகக் கொண்ட **சிறீதரன் சிந்துஜன்** ஆகிய நான் எனது பெயரை இன்றுமுதல் **சிறீதரன் செகான் மதுசங்க வீரசிங்க** எனப் பெயர்மாற்றம் செய்வதோடு இனிவரும் எல்லா ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் எனவும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

- சிறீதரன் செகான் மதுசங்க வீரசிங்க -

**வீடு விற்பனைக்கு**

வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 833 2954/ 004552724262**

**தேவை**

கல்வியங்காடு பிரதேசத்தில் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையத்-துக்கு எரிபொருள் நிரப்புனர்கள் தேவை.

**075 918 7968**

**CAR FOR SALE**

**Doctor used Mitsubisi Lancer Car No: N.P.HF 7XXX For Sale.**

**077 601 3616**

**வேலையாள்கள் தேவை**

சைவஉணவகம் ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை.

(CS 6833) (14)

**075 795 6507**

**பெயர்மாற்றம்**

அல்வாய் வடக்கு, அல்வாயைச் சேர்ந்த **றாஜினி** ஆகிய நான் எனது பெயரை இன்றிலிருந்து **றாஜினிதேவி** எனப் பெயர் மாற்றி சகல ஆவ்ணங்களிலும் கையொப்பம் இடுவேன் என இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.

- றாஜினிதேவி -

**Technician தேவை/பயிலுனர் தேவை**

கொழும்பில் இயங்கி வரும் டிஷ் ஆண்டெனா/ கேபிள் டிவி உதிரிப்பாக விற்பனை/ பிட்டிங் மற்றும் Repair செய்யும் நிறுவனத்துக்கு கீழ் காணும் வெற்றிடம் உள்ளது.
அனுபவமுள்ளோர் தொடர்பு கொள்ளவும்.

- டிஸ் ஆண்டெனா பிட்டிங் நன்கு செய்ய தெரிந்த Technicians (சம்பளம் 30, 000/= .... கமிஷன்)
- Receiver ரிப்பேர் செய்ய தெரிந்த Technicians சம்பளம் 40, 000/= வரை.
- டிஸ் ஆண்டெனா பிட்டிங் பழக விருப்பமுடைய பயிலுனர் சம்பளம் 20.000/=
- Store Keeper And Bill Clerk Salary 25,000/=
- உணவு, தங்குமிடம் இலவசம். **077 771 0785**

**SATS - TECH ENGINEERS (Pvt)Ltd.**
No.51/102 woulfendhal Street,
Colombo - 13

**University of Jaffna**

Prof. K. Kailasanatha Kurukkal
Memorial Lecture-2017
On
"யாழ்ப்பாணத்து இந்துக் கோயிற் பண்பாட்டில் புராணங்களின் செல்வாக்கு"

Speaker : Dr. (Mrs.) S. Srimuralitharan
Senior Lecturer,
Department of Hindu civili zation,
Faculty of Arts,
University of Jaffna.
Place : Kailasapathy Auditorium,
University of Jaffna.
Date : 17.08.2017
Time : 3.00p.m

All are cordially invited.
-Registrar -

**மனமுவந்து வாழ்த்துகின்றோம்**

**செல்வத்துரை திருமாறன் (பிரபு)**

(உரிமையாளர் - இராஜேஸ்வரி மண்டபம் கோண்டாவில், தெல்லிப்பழை )



2017 ஆகஸ்ட் 3ஆம் திகதி அகில இலங்கை சமாதான நீதிவான் பதவியைப் பெற்றமையை எண்ணி உவகையடைவதுடன்...

மக்கள் சேவையே மகேசன் சேவையென
மாண்புடன் ஆற்றும் தெய்வப் பிறப்பே
எப்பொழுதும் உங்கள் சேவை தொடரவும்
ஏற்றமுடன் உமது வாழ்வு சிறக்கவும்
பற்பல பதவிகள் இன்னும் வகிக்கவும்
பரனை நினைந்து பிரார்த்திக்கின்றோம்.

உதயா ஜூவல்லர்ஸ்
79,81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4434, 021 221 6877

நியூ உதயா ஜூவல்லர்ஸ்
91, மின்சார நிலைய வீதி
யாழ்ப்பாணம்.

**பழைமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்**
**ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்**



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)

03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விட்டீர்களா ?

**ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!**

**ரெங்கசாமி காளியம்மா**
**மாத்தளை வீதி, கண்டி.**
**077 327 2302/ 075 509 5887**

**APPLICATION FOR DIPLOMA COURSE IN PSYCHOLOGICAL COUNSELLING**

This is one year, week -end (Saturday & Sunday - 9.00 am - 02.00pm) course of 450 hours, affiliated to National University of Ireland, Galway. Resource team consists of M.Sc., M.A, M.Phil and B.A Level Professional level lecturers & Trainers. The course includes demonstration sessions by trainers, in course practical sessions, and field practicum.

1. Pass in all subjects in G.C.E(A/L)
2. Knowledge of English as to read, write and understand
3. Age between 25 and 40
4. Interest in social development

The applicants will have to buy a special form from our office and submit it before 15th of September 2017. Only 30 applicants will selected. For further details please contact: **021 222 2856 & 077 476 6891** in office hours except on Wednesdays and Thursdays.

**AHAVOLI**
**Institute of Counselling Psychology**
**St.Patrick's Road, Jaffna.**

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விசாரணைகள் எந்தவித தடைகளுமின்றி தொடரவேண்டும்

கூட்டரசின் கவனம் மீண்டும் முன்னாள் அரச தலைவர்மகிந்தராஜபக்சகுடும்பத்தை நோக்கித்திரும்பியுள்ளது. மகிந்தவின் குடும்பத்தவர்கள் நேற்று மீண்டும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னாள் அரசதலைவரின் குடும்பத்தவர்கள்மீதான விசாரணைகள் பல மாதங்களாக உறக்க நிலையிலிருந்த நிலையிலேயே மீண்டும் அரசு அதனைக் கையில் எடுத்துள்ளது.

முன்னைய அரசின்முக்கிய பிரமுகர்களுக்கு எதிரான விசாரணைகள் முடங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டமைகுறித்துசிவில்சமூகத்தினரும்,பொதுமக்களும், அமைச்சர்களும் கூட அதிருப்தி வெளியிட்டு வந்துள்ளமை சுட்டிக்காட்டப்படவேண்டிய விடயம்.

2015ஆம் ஆண்டில் ஆட்சிமாற்றத்துக்காக மக்கள் வாக்களித்த வேளை, அவர்கள் மனதில் முன்னைய அரசின் முக்கிய பிரமுகர்கள், மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் ஊழல், மோசடிகளுக்காகவும் இன்னும் வெளியில்தெரியவராதகுற்றங்களுக்காகவும்நீதியின் முன் நிறுத்தப்படவேண்டும் என்ற பெருவிருப்பம் காணப் பட்டது. இன்றுவரை மக்களின் எதிர்பார்ப்பாகவும் அது உள்ளது.

தனது ஆட்சிக்காலத்தின் ஆரம்ப நாள்களில் கூட்டு அரசும் மக்களின் ஆணைக்கேற்ப இருட்டில் மறைக்கப்பட்ட பல விடயங்களைத் தோண்டியெடுத்தது. அவ்வாறான ஒரு விசாரணையின்போதே ரக்பி வீரர் வாசிம்தாஜுதீன்படுகொலை பற்றி பல முக்கிய விடயங்கள் அம்பலப்படுத்தப்பட்டன. வெறும் விபத்து என மூடி மறைக்கப்பட்ட சம்பவம் திட்டமிட்ட கொலை என்பது தெரியவந்தது.

எனினும், பின்னர் முன்னைய அரசின் முக்கிய பிரமுகர்களை அம்பலப்படுத்துவதில் அரசு அக்கறையிழந்தது.

இதற்குப் பல்வேறு தரப்பினர் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

கடந்தமாதம்அமைச்சரவைக்கூட்டமொன்றில்அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன ஐக்கிய தேசிய கட்சியினர் மீது வெளிப்படையாக இதற்கான குற்றச்சாட்டை முன்வைத்திருந்தனர்.

அதேவேளை,அரசின்முக்கிய அமைச்சர்கள்சட்டமா அதிபர் திணைக்களத்தின் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர்.

இந்தநிலையிலேயே அரசுமீண்டும் மகிந்தகுடும்பத்தினரை இலக்குவைத்து விசாரணைகளை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது.

மகிந்த ராஜபக்ச குடும்பத்தினரை மையமாகக் கொண்டு ஆரம்பமாகியுள்ள இந்த விசாரணைகள் எந்தத்தடையுமின்றி இறுதி நீதி நிலைநாட்டப்படும் வரை தொடரவேண்டும் என்பதே மக்கள் விருப்பம்.

அரசு எந்த அரசியல் நோக்கங்களுக்காகவும் இந்த விசாரணைகளைப் பயன்படுத்தாமல் நீதி நிலை நிறுத்தப்படவேண்டும்; குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் மகிந்த ராஜபக்ச குடும்பத்தினர் மீதான குற்றச்சாட்டுகளை ஆராயவேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு.

சில வாரங்களுக்கு முன்னர் பாகிஸ்தானில் நிகழ்ந்த அந்த அதிசயம் இலங்கையிலும் நிகழவேண்டும்.



# எங்களுக்கு கப்பல்கள் விடுகினம்

பிரகாஸ்

தீர்வுத் திட்டம் வரும்நேரம் வரட்டும்; பன்னாட்டு விசாரணையோ, உள்நாட்டு விசாரணையோ அமைக்கப்படும் நேரம் அமைக்கப்படட்டும்; கூட்டாட்சி குலையப்போகிறதா, குலையட்டும்; இவை அனைத்தும் கொழும்பு அரசுடன் தொடர்பு பட்டவை.

தமிழர்களாகிய நாம், 30ஆண்டுகள்கால நீண்டதும், நெடியதும், கொடியதுமான போரில் அதிகம் வதைபட்டவர்கள் என்ற அடிப்படையில், எமதுவாழ்வாதாரத்தையும்,பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப எம்மிடம் அல்லது எம்மைச் சார்ந்திருக்கும் அல்லது நாம் சார்ந்திருக்கும் வடக்கு மாகாண சபையிடம் என்னென்ன திட்டங்கள்உள்ளன.அடுத்ததாகநாம்எதையெதைச் செயற்படுத்தப் போகிறோம். எமது பொருளாதாரத்தைவளப்படுத்துவதுதொடர்பில்குறுகியகால அடிப்படையிலோ அல்லது நீண்ட கால அடிப்படையிலோ எம்மிடம் அடுத்ததாக உள்ள திட்டம் தான் என்ன? திருதிருவென்று விழிப்பதைத் தவிர எம்மால்இவற்றுக்குப்பதில்கூறஇயலாது.

> சிலர் பிளாஸ்டிக்குக்குப் பதில் என்ன என்ற கேள்வியைக் கேட்டிருந்தனர். உண்மையில் அதைச் சிந்திக்க வேண்டியது கொழும்பு அரசு அல்ல; நாம்தான். அள்ள அள்ளக் குறையாத பனைவளம் எம்மிடம் உள்ளது. பை முதல் பாய் வரை, அதைவைத்து பிளாஸ்டிக்கின் பல உபயோகங்களைப் பிரதீயீடு செய்ய முடியும்.

### உற்பத்தி, விற்பனை கொள்வனவு அனைத்தும் வடக்கில் வேண்டும்

அமெரிக்காவின் அதிபர் தேர்தல் கடந்த வருட இறுதிப்பகுதியில்நடைபெற்றது. தற்போது அந்த நாட்டின் அதிபராக இருக்கும் டொனால்ட் ட்ரம்ப் தனது தேர்தல் பரப்புரையை பெரிய அளவில் முன்னெடுக்கவில்லை. அவர் வலியுறுத்திய விடயம் ஒன்றேயொன்றுதான். அதாவது ஒரு பொருளை உற்பத்தி செய்வதும், அதை விற்பதும், அதை வாங்குவதும் அமெரிக்கர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான்எமதுபணம் எம் மத்தியில் சுழன்றுகொண்டிருக்கும். அவ்வாறு எமது பணம் எம்மிடத்தில் இருந்தால் மட்டுமே நாம் அபிவிருத்தியை மென்மேலும் உறுதிப்படுத்தலாம் என்று அவர் குறிப்பிட்டார். இது அமெரிக்காவுடன்மட்டும்தொடர்புடையதோ அல்லது அந்த நாட்டுக்கு மட்டும் பொருந்தக்கூடியதான விடயமோ அல்ல. ஒற்றையடிப்பாதை முதல்ஒலிம்பிக்சந்தை வரை அத்தனை தரப்புக்களும் இந்த விடயத்தைமனதில்ஆழமாகப்பதித்துக்கொள்ள வேண்டும். இதற்கு நாம் மட்டும் விதிவிலக்கா என்ன?


நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஓகஸ்ட் மாதத்தின் ஆரம்பப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தின் சன நெரிசல் மிகுந்த இடங்களில் மரத்தால் செய்யப்பட்ட அலங்காரக் கப்பல்கள்வைத்துவிற்கப்பட்டுக்கொண்டிருந்தன. தென்னிலங்கை வியாபாரிகள் அவற்றைச் செய்து எடுத்து வந்திருந்தனர். 500 ரூபாவில்இருந்துவிலைஆரம்பமாகி 25 ஆயிரம் ரூபா வரை விலை போயிற்று. ஒவ்வொரு கப்பலின் பருமனுக்கு ஏற்றவாறு விலைகள் நிர்ணயிக்கப்பட்டிருந்தன.

### சுருட்டிஅள்ளப்படுகிறது வடபகுதிப் பணம்

அவ்வாறு கப்பல் விற்றுக் கொண்டிருந்த தென்னிலங்கை வியாபாரிகளிடத்தில் பேச்சு நடத்தியதில், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகியஇருமாவட்டங்களில் தமது பொருள்கள் அதிக







அளவில் விற்பனையானதாகவும், ஏனைய மாவட்டங்களில் ஓரளவு வரவேற்புக் கிடைத்துள்ளது என்றும் தெரிவித்தனர். அது மட்டுமல்லாது 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கப்பல்களில் சுமார் 40 கப்பல்கள் யாழ்ப்பாணத்தில் விற்கப்பட்டுள்ளன என்றும் அறிய முடிந்தது. ஒன்றுகூட்டிப் பார்த்தால் அந்தத் தொகை 10 லட்சம். இந்தப் பத்து லட்சமும் அப்படியே தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இனி அந்தப் பணம் அங்கேயே சுழற்சி பெறப்போகிறது. மாற்றீடாகக் கிடைத்த அலங்காரப் பொருளான அந்தக் கப்பலை அனுதினமும் துடைத்துப் பராமரிப்பதைத் தவிர வேறொன்றையும் நாங்கள் செய்யப்போவதில்லை.

### காலாதிகாலமாக கப்பல் பார்த்த சேவகர்கள் நாம்

இது போன்ற சம்பவங்கள் இன்று நேற்று என்றல்லாது ஆண்டுகளாக இது தொடர்கதையாகி வருகிறது. தீபாவளி, நத்தார் போன்ற பண்டிகைக்காலங்களில் தென்னிலங்கை வியாபாரிகள் எமது விருப்பத்தெரிவுகளாக உள்ளனர். பல கோடி பெறுமதியான பொருள்களும் துணிகளும் வடபகுதி மக்களால் இதுவரை தென்னிலங்கை வியாபாரிகளிடம் இருந்து கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் அதாவது எந்தவொரு மாற்று வர்த்தகமும் இன்றி நாம் தாரை வார்த்த தொகைதான் இவ்வாறு குறிப்பிடப்படுகிறது. மேலே குறிப்பிட்டது போல், அந்தப் பணம் தற்போது தென்னிலங்கையில் சுற்றிக் கொண்டிருக்கும். மாற்றாக நாம் பெற்ற துணிகள், அடுப்படியில் அம்மாவின் இடுப்பில் தொங்கிக் கொண்டிருக்கும்.

### பிளாஸ்டிக்கை பிரதியீடு செய்ய நாம் தயாரா?

பிளாஸ்டிக் பொருள்களின் உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்குக் கொழும்பு அரசு தீர்மானித்துள்ளது என்ற செய்திகள் அண்மைக் காலமாக ஊடகங்களிலும், சமூக வலைத்தளங்களிலும் பரவலாகப் பேசுபொருளானது. பத்தி எழுத்துக்களும், ஆசிரியர் குறிப்புக்களும் அரசின் முடிவை வரவேற்றன.

இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இந்த முடிவை அரசு எடுத்திருந்தபோது, சிலர் பிளாஸ்டிக்குக்குப் பதில் என்ன என்ற கேள்வியைக் கேட்டிருந்தனர். உண்மையில் அதுபற்றிச் சிந்திக்க வேண்டியது கொழும்பு அரசு அல்ல; நாம்தான். அள்ள அள்ளக் குறையாத பனை வளம் எம்மிடம் உள்ளது. பை முதல் பாய் வரை அதைவைத்து பிளாஸ்டிக்கின் பல உபயோகங்களைப் பிரதீயீடு செய்ய முடியும்.

எனவே பிளாஸ்டிக்குக்குப் பதில் எமது சுயதேவையை நிறைவு செய்யும் வகையிலும், கொழும்புக்கு வடக்கிலிருந்து ஏற்றுமதி செய்யும் விதத்திலும் பனை வளத்தை வைத்து நாம் எத்தனை செயற்றிட்டங்களைச் செயற்படுத்த ஆரம்பித்திருக்கிறோம்? சரி, ஏற்றுமதி வேண்டாம்; இறக்குமதியைத் தவிர்த்துக் கொள்ளவாவது போதுமான உற்பத்திகள் எம்மிடத்தில் உள்ளனவா? பனைசார் உற்பத்தி என்பது பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு சாலப் பொருத்தமானது. போரில் தமது கணவர்மாரை இழந்த எத்தனை பெண்களுக்கு இந்த வாய்ப்பை வடக்கு மாகாண சபை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது என்ற பென்னாம்பெரிய கேள்வி எம்முன் தொக்கி நிற்கிறது.

### வீட்டில் ஆரம்பிப்போம் கொழும்பில் பிறகு

மேற்குறிப்பிட்ட அத்தனை கேள்விகளுக்கும் எம்மிடத்தில் உள்ள ஒற்றைப் பதில் எதுவுமே இல்லை என்பதே. இதற்கும் கொழும்பு அரசுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது.

> மாற்றத்தை வீடுகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பிளாஸ்டிக்குக்குத் தடை என்ற மிகப் பெரும் தேசிய வாய்ப்பை வடக்குமாகாணம் இறுகப் பற்றிப் பிடிக்க வேண்டும். அதை ஆதாரமாக வைத்து பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முன்னேறவும் வடக்கு மாகாண சபை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகமிக அவசியம் .

மாற்றத்தை வீடுகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். பிளாஸ்டிக்குக்குத் தடை என்ற மிகப் பெரும் தேசிய வாய்ப்பை , வடக்கு மாகாணம் இறுகப் பற்றிப் பிடிக்க வேண்டும், அதை ஆதாரமாக வைத்துப் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் முன்னேறவும் வடக்கு மாகாண சபை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் மிகமிக அவசியமானதும், இன்றைய காலத்தின் கட்டாயத் தேவையுமாகும். இத்தகைய மாற்றத்தையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள். மாறாக அமைச்சுக்களுக்காக ஆள்மாற்றத்தை அல்ல.



## ஆசிரியருக்கான கடிதம்

### வீதியோர வியாபாரமும் விபத்துக்களுக்கு வழிவகுப்பவை


வீதியோரங்களில் தமது பொருள்களை கடை பரப்பி விற்பனை செய்வோர் வீதிப் போக்குவரத்து நெருக்கடிகளைக் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம். குடாநாட்டில் அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் கண் மூடித்தனமாக நடக்கின்றன. அவற்றில் எத்தனையோ விபத்துகள் சிறிய அவதானக் குறைபாடுகளால் நடந்து விடுகின்றன. வீதிகளோ அகலம் குறைந்தவை; வாகனப் போக்குவரத்தோ அதிகரித்துள்ளன. நாம் விதிமுறைகளுக்கு அமையப் பயணித்தாலும் எதிரே வருபவரால் எமக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்துடன் பயணிக்க வேண்டியுள்ளது.

இந்த மாதம் முதல் வாரத்தில் ஒருநாள் சாவகச்சேரி நகரப் பகுதி தாண்டி, நியூமெடி கெயார் தனியார் மருத்துவமனைக்கு முன் சற்றுவளையும் வீதிக்கு அருகாகவும் உள்ள இடத்தில் ஒரு சிறு வியாபாரி (பல்ப்) தனது பொருள்களை விற்பனை செய்து கொண்டிருந்தார். அவரிடம் பொருள்கள் வாங்கிய 50, முதல் 55 வயது வரை இருக்கும் என மதிக்கத்தக்க ஒருவர், வீதிக்குக் குறுக்காகச் செல்ல எத்தனித்தபோது எதிரே வந்த பேருந்து ஒன்றுடன் மோதி பேருந்தின் இரு ரயர்களுக்கு நடுவே சிக்கிவிட்டார். அங்கு நின்றோரின் அவலக்குரலால் பேருந்தின் சாரதி தெய்வாதீனமாக சடுதியாக 'பிரேக்' பிடித்ததால் அந்த நபர் சிறு காயத்துடன் காப்பாற்றப்பட்டார். அவருக்கு உயிராபத்து ஏற்பட்டிருந்தால், அதற்கு பேருந்து சாரதியே தண்டனைக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டிருக்கும். திடீர் பிரேக் போடும் போது பேருந்தில் இருந்த பயணிகளுக்கும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டல்லவா?

பாதை ஓரங்களில் வைத்து உடைகள், விளையாட்டுப் பொருள்கள், மின் பொருள்கள். பழங்கள் என்பவற்றை விற்பனை செய்வோரை இது குறித்து அறிவுறுத்த வேண்டிய பொறுப்பு உதயனுக்கு உள்ளது. நடைபாதை வியாபாரிகளது தொழில் முயற்சி, குடும்பத்தேவை என்பவற்றைக் குறை சொல்லவில்லை. பிற உயிர்களுக்கு பாதிப்பு ஏற்படாது இருக்கும் விதத்தில் செயற்பட்டால் நல்லது அல்லவா? வீதிகளில் தேங்காய் உடைப்போரும், தென்னம் மட்டை ஏற்றிவர அவை வீதியில் நழுவி விழுந்தால் கவனியாது செல்வோரும் கூட, விபத்து ஏற்படத் தாங்கள் காரணமாகிறார்கள் என்பதை உணர்வார்களா?

நா.துஷாந்
வரணி

# இந்தியாவின் 71ஆவது சுதந்திரதின நிகழ்வு நேற்றுக் கோலாகலம்



“புதிய இந்தியாவை படைக்க அனைவரும் உறுதி பூணுவோம். எமது தேசத்தில் யாரும் பெரியவரும் கிடை யாது யாரும் சிறியவரும் கிடையாது. அனைவரும் சமமே. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நாட்டில் நம்பிக்கையான மாற்றத்துக்காகப் பாடுபடுவோம்”

புதுடெல்லி, ஓக. 16

இந்தியாவின் 71ஆவது சுதந்திரதின நிகழ்வு, அந்த நாட்டின் பல பகுதிகளிலும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நேற்றுக் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, செங்கோட்டையில் நாட்டின் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். அங்கு நடந்த நிகழ்வில் முன்னாள் தலைமை அமைச்சர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

“ஜனவரி 1, 2018 என்பது சாதாரண தினமல்ல, இந்த நூற்றாண்டில் பிறந்தவர்கள் 18 வயதை எட்டுகின்றனர். அவர்கள் எமது தேசத்தின் எதிர்காலம். புதிய இந்தியாவை படைக்க அனைவரும் உறுதி பூணுவோம். எமது தேசத்தில் யாரும் பெரியவரும் கிடையாது யாரும் சிறியவரும் கிடையாது. அனைவரும் சமமே. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து நாட்டில் நம்பிக்கையான மாற்றத்துக்காகப் பாடுபடுவோம். புதிய இந்தியா என்ற உறுதி மொழியை மனதில் ஏற்று 2022ஆம் ஆண்டுக்குள் புதிய இந்தியா என்ற இலக்கை அடைய முயன்றிடுவோம். இந்த சுதந்திர தின விழாவை இந்த உறுதிமொழி ஏற்கும் நாளாக கொண்டாடுவோம். நாட்டு மக்களைக் காப்பாற்ற பாடுபடும் இராணுவச் சிப்பாய்களுக்குத் தலை வணங்குகிறேன்” என மோடி நிகழ்வில் உரையாற்றினார். (ம)



# லியோனில் பெருவெள்ளம்

## 300 பேர் பரிதாபச் சாவு

சியாரா லியோன், ஓக. 16

மேற்கு ஆபிரிக்க நாடானா சியாராலியோனில்கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 300இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர் என்றும் சுமார் 100 பேருக்கும் அதிகமானவர்களைக் காணவில்லை என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்றும் பன்னாட்டு ஊடகமான அல்ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

சியாரா லியோனின் தலைநகர் ப்ரீடவுனில் கடந்த சில தினங்களாக கடும் மழை பெய்து வருகிறது. மலைப்பகுதிசார்ந்தகுடியிருப்புக்களும், நகர்ப்புறக் கட்டடத் தொகுதிகளும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

நிலச்சரிவில் சுமார் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் மண்ணில் புதையுண்டுள்ளன. வெள்ள இடரிலும், நிலச்சரிவிலும் சிக்கி சுமார் 300 பேர்வரை உயிரிழந்துள்ளனர் என்றுபன்னாட்டுஊடகங்கள் செய்திவெளியிட்டன. மேலும் 150 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளதால் உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

சியாரா லியோனின் தலைநகர் ப்ரீடவுன் கடும்நெருக்கடியைச் சந்தித்தள்ளது என்று பன்னாட்டு செஞ்சிலுவைக் குழு அறிவித்துள்ளது. (ம)



அமெரிக்காவின் குவாம் தீவு தம்மால் தாக்கப்படும் என்று வடகொரியா எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் கொரியத் தீபகற்பத்துடன் தொடர்புடைய நாடான ஜப்பானும், அதன் நட்பு நாடும் வடகொரியாவின் எதிரி நாடுமான அமெரிக்காவும் இணைந்து நேற்றுமுன்தினம் போர்ப் பயிற்சியில் ஈடுபட்டன. ஜப்பானில் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட்டது. (ம)

## அமெரிக்காவின் தாக்குதல்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். முக்கியஸ்தர்கள் உயிரிழப்பு

காபூல், ஓக. 16

ஆப்கானிஸ்தானில்கடந்தமாதம் அமெரிக்காநடத்திய வான் தாக்குதலில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் முக்கியஸ்தர்கள் உயிரிழந்தனர். இந்தத் தகவலை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் நேற்று வெளியிட்டனர்.

ஆப்கானிஸ்தானில்ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பைத் தலைமை தாங்கி நடத்தி வந்த அபு சயீத், கடந்த மாதம் குணார் மாகாணத்தில் நடந்த வான்தாக்குதலில் கொல்லப்பட்டார். இந்த நிலையில், அந்த அமைப்பின் மத்திய ஆசிய பிரிவை சேர்ந்த தளபதி ரகுமான் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள், ஆப்கானிஸ்தானில்அமெரிக்காகடந்த மாதம் நடத்திய வான்தாக்குதலில் உயிரிழந்தனர் என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)





## நேபாளத்தில் நிலச்சரிவு சாவு; 88ஆக அதிகரிப்பு

நேபாளத்தில் தொடர் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 88ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

நேபாளத்தில்கடந்தசிலநாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மழையினால் 21 மாவட்டங்கள் வெள்ளக்காடாக காணப்படுகின்றன.

ரப்தி மற்றும் புதிரப்தி ஆறுகளில் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. கரை கடந்து வெளியேறிய வெள்ளம் அரித்துச் சென்றதால் பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது. இதனால், தாழ்வான பகுதிகளில் வசித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அங்குள்ள ஜாப்பா, மோராங், சன்சாரி, சப்ட்டாரி, சிராஹா, ரவுட்டாஹட், பன்க்கே, பர்டியா, டாங் ஆகிய மாவட்டங்களைவெள்ளம்அதிகமாகச்சூழ்ந்துள்ளது. மோராங்மாவட்டத்தில்உள்ளபிராட்நகர்வானூர்தி நிலையத்தை வெள்ளம் சூழ்ந்துள்ளதால் அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. சுமார் ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதுவரை 88 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ம)

புதன்
16 ஓகஸ்ட் 2017 புதன்கிழமை
பொய்கை

பொன் மொழி
பேனா ஒரு நீண்ட வாளை விட வலிமையானது, ஆனால் நாக்கு அவ்விரண்டையும் விட வலிமையானது.





# நல்லூர்த் திருவிழாவில் நாடகத் திருவிழா

வேந்தன்

பக்தர்களின் அரோகரா முழக்கம், கற்பூரதீபத்தின் கரும்புகை, தேங்காய்ச்சிதறல்கள், வியாபாரிகளின்கூவியழைக்கும்குரல்கள், வண்ணவண்ண உடைகளில் உலாவருகின்ற குழந்தைகள் என நல்லூரின் விழாக்கோலம்ஒருபக்கம்நிகழ்ந்துகொண்டிருக்க வாத்தியக்கருவிகளின் ஓசை, வேடஉடைகள், வண்ண விளக்குகள், ரசிகர்கள், ஆற்றுகையாளர்கள் என ஒரே மேடையில் குழந்தைகள் பெரியவர்கள் எனமற்றொருபக்கம் குதூகலித்துக்கொண்டிருக்கின்றனர்.

ஐந்து வருடங்களாக தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கும் நல்லூர் நாடகத் திருவிழா இந்த வருடமும் திருவிழாக்கோலம் கொண்டு களைகட்டி வருகின்றது. நல்லூர்த் திருவிழாவை பக்தர்கள் எப்படிக்கொண்டாடுகிறார்களோ அப்படித்தான் நல்லூர் நாடகத் திருவிழாவையும் நாடகத்தின்பால் ஈர்ப்புக்கொண்ட ரசிகர்களும், பெற்றோர்களும், குழந்தைகளும் ஒரு திருவிழாவைப் போல கொண்டாடி வருகின்றனர். வருடாவருடம் நல்லூர் திருவிழா நடைபெறுகின்ற அதேகாலத்தில்நல்லூர்குறுக்கு வீதியில் அமைந்திருக்கின்ற செயல் திறன் அரங்க இயக்கதத்தின் திறந்தவெளி பஞ்சபூத அரங்கில் தொடர்ந்து பத்து நாள்கள் பல்வேறு வகையான நாடகங்கள் மேடையேற்றப்பட்டு வருவது வழமை. அந்த அடிப்படையில் இந்தவருடமும் கடந்த 09.08.2017அன்றுதொடக்கம் 18.08.2017வரையானபத்துநாள்களும் பல்வேறுவகையான நாடகங்கள் இடம் பெற்று வருகின்றன.

சிறுவர் நாடகங்கள் சமூகநாடகங்கள், பாரம்பரியக்கூத்துநாடகங்கள், வேடமுக நாடகங்கள், நகைச்சுவை நாடகங்கள் என மேடையேற்றப்பட்டு வருகின்றன. இரவு 7.15மணிதொடக்கம்09.30வரை இடம்பெற்றுவரும்இந்தநாடகத்திருவிழாவில் ஆலயப்பக்தர் கூட்டம்போல் நாடகப் பக்தர் கூட்டம் அலைமோதுகின்றதைக் காணலாம்.

**நாடகங்களும் அவை பேசும் கதைகளும்: பஞ்சவர்ண நரியார்**

குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்துருவில்உருவானபஞ்சவர்ணநரியார் சிறுவர் நாடகம் கடந்த 30 வருடங்களையும்தாண்டிஅதேபொலிவுடன் இன்றும் சிறுவர்களைக் கொள்ளைகொண்டு மகிழ்வித்துக் கொண்டிருக்கும் ஓர் நாடகமாக பஞ்சபூத அரங்கில் மேடையேறி வருவது குறிப்பிடத்தக்க ஒன்று. காட்டிலிருந்து வழி மாறிநாட்டுக்குத்தப்பிவரும்நரிஒன்று வண்ணம் மாறி மீண்டும்காட்டுக்குச் சென்று தந்திரத்தால் மற்ற மிருகங்களை ஏமாற்றிஅவற்றுக்குத்தலைவனாகி மீண்டும் தன் சாயம் வெளுத்தவுடன் என்னவாகிறார் என்பதைக்கூறும்தந்திரக்கதையைஅடிப்படையாகக் கொண்ட 'பஞ்சவர்ண நரியார்' நாடகம் பெருத்த வரவேற்புடன் மேடையேறி வருகிறது.



**ஏகாந்தம்**

போரின்சுழலுக்குள்அகப்பட்டுஒவ்வொரு விதத்திலும்பாதிக்கப்பட்டஎமதுவாழ்க்கை முறையில் கண்டுகொள்ளப்படாத வலியின் ஒரு பக்கத்தைக் கூறுகின்றது ஏகாந்தம் நாடகம். போர்ச் சூழ்நிலையில் பல்வேறுகாரணங்களால்தமதுபெற்றோரை விட்டுதம்மை பாதுகாத்துக்கொள்ள புலம்பெயர்ந்து சென்றவர்கள் தாம் குடியேறிய நாடுகளின் வாழ்க்கை முறைக்குள் அகப்பட்டு விடுபடமுடியாத ஓர்இறுக்கத்துக்குள் தள்ளப்பட இன்றுதனிமையில் விடப்பட்ட அவர்களின் பெற்றோர்களின் மன உணர்வுகளை பேசுகின்றது ஏகாந்தம். அரங்கியலில் ஓர் முயற்சியாக வேடமுகத்தையும் நிழல்பாவையையும் இணைத்து கதைசொல்லப்படுவது இந்த நாடகத்தின்மேலுமொருசிறப்பெனலாம்.

**கூடி விளையாடு பாப்பா**

இதுவும் குழந்தைகளுக்காக பெரியவர்களால் ஆற்றுகை செய்யப்படுகின்ற ஓர் சிறுவர் நாடகம். மழைக்காக வீட்டின் கூரையொன்றில்ஒதுங்கியிருக்கும்சேவலொன்றை தன்னுடைய இரையாக்கிக் கொள்ள துடிக்கும் நரி ஒன்றிற்கு ஏற்படுகின்றவிபரீதத்தைமிகஅழகாககுழந்தைகள்மொழியில்பேசுகின்ற இந்த நாடகமும் சிறுவர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப்பெற்று மேடையேறி வருகின்றது.

**சிங்கப்பூர் டொக்டர்**


பேராசிரியர்நந்தியின்எழுத்துருவில்உருவான 'சிங்கப்பூர் டொக்டர்' நகைச்சுவை நாடகம்நீண்டவருடங்களுக்குப்பின்னர் மீண்டும்மேடையேறுகின்றமை குறிப்பிடத்தக்கது. சிங்கப்பூர் மருத்துவமனையில் தாதியராக வேலைசெய்த இருவர் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்து தம்மை மருத்துவர்களாகச் சித்தரித்து மற்றவர்களை நம்பவைத்து ஏமாற்றி கடையிசியில்என்னவாகிறார்கள்என்பதைநகைச்சுவையாக பேசும் இந்த நாடகம் பார்வையாளர் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்று மேடையேறி வருகின்றது.

> குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எழுத்துருவில் உருவான பஞ்சவர்ண நரியார் சிறுவர் நாடகம் கடந்த 30 வருடங்களையும் தாண்டி அதே பொலிவுடன் இன்றும் சிறுவர்களைக் கொள்ளை கொண்டு மகிழ்வித்துக்கொண்டிருக்கும் ஓர் நாடகமாக பஞ்சபூத அரங்கில் மேடையேறி வருவது குறிப்பிடத்தக்க ஒன்று.

**பொம்மலாட்டம்**

எம்மிடமிருந்து தொலைந்து போன பொம்மலாட்டக் கலையையும் நிழல்பாவைக் கூத்தையும் ஒன்றிணைத்து ஓர் புதிய வகை ஆற்றுகை வடிவில் உருவாகிமேடையேற்றப்பட்டுவரும் பொம்மலாட்டம் நாடகம் சிறுவர்களைக் கொள்ளைகொண்ட ஓர்ஆற்றுகைவடிவமாககாணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. 'பாட்டி'எனும்பொம்மலாட்டநாடகத்தில் வடைசுட்டு பிழைப்பை நடத்தும்பாட்டிதன்னுடையபேரக் குழந்தைகளைக் காண ஊருக்குச் செல்லும் போது இடையில் காட்டு வழியில் எதிர்ப்படும்மிருகங்க

**போரின் பின்னர் சிதைந்து போன பல குடும்பங்களையும். அவர்களை நோக்கிப் படையெடுத்து வரும் நிறுவனங்களையும் பெண்களுக்கெதிராக முன்னெடுத்துவரும் வன்முறைகளையும் கூத்துடன் இணைத்து சமூக நாடகமாக கொடுத்திருந்தமை சிறப்பான ஒன்று.**





ளிடமிருந்துஎப்படிதந்திரமாகதப்பிக்கின்றார் என்பதைமிகச்சுவாரஸ்யமாகபேசும் இந்த நாடகம் சிறுவர்களுக்கு ஓர் புதிய அனுபவத்தைக் கொடுத்திருந்தமை சிறப்பு.
ஒருமோட்டார்சைக்கிளும்ஒன்பதுபேரும் சிறுவர்களுக்காக சிறுவர்கள் ஆற்றுகையில் உருவான 'பசுவும் புலியும்' நாடகம் அனைத்துத் தரப்பினரையும் கவர்ந்திருந்தமை குறிப்பிட்டுச்சொல்லவேண்டிய ஒன்று.
தே.தேவானந்தின் எழுத்துருவிலும் நெறியாள்கையிலும் உருவான இந்நாடகம் சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கு இடையிலான நெருக்கத்தையும் உணர்வுகளையும் மிக அழகாகப் பேசியிருந்தது. இன்றையஅவசரஉலகஓட்டத்தில்எந்திரகதியில் அனைவரும் ஓடிக்கொண்டிருக்கின்றனர். பெற்றோர் குழந்தைகளைப் படிப்பிப்பதில் மாத்திரமே கவனமாயிருப்பதும்அவர்களின் சின்ன உலகைப்புரிந்துகொள்ளாமையையும் அவர்கள் தமக்கான உலகை தொலைக்காட்சி தொடர்களில் தோன்றும்சாகசகதாபாத்திரங்களோடுஉருவாக்கிக்கொள்வதையும் அதிலிருக்கும் ஆபத்துக்களையும் மிக பொறுப்புணர்வோடு பெற்றோரிடம் கொண்டு சேர்த்ததில் இந்த நாடகம் கவனம் பெற்றமை சிறப்பு.

**அரிச்சந்திர மயான காண்டம்**

இவைகளுக்குமத்தியில்பாரம்பரியக்கலையான கூத்துநாடகமான அரிச்சந்திரமயான காண்டம் இசை நாடகத்தினை நாட்டார் வழக்கியற்கழகம் வழங்கியிருந்தது. இன்று அருகிப்போயும் அடுத்ததலைமுறையினரிடம்சென்றுசேராமலும் போய்க்கொண்டிருக்கும் கூத்திசை நாடகக்கலையைஇன்றுவரையிலும்தொடர்ந்து முன்னெடுத்து வருகின்ற நாட்டார் வழக்கியற் கழகத்தின் மயான காண்டம் கூத்திசை நாடகம் சிறுவர் முதல் பெரியவர் வரையில் அனைவரையும் கவர்திருந்தமை கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகக்காணப்பட்டது.

**இது கூத்தல்ல நிஜம்**

போரின்பின்னர்சிதைந்துபோனபலகுடும்பங்களையும். அவர்களை நோக்கி படையெடுத்துவரும்நிறுவனங்களையும்பெண்களுக்கெதிராக முன்னெடுத்து வரும் வன்முறைகளையும் கூத்துடன் இணைத்து சமூக நாடகமாக கொடுத்திருந்தமை சிறப்பான ஒன்று.
இவ்வாறு பல்வேறுபட்ட பல நாடகங்களை திறந்தவெளி பஞ்சபூத அரங்கினில் தொடர்ந்து நிகழ்த்திவரும் செயல் திறன் அரங்க இயக்கத்தின் ஐந்தாவது நல்லூர் நாடகத்திருவிழா இது என்பது குறிப்பிடத்தக்கது. நிகழ்வின் மூன்றாம் நாள் சிறப்பு விருந்தினராககலந்துகொண்டபேராசிரியர் மௌனகுரு தனது உரையில் "வித்தியானந்தன் கா.சிவத்தம்பி சண்முகலிங்கம் நான் என பலரும் பெரும் பிரயத்தனங்களோடு அரங்கியலில் மாற்றங்களைக் கொண்டுவரப் பாடுபட்டோம்.
அவை இப்போது ஆறுதளிக்கக்கூடிய ஓர் நிலைக்கு வந்துவிட்டதை காண்கையில் பேரானந்தம் கொள்கிறேன். உண்மையில் நாங்கள் அரங்கின் மூலம் பல வியத்தகு மாற்றங்களை நிகழ்த்தலாம்ஆனால்நாம் முயல்வதில்லை. குழந்தைகளை மகிழ்வித்தல்என்பது ஒரு கடினமான கலை அதனை மிக எளிதாக செய்கின்றது இந்தசெயல்திறன் அரங்க இயக்கம். அடுத்த தடவை நானும் இந்த சிறுவர்களுக்காக எதையாவது செய்ய வேண்டும். அதனை செய்ய இந்தஅரங்குஎன்னைத் தூண்டுகின்றதுஉண்மையிலேயே இது செயல் திறனான ஓர் அரங்குதான்" எனபாராட்டினார்.
வெறும் கோவில் திருவிழாவோடு மாத்திரம் இந்தக் காலத்தை நிறுத்திக்கொள்ளாது கிடைத்த மணித்துளிகளைபொக்கிசமான மணித்துளிகளாகமாற்றி வரும் இந்த நல்லூர் நாடகத் திருவிழா அனைவரும்கொண்டாடப்படவேண்டிய ஒன்றே.




**சேவை நலன் பாராட்டு**




**திரு.சி.செல்வராஜா**
(உதவிக்கல்விப் பணிப்பாளர் – தமிழ், தீவகவலயம்)


எமது கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமை உணர்வுடனும் பக்தி சிரத்தையுடனும் தமது பணியை செவ்வனே செய்து மொத்த சேவைக் காலம் **32 வருடத்தை** நிறைவு செய்து **அகவை அறுபதில் 16.08.2017 புதன்கிழமை** ஓய்வுபெறுகின்ற **திரு.சி.செல்வராஜா** அவர்களை ஓய்வுக்காலத்தில் தனது குடும்பத்தினருடன் குதூகலமாகவும், சுகபலத்துடனும் வாழ இறைவனைப் பிரார்த்தித்து மனதார வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நலன்புரிகழகம், வலயக்கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.**









# கரையேற மறுக்கும் ஓடங்கள்

## கச்சிதமாக அரங்கேறிய ஆற்றுகை

அருட்திரு. தமிழ் நேசன் அடிகள்

வடக்கு மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரனையில், கலைஞர் வேல் ஆனந்தனின் ஆடலமைப்பு நெறியாள்கையுடனும் இசைச்சித்தர் யாழ். நாச்சிமார் கோவில் கண்ணனின் இசையமைப்புடனும், திருமதி சூரிய யாழினி வீரசிங்கத்தின் நட்டுவாங்கத்துடனும் வவுனியா ஆடலணியினரால் ஆற்றுகை செய்யப்பட்ட 'கரையேற மறுக்கும் ஒடங்கள்' கீழைத்தேய ஆடல் கதை, வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் கடந்த மாதம் 28ஆம் திகதி மாலை 4 மணியளவில் அரங் கேறியது.

### சமகாலப் பிரச்சினைகள்

கலை கலக்காக அல்ல, அது மக்களுக்காக் மக்கள் சுயம் சாராத எந்தக் கலை வடிவமும் மக்களிடமிருந்து அன்னியப்பட்டே நிற்கும் என்பது திரு. வேல் ஆனந்தன் அவர்களின் உறுதியான நிலைப்பாடாகும். இந்த இலக்கை அடிப்படையாக வைத்தே இவருடைய நீண்ட நெடிய கலையுலகப் பயணம் தொடர்கிறது.

வழக்கமாக புராண, இதிகாச இலக்கியம் சார்ந்த கதைகளையே ஆடல் கதைகளாக (நாட்டிய நாடகம்) அளிக்கை செய்வது வழக்கம். ஆனால் இங்கு எமது இளைய சமூகத்தின் இன்றைய சமகாலப் பிரச்சினைகளை இந்த ஆடற்கதையினூடாக வெளிக்கொண்டுவந்தமையும், அதன் சமர்பித்தல் பாங்கும் இத்தகைய ஆற்றுகை வரலாற்றில் ஒரு புதிய பரிமாணத்தைத் துல்லியப்படுத்தி நிற்கும் பெரும் சாதனையாகும். இது மிகைப் படுத்தப்பட்ட கருத்தல்ல.

அதீத அலைபேசிப் பாவனையால் ஏற்படும் விபரீதங்கள், காதல் என்ற வலையில் பெண்களைச் சிக்கவைத்து, அவர்களைத் தம் ஆசைக்கு இரையாக்கியபின்னர் தூக்கி யெறிந்துவிட்டுச் செல்லும் வக்கிரபுத்தி படைத்த சில ஆண்களிடம் இலகுவில் காதல் வயப்பட்டு ஏமாற்றப்பட்டுச் சீரழியும் இளம்பெண்கள். கூடாத நட்பினால் போதைப் பொருள் பழக்கத்திற்கும் புகைத்தல் பழக்கத்திற்கும் உள்வாங்கப்பட்டு இந்த செயல்களுக்கு வேண்டிய பணத்திற்காக கூடி கொள்ளையடித்து பங்கு போடும் விடயத்தில் ஏற்படும் வாழ்வெட்டு சம்பவங்கள், மது போதைக்கு அடிமையான கணவன்மாரினால் துன்பு றுத்தப்படும் குடும்பப் பெண்களின் அவலங்கள் என்பன இந்த ஆடல் கதையின் ஊடாக வெளிக்கொணரப்பட்டமைகுறிப்பிடத்தக்கது.

செவ்வியல் சார்ந்த படைப்பாக கதையின் அறிமுக காட்சி இருந்த போதும் அதன்பின்னால் வரும் சமூகமயப்பட்ட காட்சிகளுக்காக அவற்றை மிக மிக இலகுவாக்கி மக்களுடன் சங்கமிக்கத் தக்கதான ஆடல் அமைப்பு அமைந்திருந்தமை குறிப்பிடதக்கதுடன் அது அரங்க செயற்பாடு என்பதற்கு அப்பால் ஒரு வீட்டு முற்றத்தில் நடக்கும் சம்பவங்களைப் பார்ப்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்தியது.

### உணர்வுபூர்வமான நடிப்பாற்றல்

இந்த அளிக்கையில் பங்கெடுத்து நடித்த எல்லோருமே தாம் ஏற்றுக்கொண்ட பாத்திரமாகவே மாறி இருந்தார்கள் கள நிலைக்கு ஏற்ப அவர்கள் வெளிப்படுத்திய அபிநயங்கள், முகபாவ வெளிப்பாடுகள் இயல்பாக அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. பாத்திரங்கள் ஒவ்வொன்றையும் தனித்தனியாக விபரிப்பது இதில் அசாத்தியம். உதாரணத்துக்கு .....கதைபற்றிய கட்டியம் கூறும் நாரதர் பாத்திரம் ஏற்றிருந்தவரின் இயல்பான, அழுத்தமான அதே நேரம் அது மயமாகி நின்ற காட்சியைப் பிரமாதமென்பதா....? அன்புதமென்பதா.....? தாயாகவும் மகளாவும் மகளின் தோழியாகவும் பாத்திரமேற்றிருவர்களின் முகபாவம் உடல் சார்ந்த உணர்ச்சி வெளிப்பாடுகள் சபையோரை கண்கலங்க வைத்தது ஆச்சரியமல்ல இவற்றுக்கு ஆதாரமான இசையமைப்பை வழங்கிய இசைச் சித்தர் கண்ணனுக்கும் மற்றைய அணிசேர் கலைஞர்களும் எமது உயர்நிலைப் பாராட்டுகளுக்கும் அப்பாற்பட்டவர்கள்.

சமகால சம்பவங்களை, ஒரு சமூக நாடகத்தின் ஊடாக மிகவும் இலகுவாகவும் எளிதாகவும் சொல்லிவிடலாம். ஆனால் அதையே ஒரு ஆடற்கதையின் ஊடாக வெளிக் கொணர்வது இலகுவானதல்ல. எனினும் அந்த முயற்சியில் நெறியாளரும் அவர்வழி நின்ற ஏனைய கலைஞர்களும் வெற்றிபெற்றுள்ளனர் எனலாம்.

### பாடல்களும் பின்னணி வாத்தியங்களும்

இந்த ஆடற் கதை பாடலும், சந்தைநடை உரையாடலும் கலந்ததாகவே அமைந்திருந்தது. பாடலைப் பாடியவர்கள் சிறப்பாக உணர்வு வெளிப்பாட்டோடு பாடியிருந்தனர். பார்வையாளர்களின் உணர்வுகளைத் தூண்டி கண்ணீரை வரவழைக்கும் அளவுக்கு அவர்களின் உணர்வுவெளிப்பாடு அமைந்திருந்தது. அதேபோன்று பின்னணி வாத்தியக் கலைஞர்களும் சூழ்நிலைக்கேற்ப அற்புதமாகத் தமது வாத்தியங்களை இசைத்து இந்த ஆற்றுகையின் வெற்றிக்கு வழிகோலினார்கள். ஆடல் கதை உருவாக்கம் என்பது ஒரு கூட்டு முயற்சி ஆகும். நெறியாளர், நட்டுவாங்கம் செய்பவர், நடனக்காரர், பாடகர்கள், பின்னணி வாத்தியக் கலைஞர்கள் ஒப்பனையாளர்கள் என அனைவருடைய பங்களிப்பும் சரியாக அமையும்போதுதான் அந்தப் படைப்பு வெற்றிபெறும், அதன் இலக்கையும் அடையும். அந்த வகையில் இங்கு அனைவருமே தத்தமது பொறுப்பை சிறப்பாகச் செய்திருந்தனர். எனினும் ஆண் பாத்திர வேடப்புனைவு சற்று கவனத்தில் கொள்ளப் பட்டிஇருக்கவேண்டும். இயக்குனர் கவனத்தில் எடுக்கவில்லைப்போலும்.......

### கவனத்தில்கொள்ளப்பட வேண்டியவை

கலைஞர் வேல் ஆனந்தன் அன்றுதொட்டு இன்றுவரை தனது பெரும்பாலான படைப்புகள் மூலம் சமூகத்துக்குரிய செய்திகளை சொல்லி வருபவர் அந்த வகையில் 'கரையேற மறுக்கும் ஓடங்கள்' ஆடல் கதை ஆற்றுகையும் இத்தகைய யதார்த்தை முன்நிறுத்தி காட்டுவதாக அமைந்தமை ஆச்சரியமன்று.

அதுமட்டுமன்றி வடமாகாண கலாசார திணைக்களத்தின் பின்னுட்டலையும் அவர் பெறுமானமாக்கியுள்ளார்.

வேல் ஆனந்தன் தனது படைப்புக்கள் பற்றிய விமர்சனத்தை எதிர்பார்ப்பவர். தனது கலைப்படைப்புக்கள் தொடர்பான நேர் மறையான கருத்துக்களை மட்டுமல்ல, எதிர் மறையான கருத்துக்களையும் வரவேற்கின்ற ஒரு பண்பட்ட, முதிர்ச்சிபெற்ற கலைஞர். 'விமர்சனம் இல்லாத எத்தகைய அரங்கச் செயற்பாடுகளும் வனாந்தரத்தில் வளர்ந்த வண்ணப் பூக்களுக்கு ஒப்பானது' என்ற அவருடைய கூற்று இதனை மெய்ப்பிக்கும்.'

இந்தக் கலைப்படைப்பின் ஊடாக சொல்ல வந்த விடயங்கள், எடுத்துக்கொள்ளப்பட்ட சமூகப் பிரச்சினைகள் எதுவும் புதுமையானவை அல்ல. காலம் காலமாகத் தமிழ்ச் சமூகத்தில் புரையோடிப்போன விடயங்கள் தான்..... இன்றைய சில எரியும் பிரச்சினைகளான போதைவஸ்துப் பாவனை, வீடுகளில் கொள்ளை அதை பங்கு போடும் விடத்தில் வாள்வெட்டுக் கலாசாரம் போன்ற சில பிரச்சினைகளை அழுத்திக் காட்டாமல் மேலோட்டமாகவே காட்டியுள்ளார்.

பிரச்சினைகள் முன்வைக்கப்பட்ட அதேவேளை அவற்றுக்கான தீர்வுகள் முன்வைக்கப் படவில்லை என்ற கருத்தும் இப்படைப்பு தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டது. பொதுவாக கலைஞர்கள் படைப்பாளி கள் என்போர் தாம் சார்ந்த சமூகத்தின் பிரச்சனைகளை அதன் தார்ப்பரியத்தை உணர்பூர்வமாகவும் அழகியல் செறிவோடும் முன்வைப்பவர்கள். இவர்களது ஆற்றுகை வீச்சின் முனையிலிருந்து வெளிக்கிழம்பும், கவனஈர்ப்புடன் கூடிய உந்துதலே சமூகவியளார்களை, கல்வியியளார்களை, சமயப்பெரியோர்களை, அரசியல்தலைவர்களை இது விடயத்தில் அக்கறை கொள்ளவும் உள்ளீர்க்கவும் வைக்கிறது........ எனவே படைப்பாளிகளே தீர்வையும் முன்வைக்க வேண்டு மென்பதில்லை

இந்தக் ஆடல் கதை தொடர்பாக இங்கு முன்வைக்கப்பட்ட பார்வைகள் தனி ஒருவரின் உளப்பாங்கு, விருப்பு, வெறுப்பு, அறிவு, அனுபவம் சார்ந்தவையே. இவைதான் இப்படைப்பு தொடர்பான முடிந்த முடிபு என்று கொள்ள முடியாது. பார்வைகள் பலவிதமாக அமையலாம். அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாகவும் அமையலாம்.

### சுகமான சுமைகள்

வழக்கமாக சில நிமிடங்கள் மேடையில் இடம்பெறும் நடன நிகழ்வுகளை - வேல் ஆனந்தனின் மொழியில் சொல்வதானால் 'ஆடல் துணுக்குகளை' - மேடையில் பார்த்து, இரசித்து கைதட்டிவிட்டுச் செல்வோம். ஆனால் ஆடல் கதையென்பது மிக மிக நீண்ட, அகலமான ஆழமான பரப்புடைய அரங்கவடிவமென்பதை நாம் மனதில் இருத்தி கொள்ள வேண்டும். இத்தகைய ஆற்றுகை வடிவத்துக்கு பின்னால் உள்ள தேடல், உழைப்பு, களைப்பு, எடுத்துக்கொண்ட காலம், பொருட்செலவு இவைபற்றி நாம் அதிகம் எண்ணிப் பார்ப்பதில்லை. மேலும் இன்றைய நிகழ்வு போன்ற, ஒன்றே முக்கால் மணி நேரக் கலைப்படைப்பை உருவாக்கி பயிற்சி அளித்து மேடையில் ஆற்றுகைப்படுத்துவது இலகுவான ஒரு விடயம் அல்ல. உச்சக்கட்ட முயற்சியும், அர்ப்பணிப்பும், பொறுமையும் தேவை. வெற்றிகரமாக அந்தப்படைப்பு அரங்கேறுமானால் அது சுகமான சுமை தான். அதை இன்றைய அரங்கில் உணரமுடிந்தது. இந்த அரிய பெரும் முயற்சி வவுனியா அரங்கோடு மட்டும் முடிந்து விடாமல் வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் ஆற்றுகை செய்ய வடக்கு மாகாண கல்வி கலாசார அமைச்சு முன்வரவேண்டும் என்ற கோரிக்கையையும் வினயமாக முன்வைக்கின்றேன். உன்னதமான பல கலைப்படைப்புக்களை தமிழ்ச் சமூகத்திற்கு தந்து மக்கள் கலைஞனாகத் திகழும் வேல் ஆனந்தன் மற்றும் அவரோடு இணைந்து பணியாற்றும் அத்தனை கலைஞர்களும் பாராட்டுக்குரியவர்கள். இதுபோன்ற இன்னும் பல அரிய கலைப்படைப்புக்களை கலைஞர் வேல் ஆனந்தனிடம் இருந்து தமிழ் உலகம் எதிர் பார்த்து நிற்கின்றது.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

புதன்பொய்கை

புதன்கிழமை | 16 | ஓகஸ்ட் 2017

# அரங்கை மகிழ்வித்த ஆடிப்பிறப்பு விழா!

எஸ்.மல்லிகா



பண்டைய காலம் முதல் கொண்டாடப்பட்டு வரும் எமது கலை பண்பாட்டு நிகழ்வுகளை மங்கவிடாது அடுத்த சந்ததிக்குக் கையளிக்கும் அரிய செயற்பாட்டினை வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. பருவ காலங்களுக்கேற்ற நிகழ்வுகளை மக்கள் முன்னிலையில் ஆற்றுகை செய்து, பண்பாட்டுப் பேணுகையை மேற்கொள்கிறது. அதில் ஆடிப் பிறப்பு விழாவும் ஒன்றாகும். திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச செயலக மட்டங்களில் இந்த விழா சிறப்புற கொண்டாடப்பட்டு வருகிறது. அந்த வகையிலே, வலி.தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் ஆடிப்பிறப்பு விசேட நிகழ்வானது வடலியடைப்பு கலைவாணி கலைமன்றத்தினால் கடந்த 22 ஆம் திகதி கலையரங்க முன்றலில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வுகள் ஆடி மாதத்துக்குப் புதுக் களையை ஏற்படுத்தியிருந்தன எனலாம்.

### பண்பாட்டு நிகழ்வுகள் இனத்தின் வேர்கள்

ஒரு இனத்தின் அடையாளத்தைப் பறைசாற்றி நிற்பது பண்பாடும் அது சார்ந்த மொழியும் கலாசாரமும் ஆகும். இவையிரண்டும் அந்த இனத்துக்குரிய வேர்கள். இதன் வழியே, தமிழர்களின் அடையாளத்தை உலகுக்குக் காண்பிக்க எத்தனையோ பண்பாட்டு நிகழ்வுகளும், கலாசார விழாக்களும் இடம்பெறுகின்றன. அதில் ஆடிப்பிறப்புப் பண்டிகையும் ஒன்று.

ஆடி மாதத்தின் முதல்நாள் ஆடிப்பிறப்புப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. சூரியன் வடதிசை நோக்கிச் செல்லும் தை முதல் ஆனி வரையான ஆறு மாதங்கள் உத்தராயண காலம் எனப்படும். அதுபோல் சூரியன் தென்திசை நோக்கிச் செல்லும் ஆடி முதல் மார்கழி வரையான ஆறு மாதங்கள் தட்சணாயன காலம் எனப்படும். இந்தத் தட்சணாயன காலத்தின் ஆரம்பமே ஆடி மாதமாகும். தேவர்களுக்கு இரவுப் பொழுது ஆரம்பிக்கும் மாதம் இதுவென்றே கூறப்படுகிறது. அதுமட்டுமன்றி மழைக் காலத்தின் ஆரம்பம் எனவும் இந்த மாதத்தை முன்னோர்கள் கூறினர். ஆடிப்பிறப்புப் பண்டிகையின் சிறப்பான அம்சமாகக் கருதப்படுவது, ஆடிக்கூழும் கொழுக்கட்டையும் சமைத்துச் சுற்றத்தோடு மகிழ்ந்துண்ணலும், மற்றும் கலை விழாக்களை சிறப்புற நடத்துவதுமே ஆகும்.





### விழிக்கும் செவிக்கும் விருந்தளித்த நிகழ்வு

பொதுவாக ஆடி மாதத்தில் வெப்பம் நிறைந்திருக்கும். இதனால் மக்கள் எரிச்சலும் சோர்வும் அடைந்திருப்பர். இந்த எரிச்சலையும் சோர்வையும் போக்க இந்துக்கள் பல்வேறு கலை நிகழ்வுகளை ஆற்றுகை செய்து மகிழ்கின்றனர். ஆடிப்பூரம், ஆடி அமாவாசை முதலான விரதங்களை கடைப்பிடித்தும் வருகின்றனர். அதுமட்டுமல்லாது ஆடி மாதம் அம்மனுக்குரியது என்றும் போற்றி, இந்த மாதத்தைத் தெய்வீகமாகவும் மாற்றுகின்றனர். வெப்ப மிகுதியைத் தணிக்க வீடுகள் தோறும் வேப்பிலையைக் கட்டுகின்றனர். உடற் சூட்டைக் குறைக்க கூழைத் தேடிக் குடிக்கின்றனர். இவற்றையெல்லாம் அடுத்த சந்ததிக்கும் சொல்லும் நிகழ்வாக ஆடிப்பிறப்பு விழா குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது.

கலைவாணி கலைமன்றத்தினால் கொண்டாடப்பட்ட ஆடிப் பிறப்பு விழா, பாரம்பரிய விளையாட்டான கிளித்தட்டுடன் ஆரம்பமானது. இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி நேசரட்ணம் செல்வகுமாரி கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினர்களாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி தக்சாயினி செல்வகுமார், வடலியடைப்பு கிராம சேவகர் அருள் ஞானானந்தன், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் றொபின்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். மதிப்புறு விருந்தினர்க ளாக வடலியடைப்பு கிராம ஆசிரியர்கள், சமாதான நீதவானும் வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத் தலைவருமான எஸ். சுதர்சன், வடலியடைப்பு கலைவாணி இளைஞர் மன்றத் தலைவர் எஸ்.மதுரங்கன், சமாதான நீதவானும் கலைவாணி பெண்கள் அமைப்பின் தலைவருமான திருமதி உ.பூமணி ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

விருந்தினர்கள் அனைவரும் பாரம்பரிய இன்னிய ஆற்றுகை மற்றும் கற்பகச்சோலை சிலம்பாட்டக் குழுவினரது கம்பு சுற்றுதல், பந்து விளையாட்டு, பொய்க்கால் ஆட்டம் ஆகிய கலை நிகழ்வுகளோடு அழைத்து வரப்பட்டனர். நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர் மற்றும் பார்வையாளர்கள் அனைவருக்கும் கூழும் கொழுக்கட்டையும் விருந்துபசாரமாகப் பரிமாறப்பட்டன. மாணவர்களின் மனதை மயக்கும் நடனம், பாடல், வில்லுப்பாட்டு, தாளலயம் ஆகிய கலை நிகழ்வுகள் விருந்தினர் மற்றும் சபையோரின் கண்களுக்கும் செவிகளுக்கும் இன்னிசை விருந்தாக அமைந்தன. அத்துடன், 'அடியோ பரிசு' எனும் சிறப்பு நாடகமும் ஆற்றுகை செய்யப்பட்டது. நிகழ்வுகள் அத்தனையும் சிறப்பாக இடம்பெற்றன.

### கலைஞர்களுக்கு மதிப்பளிப்பு

கலைக்குச் சேவையாற்றுவோர், அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிக்கப்பட வேண்டும். அவர்களின் உழைப்பையும் மதிப்பையும் அடுத்தவர்களுக்கு எடுத்துச் சொல்ல இந்தக் கௌரவிப்பு பேருதவியாக அமையும். அந்த வகையில், இளங்கலைஞர் விருதுக்காக சண்டிலிப்பாய் பிரதேச மட்டத்தில் தெரிவாகிய செல்வி யாழினி யோகேஸ்வரன், இன்னிய ஆற்றுகைக் குழுவின் தலைவராகச் செயற்பட்டு வரும் நவராஜா தனுசன் ஆகியோர் விழா ஏற்பாட்டாளர்களால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டனர். இவர்கள் இருவரும் கலை வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்து வருபர்கள். அதற்காகத் தம்மை அர்ப்பணித்து உழைப்பவர்கள். இவர்களின் கலைச்சேவை எம் சமூகத்துக்குத் தேவை. இவர்களுடைய கலைப்பயணம் சிறக்க, இறையாசிகள்.

இன்றைய இயந்திர உலகில் நாம் எத்தனையோ கலாசார நிகழ்வுகளையும், பண்பாட்டு மரபுகளையும் மறந்து, பறவைகளாய் பறந்துகொண்டிருக்கிறோம். தொழிநுட்பத்துள் தொலைந்து, எமக்கான அடையாளங்களை எம்மையும் அறியாமல் தொலைத்துக்கொண்டிருக்கிறோம். "மறந்து கொண்டிருப்பது மனிதர் இயல்பு, ஞாபகப்படுத்த வேண்டியது எமது கடமை" என்ற அமெரிக்க அறிஞரின் கூற்றுக்கிணங்க, வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் தக்க தருணங்களில் கலை கலாசார பண்பாட்டு நிகழ்வுகளை முன்னெடுத்து அவற்றை எமக்கு மீள் நினைவூட்டுகின்றது. இதன் செயற்பாடுகள் உள்ளவரை, எமக்கான அடையாளங்கள் நிலைத்திருக்கும்.











கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்முனையில் நடத்திய தமிழ் இலக்கியப் பெருவிழாவின் இரண்டாம் மூன்றாம் நாள் நிகழ்வுகள் அண்மையில் சிறப்பாக நடைபெற்றன. எழுத்தாளர்கள், இலக்கிய வாதிகள் உள்ளிட்ட பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (30)

# பழந்தமிழ் இலக்கியத்தில் ஊழ்-09

எஸ்.மல்லிகா

இலக்கியங்கள் மனிதர்களுக்கு நல்வழிகாட்டி, அவர்களைச்சீர்மிய வழியில் நடத்திச் செல்பவை. நல்வினை தீவினை குறித்து இடித்துரைத்து, அவர்களைச் சிறப்புற வாழ்விப்பவை. இந்த இருவினை குறித்து இந்துக்கள் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தனர். இவர்களைப் போன்றே சமணர்களும் பௌத்தர்களும் இதில் பெருநம்பிக்கை கொண்டிருந்தனர். இதனை சீவகசிந்தாமணி, நீலகேசி, குண்டலகேசி, யசோதரகாவியம் முதலான காப்பியங்களில் காணமுடிகிறது.



**சீவகசிந்தாமணி குறிப்பிடும் ஊழ்**

சச்சந்தன் என்ற மன்னனுக்கு மகனாக, அரசியின் வயிற்றில் உருவானவன் சீவகன். எனினும், விதி வசத்தால் அவன் சுடுகாட்டில் பிறக்கிறான். பின்னர் வணிகன் ஒருவனின் வீட்டில் வளர்கிறான். அச்சணந்தி என்னும் ஆசானிடம் கல்வி பயில்கிறான். இவன் சிறந்த தோற்றப் பொலிவு கொண்டவன். மிக்க அறிவு நிரம்பியவன். பல்வேறு கலைகளிலும் வல்லவன். சிறந்த வீரன். இவன் எட்டு மங்கையரை மணந்து கொள்கிறான். இவ்வாறு பலமணம் புரிந்தவன் ஆனாலும், இவன் ஒரு காமுகனாக அன்றி சிறந்த மன அடக்கம் கொண்டவனாகவே சித்திரிக்கப்படுகிறான். இவ்வாறு பல பெண்களை மணம் புரிந்ததன் மூலம், பணப் பலத்தையும் படைப்பலத்தையும் பெருக்கிக் கொண்டு அரசபதவியை அடைகிறான். முப்பது ஆண்டுகள் நீதியுடன் ஆட்சி செய்த சீவகன், ஆட்சிப் பொறுப்பை மகனிடம் கையளித்துவிட்டுத் துறவறம் பூண்டு முத்தி பெறுகிறான். அதுவரை அவன் வாழ்வில் பட்ட அனைத்துத் துன்பங்களுக்கும் ஊழ்வினைதான் காரணம் என்று கூறுகிறார் திருத்தக்கதேவர்.

சமயச் சிந்தனையில் குறிப்பிடத்தக்கது ஊழ்வினை. சீவகன் எட்டுப் பெண்களை மணந்து பின்னர் அவர்களைப் பிரிந்து செல்வதற்கு ஊழ்வினையேகாரணம்என்று கூறப்படுகிறது. "வாழ்வுப் பயிருக்கு நோய் செய்வன தீவினையாகிய விலங்கு" என்றும், "வினையது விளைவின் வந்த வீவரும் (நீக்க முடியாது) துன்பம்" என்றும் வினைக்கோட்பாடு பல இடங்களில் சுட்டப்படுகிறது. சீவகனின் தாயாரான விச்யை உற்ற துன்பத்துக்கும் ஊழ்வினைதான் காரணம் என்கிறார் காப்பிய ஆசிரியர்.

*"உம்மை நின்றதொர் ஊழ்வினை உண்மையால்*
*இம்மை இவ்இடர் உற்றனள்"* என்ற பாடல் வரிகள் மூலம் இதனை அறிந்துகொள்ள முடிகிறது.

சமய நம்பிக்கைகளில் குறிப்பிடத்தக்க மற்றொன்று, மறுபிறப்புக் கோட்பாடு. இதில் முற்பிறப்பும் அடங்கும். சீவகன் முற்பிறப்பில் அசோதரனாகப் பிறந்தவன்; சீவகன் தேவியர் தேவருலகில் இந்திரராய்ப் பிறந்தான். அவனுடைய வளர்ப்புத் தந்தையின் மகனாகிய நந்தட்டன் தேவனாகப் பிறந்தான் எனச் சமண சமயப் பிறப்புக் கோட்பாடு அமைகின்றது. அதேபோன்று இளமை, செல்வம், உடல் பற்றிய நிலையாமைக் கோட்பாடும் சீவகசிந்தாமணியின் சமயச் சிந்தனைகளில் குறிப்பிடத்தக்கது.

"முன்னிட்ட பசளை, பின்னிட்ட விளைச்சல்" என்ற பழமொழிக்கிணங்க அவரவர் வினைகளே, அவரவர் தலைவிதியைத் தீர்மானிக்கின்றன. அவரவர் பிறப்பையும் நிர்ணயிக்கின்றன. இங்கே முன்வினைப் பயனை நந்தட்டன் பிறப்பு மூலம் ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

"குரவரைப் பேன லின்றிக் குறிப்பிகள் தாயபாவம்
துரவந்த பயத்தினாலித் தாமரைப் பாதநீங்கிப்
பருவருந் துன்ப முற்றேன் பாவியே னென்று சென்ன
தருவடி மிசையின் வைத்துச் சிலம்ப னெறத் தடுதிட்டான்"

முற்பிறப்பில் தாய், தந்தை, ஆசிரியர், அரசர், மேலோர் ஆகிய முதுபெருங் குரவர்களைப் பேணாமலும், அவர்கள் சொல்லுக்குப் பணியாமலும் இருந்த பாவத்தால் உண்டான பயனால் இப்பிறப்பில் தாமரை மலர்போலும் இத்திருவடிகளைப் பிரிந்து பாவியேன் நான் பெருந்துன்பம் அடைந்தேன் என்று கூறித் தன் முடியை சீவகன் திருவடியில் வைத்து நந்தட்டன் அலறினான் என்று சீவகசிந்தாமணி முற்பிறப்பில் செய்த வினையை எடுத்துரைக்கின்றது.

இதேபோன்று, ஊழ்வினையானது பிறவிதோறும் தொடர்ந்து வந்து அவரவர் செயலுக்கேற்ற விளைவைக் கொடுக்கும் என்பதனைப் பின்வரும் பாடலில் குறிப்பிட்டுள்ளார் திருத்தக்கதேவர்.

*"இனமாம் என்றுரைப் பினும் ஏதமெனான்*
*முனமா கியபான் மைமுளைத் தெழலாற்*
*புனமா மலர்வேய் நறும்பூங் குழலாள்*
*மனமா நெறியோ டியமன் னவனே"*

பெண்களின் மீது ஆசைப்பட்டு மன்னவனுக்கு இருக்கக் கூடிய நெறியை மறந்து இப்படிப்பட்ட செயலால் பழியேற்ற முன்னே கூறிய தேவர்கிளன் நிலைக்கொப்பானது என்று கூறியும் அந்தத் தவறை உணராதவனாகி முற்பிறப்பின் தீவினை முன்வந்து தோன்ற முல்லை நறுமலர் சூடிய மணமிகுந்த அழகிய கூந்தலையுடைய விசயை விரும்பி இரச நெறியை மறந்தவன் ஆனான் என்று சீவகன் தந்தை நிலையைக் கூறுகிறார் திருத்தக்கதேவர்.

அதேபோன்று, பிறவித்துன்பம் குறித்தும் திருத்தக்கதேவர் குறிப்பிடுகிறார். இதற்கும் அவரவர் வினைதான் காரணம் என்று கூறப்படுகிறது.

*"தேவரே தாமு மாகித் தேவராற் றெழிக்கப் பட்டும்*
*ஏவல்செய் நிறைஞ்சிக் கேட்டும் அணிகமாய் பணிகள் செய்தும்*
*றோவது பெரிதுஞ் துன்ப நோயினுட் பிறத்தல் துன்பம்*
*யாவதும் துன்ப மன்னா யாக்கை கொண்டவர் கொன்றாம்"*

முற்பிறப்பில் செய்த ஊழ்வினைதான் இப்பிறப்பில் துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது என்கிறது இப்பாடல். தாம் செய்யும் வினைகள்தான் தமது பிறப்பை நிர்ணயிக்கின்றன என்று தெரிந்திருந்தும், மனிதர்கள் தீவினை புரிகின்றனர். இதுகுறித்த அச்சம், அநேகமானோரிடம் இருப்பதில்லை.

(தொடரும்...)

"வாழ்வுப் பயிருக்கு நோய் செய்வன தீவினையாகிய விலங்கு" என்றும், "வினையது விளைவின் வந்த வீவரும் (நீக்க முடியாது) துன்பம்" என்றும் சீவகசிந்தாமணியில் வினைக்கோட்பாடு பல இடங்களில் சுட்டப்படுகிறது. தாம் செய்யும் வினைகள்தான் தமது பிறப்பை நிர்ணயிக்கின்றன என்று தெரிந்திருந்தும், மனிதர்கள் தீவினை புரிகின்றனர். இதுகுறித்த அச்சம், அநேகமானோரிடம் இருப்பதில்லை

---

வேலணை தெற்கு தாழையம் பதி சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற ஆடி வேல் தீர்த்தோர்சவ விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக கவிஞர் வேலணையூர் தாஸின் தலைமையில் 'மயிலேறும் மன்னவா எம் மனமேற இங்கு வா' என்ற தலைப்பில் கவியரங்கம் இடம்பெற்றது. பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு தத்தமது கவிதைகளை வாசித்தனர். (ம)







# ஜேர்மனியில் 'மெகா பமிலி' எமக்குச் சொல்லும் பாடம்

■ வி.சிவராசா

மனித வாழ்வில் பிள்ளைச் செல்வப் பேறு என்பது கிடைத்தற்கரியது. எவ்வளவு புனிதமானது. மனிதன் தான் வாழ்ந்த அடையாளத்தின் பிரதிபலனாக இன்னொரு உயிரை இந்த மண்ணில் உருவாக்கிவிட்டுச் செல்கிறான். இது இயற்கையின் நியதி. இதில் வெள்ளைக்காரரைப் பொறுத்தளவில், ஒரு குடும்பத்தில் இரண்டு அல்லது மூன்று பிள்ளைகளைப் பெற்று அன்போடு வளர்ப்பார்கள். அதவாது, அளவோடு பெற்று வளமோடு வாழ்வார்கள். மகிழ்வோடு இருப்பார்கள். எம்மவர்களைப் பொறுத்தளவில், நான்கு தொடக்கம் ஐந்து பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வார்கள். இது தற்போதும் நடைமுறையில் இருக்கிறது.

### அருகிவரும் பிள்ளைப்பேறு

முன்னைய காலங்களில் பத்து தொடக்கம் பன்னிரண்டு பிள்ளைகள் பெற்றவர்கள்தான் அதிகம் உள்ளனர். திருமண நிகழ்வுகளில், "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்க" என்று நல்லுள்ளங்கள் வாழ்த்துவது பதினாறு வகைப் பேறுகளுக்குப் பதிலாக, பதினாறு பிள்ளைச் செல்வங்களை அத்தம்பதியர் பெற்றெடுப்பதற்கு வழிவகுப்பதும் உண்டு. கால ஓட்டத்தில் ஐந்து தொடக்கம் ஆறு பிள்ளைகளாக மாறி, இப்போது மூன்று தொடக்கம் நான்கு எனக் குறைந்துவிட்டது. பல தம்பதியர், "ஆசைக்கு ஒன்று, ஆஸ்திக்கு ஒன்று" என பிள்ளைச் செல்வங்களைப் பேறாக்கும் நிலைதான் இன்று பெருவழக்காக உள்ளது.

### ஜேர்மனியில் மெகா பமிலி

முன்னர் எமது தாய்மார்கள் 10 தொடக்கம் 12 பிள்ளைகளைப் பெற்றெடுத்துத் திடகாத்திரமாகவும், உடற்கட்டோடும் அனைத்து வேலைகளையும் செய்து குடும்பத்தைக் காப்பாற்றினர். ஆனால், இன்றோ ஒரு பிள்ளையைப் பெற்றுவிட்டு ஐயோ... குய்யோ... என்று குளறியடித்து ஒப்பாரி வைக்கும் தாய்மார்கள்தான் அதிகம் உள்ளனர். இவர்கள் ஒருபுறம் இருக்கட்டும். இங்கே குறிப்பிட வரும் குடும்பத்தைப் பாருங்கள். பத்துப் பிள்ளைகளைப் பேறாக்கி விட்டுத் தற்போது 11ஆவது பிள்ளைக்கும் தாயாகியிருக்கிறார் இந்தக் குடும்பத் தலைவி. இந்த மாதம் அந்தப் பிள்ளையும் பிறக்கப்போகின்றது. ஜேர்மனி நாட்டவர்களான இவர்களுள் தாயின் பெயர் கிளவ்டியா (Claudia), வயது 38. அவருடைய கணவரின் பெயர் அலெக்ஸ்சாண்டர் (Alexa nder), வயது 43. இவர் ஒரு அரச அதிகாரியாவார் (Justizbeam ter). இவர்களின் மூத்த பிள்ளையான சாமுவேலுக்கு (Samuel) 15 வயதாகிறது. கடைசிப் பிள்ளையான வலன்டைனுக்கு (Valentin) ஒரு வயது. இதில் வேடிக்கை என்னவென்றால், முதலாவதும் கடைசியும் ஆண்கள். மிகுதி எட்டுப் பேரும் பெண் பிள்ளைகள். 2000ஆம் ஆண்டில்தான் இவர்கள் திருமணம் முடித்தனர். 17 வருடங்களில் 11ஆவது குழந்தையும் பிறக்கப் போகின்றது என்பது பெருமைதான். இவர்கள் வருடாவருடம் ஒரு பிள்ளை பெற்றிருக்கின்றனர். உண்மையில் இந்தப் பெண்மணி பிள்ளை பெறும் இயந்திரம் போல்தான் செயற்பட்டிருக்கிறார். பல இன்பங்கள் மத்தியிலும் அநேக துன்பங்கள், துயரங்கள், வேதனைகள், சோதனைகள் தாண்டியும் புன்முறுவலோடு 11ஆவது பிள்ளையையும் பெற்றுக்கொள்ளப் போகின்றார்.

இந்தக் குடும்பத்தைப் பார்த்தால், ஒரு கூட்டுக் குடும்பத்தைப்போல் அனைத்து வேலைகளையும் பிள்ளைகள் குழுவாகப் பங்கிட்டுச் செய்துகொள்வார்களாம். சமையல் வேலை, பொருட்கள் கொள்வனவு செய்தல், உடை கழுவுதல், வீடு சுத்தம் செய்தல், உடைகள் அடுக்கி வைத்தல், படித்தல், இளையவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தல் போன்ற இன்னோரன்ன வேலைகளைத் தாமாகவே செய்துகொள்வார்கள். இக்குடும்பத்திடம் 2 சிறியரக பேருந்துகள் (மினிபஸ்) உண்டு. இவற்றைப் பராமரிப்பது மட்டுமல்ல, தாய் தந்தையரோடு வாரத்தில் இரண்டு மூன்று தடவைகள் கடைகளுக்குச் சென்று பொருள் கள் கொள்வனவு செய்வார்கள். எல்லா வேலைகளுக்கும் உதவியாக பக்கபலமாக வளர்ந்த பிள்ளைகள் இருந்து வருகிறார்கள்.

### குடும்பத்தைப் போல் வீடும் மிகப்பெரிது

இவர்களுடைய வீடு, 200 (QM) சதுரமீற்றர் பரப்பளவுள்ள 8 அறைகள் கொண்ட பெரிய வீடு. நான்கு குளியலறைகள் உண்டு. ஆறு இடங்களில் குப்பை வாளிகள் வைக்கப்பட்டுள்ளன. உடை கழுவும் இயந்திரம் 3, பாத்திரங்கள் கழுவும் இயங்திரங்கள் 3 காணப்படுகின்றன. ஒரு தொழிற்சாலைபோல் இந்த வீட்டில் அனைத்து இயந்திர சாதனங்களும் செயற்பட்டுக்கொண்டிருக்கும். இவற்றைவிட வானொலி, தொலைக்காட்சி, கணினி, தொலைபேசி, கைபேசிப் பரிவர்த்தனைகளும் எந்த நேரமும் தொழிற்பட்டுக் கொண்டிருப்பதால், மின்சாரக் கட்டணமும் மிகமிக அதிகம்தான். வருடா வருடம் ஒரு பிள்ளை கிடைத்து வருவது கடவுளின் நன்கொடை என்று இத்தம்பதிகள் கூறுகின்றனர். நன்மையோ தீமையோ எது நடந்தாலும், மனிதர்கள் கடவுள் மீதுதானே கை காட்டுகின்றனர். கடவுள் ஒருவர் இருக்கிறார் என நம்புவதால்தானோ இந்தப் பூமிப்பந்தில் மனித உற்பத்திப் பெருக்கம் அதி கரிக்கின்றன. நன்மை தீமை, இலாபம்நட்டம், நல்லது கெட்டது என யாவும் நடந்தேறுகின்றன.

### கலகலப்பான குடும்பங்கள் அந்தக் காலத்தில்

எமது தாய்நாட்டை எடுத்து நோக்கினால், நானும் பத்துக்கு மேற்பட்ட பிள்ளைகள் பிறந்த குடும்பத்தில்தான் பிறந்தேன். நான் பிறந்த காலங்களில் பசி, பட்டினி தெரியாது. தொழில் வளங்கள் நிறையவே இருந்தன. பொருள், பண்டம், சொத்துப் பத்து, காணி பூமி, செல்வச் செழிப்பு என எல்லாம் தாரளமாகக் கிடைத்தன. ஆதலால், பல பெற்றோர் பத்துப் பன்னிரண்டு பெற்றுவிட்டால் போதும் அவர்கள் தானாகவே வளருவார்கள் என்று எண்ணும் ஒரு காலகட்டமாக அவை இருந்தது உண்மைதான். இவர்களில் ஒரு குடும்பமாகத்தான் எனது தாய் தந்தையரும் அடுக்கடுக்காக நிறையவே பிள்ளைகளைப் பெற்றுக்கொண்டனர். அப்போது வீட்டின் கலகலப்புக்கும் சந்தோசத்துக்கும் குறைவே இல்லை. அது ஒரு பொற்காலம்தான்.

### தமிழ்ச் சமூகம் தவறவிடும் பிள்ளைச் செல்வங்கள்

கால ஓட்டத்தில் தமிழ்ச் சமூகத்தவரிடையே பல நெருக்கடிகள், துன்பங்கள், துயரங்கள், பொருளாதார, வாழ்வாதாரப் பிரச்சினைகள் ஏற்பட்டன. விஞ்ஞானம், தொழில்நுட்ப வளர்ச்சி, கணினி, உலக மயமாக்கல் என விரிவு கண்டன. இதனால் பிள்ளைகளின் பிறப்பு வீதம் குறைவடைந்தது. இவற்றைவிட நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர், வன்முறைகள், இடப்பெயர்வுகள், அகதிவாழ்வு என இயல்பு நிலையற்ற புறவயத் துன்பங்கள் பெருகியதாலும் தமிழரின் பிறப்பு வீதம் குறைவடைந்து வருவதை நாம் காண்கின்றோம். சிங்கள இனத்தவர், முஸ்லிம் இனத்தவர்களின் பிறப்பு வீதம், சனத்தொகை வளர்ச்சி அதிகரித்துச் செல்லும் அதேநேரம், தமிழர்களின் சனத்தொகை வளர்ச்சி வீதம் என்பது குன்றி வருவதாகப் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

புலம்பெயர்ந்த தமிழர்களை எடுத்து நோக்கினாலும் ஒரு பிள்ளைப் பேற்றின் மகிழ்வோடு பிள்ளை பெற்றுக்கொள்வதைப் பல பெற்றோர் நிறுத்திக் கொண்டுவிட்டனர். இன்னும் சிலர் பிள்ளைகள் இல்லாமலே சுகமாக வாழ்ந்துவிடலாம் என முடிவெடுத்து விட்டனர். என்னைப் பொறுத்தளவில், தற்போதைய சூழலில் ஒரு குடும்பத்தில் குறைந்தது 3 தொடக்கம் 4 பிள்ளைகளாவது இருப்பதுதான் நல்லது என்று கருதுகிறேன். இது பிள்ளைகளுக்கும் நல்லது, பெற்றோருக்கும் நல்லது. இத்தகு இல்லங்களில் தான் ஆனந்தம் விளையாடும். விட்டுக் கொடுப்பு, புரிந்துணர்வு, அன்பு, பாசம், பரிவு, பணிவு, முயற்சி, திறமை, வெற்றி, தோல்வி என அனைத்தும் அனுபவம் செய்யப்படும். குடும்பத்தவரின் ஆற்றல் பெருகும். அறிவு வளரும். இவற்றால் வாழ்வு வளம்பெறும். மனிதநேயம் பெருகும். நல்ல மனிதர்களாக உலகில் வலம் வருவார்கள். தாமும் நல்ல படி வாழ்ந்து, பிறரையும் வாழ வைப்பார்கள். இதுகுறித்துச் சிந்தித்து, செயலாற்றுவார்களா தமிழர்கள்?



# ஓகஸ்ட் மாத பலன்

## மகரம்

தோல்விகளை வெற்றியின் படிகளாகக் கருதி எதைப் பற்றியும் கவலைப்படாமல் செயற்படும் மன உறுதி கொண்ட மகர ராசிக்காரர்களே! இந்தக் காலகட்டத்தில் பணவரத்துக் கூடும். வாக்கு வன்மையால் இலாபம் உண்டாகும். வீண் பயணங்களும், அலைச்சலும் உண்டாகும். இடமாற்றம் ஏற்படலாம். கெட்ட கனவுகள் தோன்றும். உஷ்ண நோய்கள் வந்து நீங்கும். நேரம் தவறி உண்பதைத் தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே திடீர் பூசல்கள் ஏற்பட்டுச் சரியாகும். குடும்பச் செலவுகள் கூடும். குடும்பம் பற்றிய கவலைகள் உண்டாகும். உறவினர்கள், நண்பர்களிடம் நிதானமாகப் பேசுவது நன்மை தரும். நெருப்பு மற்றும் ஆயுதங்களை பயன்படுத்தும்போது மிகுந்த எச்சரிக்கை தேவை.

தொழில், வியாபாரத்தில் மந்த நிலை காணப்படும். வரவேண்டிய பணம் தாமதமாக வரும். சரக்குகள் வருவதும் புதிய ஓடர்கள் கிடைப்ப தும் எதிர்பார்த்ததைவிடக் குறைவாக இருக்கும். தொழில், வியாபாரம் தொடர்பான அலைச்சல்கள் ஏற்படும். கவனமாக இருப்பது அவசியம். உத்தியோகத்தர்களுக்கு கடுமையான வேலை இருக்கும். பணி காரணமாக வெளியில் தங்க நேரிடும். அலுவலகத்தில் அனுசரித்துச் செல்வதும், தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்ப்பதும் நல்லது. வேலைப்பளு அதிகரிப்பதை ஒரு சவாலாகவே எடுத்துக்கொள்வது தான் இந்த காலகட்டத்துக்கு நல்லது, எதிர்கால நன்மைகளும் கிட்டும். அரசியல்வாதிகள் தொகுதிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் அக்கறை காட்டுவீர்கள்.
இதனால் தொகுதி மக்களிடம் நற்பெயர் கிடைக்கும்.

**கலைத்துறையினருக்கு:**
வேலைப்பளு அதிகமாக இருக்கும். வீட்டை விட்டு வெளியில் தங்க நேரிடும். தூக்கமில்லாமல் வேலை செய்ய வேண்டி வரும்.

**பெண்களுக்கு:** வீண் அலைச்சலும் பயணங்களும் ஏற்படலாம். நேரம் தவறி உண்பதை தவிர்ப்பது நல்லது. சாமர்த்தியமான பேச்சு இலாபம் தரும். ஆன்மிகப் பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

**மாணவர்கள்:** கவனம் சிதறாமல் பாடங்களைப் படிப்பது நல்லது. விளையாட்டுகளின் போது எச்சரிக்கை தேவை. வாகனங்களை உபயோகப்படுத்தாமல் இருப்பது நல்லது.

**பரிகாரம்:**
சனிக்கிழமையில் ஆஞ்சநேயரை வழிபடுவது கஷ்டங்களைப் போக்கும். மனதில்தைரியம் உண்டாகும்.

**அதிர்ஷ்ட கிழமைகள்:**
செவ்வாய், புதன், சனி.

# வரலாற்றில் இன்றைய தினம் 16.08.2017


1906 - சிலியில் பெரும் நிலநடுக்கம். 3 ஆயிரத்து 886 பேர் உயிரிழப்பு.

963-பைஸான்ரைன் பேரரசராக இரண்டாம் நைக்போறோஸ் போகாஸ் முடிசூடினார்.

1930-வர்ண, மற்றும் ஒலியுடன் கூடியதான முதலாவது கார்டூன் திரைப்படம் தயாரிக்கப்பட்டது.

1945-ஜப்பானிய தலைமை அமைச்சர் கன்ராறோ சுசுகி மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

1946-கொல்கத்தாவில் இடம்பெற்ற கலவரத்தில் 72 மணித்தியாலத்தில் 4ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.

1945 -ஸ்போட் இலஸ்ரேட்டட் சஞ்சிகையின் முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

1960 -பிரிட்டனிடம் இருந்து சைப்பிரஸ் சுதந்திரம் பெற்றது.

1987 -ஏனைய தமிழ் அமைப்புக்களுடன் மோதலைத் தவிர்க்கவே கூட்டணி விரும்புவதாக கொழும்பில் சிவா செவ்வி.

1992 - இராணுவத்தின் சூட்டுக்கு தெல்லிப்பழையில் பெண் சாவு.

1992-அராலியில் உயிரிழந்த சிப்பாய்களுக்கு அளிக்கும் கௌரவம் போரில் வெற்றிவாகை சூடுவதேயென பலாலியில் ரணில் உரை.

2005-அமைச்சர்கதிர்காமர் கொலை தொடர்பாக தலைநகரத் தேடுதல்களில் 52 பேர் கைது.

2006-தமிழ் இளைஞர்கள் மூவர் ஆலையடிவேம்பில் கொலை செய்யப்பட்டனர்.

2006-இளைஞரைச் சுட்டுக் கொன்று சடலத்தை ரயர்போட்டு எரிப்பு. கொக்குவிலில் ஊரடங்குவேளை நள்ளிரவில் பயங்கரம்.

2016 -அமைச்சர்களை விசாரிப்பதில் முதலமைச்சர் கடும் உறுதி.

# நாளை

**17.08.2017**
வியாழக்கிழமை

**ஆவணி - 01**

திதி: தசமி மு.இ. 11.26 வரை
நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ.10.35
சுபநேரம்: 07.35—09.05 வரை
ராகுகாலம்: 01.35—03.05 வரை









## குணச்சித்திர நடிகர் சண்முகசுந்தரம் நேற்று மறைவு

பிரபல குணச்சித்திர நடிகர் சண்முகசுந்தரம் உடல்நலக் குறைவால் நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 70.

அறுபதுகளிலேயே நடிப்பைத் தொடங்கிய சண்முகசுந்தரம், சிவாஜி கணேசன் நடித்த 'ரத்தத் திலகம்' மூலம் அறிமுகமானவர். அதன் பிறகு நத்தையில் முத்து, இதயக்கனி, ஆதித்யன், குறத்தி மகன், மாப்பிள்ளை அழைப்பு, சக்தி லீலை, லட்சுமி கல்யாணம், வாழையடி வாழை, அவளுக்கு நிகர் அவளே, கரகாட்டக்காரன், சென்னை 60028, தமிழ் படம் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். இயக்குநர் திலகம் கே.எஸ்.கோபாலகிருஷ்ணனின் பெரும்பாலான படங்களில் சண்முகசுந்தரம் முக்கிய வேடத்தில் தோன்றுவார். எத்தனையோ படங்களில் நடித்திருந்தாலும், கரகாட்டக்காரன் படம்தான் சண்முகசுந்தரத்தை மிகப் பிரபலமாக்கியது. அவர் நடித்த கடைசிப் படம் அன்பானவன் அடங்காதவன் அசராதவன். அண்ணாமலை, செல்வி, அரசி, வம்சம் உள்ளிட்ட தொலைக்காட்சித் தொடர்களிலும் சண்முகசுந்தரம் நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.







## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உடல்நலனில் அக்கறை தேவை. செயல் நிறைவேறுவதில் தாமதம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இலாபம் இருக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.

**இடபம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். பணியாளர்களுக்குச் சலுகை கிடைக்கும்.

**மிதுனம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்வர். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி நிறைவேற தாமதமாகும். திடீர் செலவால் சேமிப்பு பணம் செலவாகும்.

**கடகம்:** தாமதமான செயல் மளமளவென நிறைவேறும். நற்குணம் உள்ளவர்களின் நட்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவில் வளர்ச்சி உண்டாகும்.

**சிங்கம்:** இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் திருப்தி அளிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை விரைந்து நிறைவேற்றுவர்.

**கன்னி:** குழப்பமான சூழ்நிலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவர்.

**துலாம்:** நிதானமுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். இலாபம் சுமாராக இருக்கும். முக்கியச் செலவுக்கு சேமிப்புப் பணம் பயன்படும்.

**விருச்சிகம்:** கருத்து நிறைந்த பேச்சால் பிறரைக் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் சராசரி வருமானத்துடன், நிலுவைப் பணமும் கிடைக்கும்.

**தனுசு:** உங்கள் நலனில் கூடுதல் கவனம் செலுத்துவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் உயரும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**மகரம்:** உங்களை சிலர் குறை சொல்ல காத்திருப்பர். செயல்களில் சுறுசுறுப்பு அவசியம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கும்பம்:** எதிர்கால நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி விரைவில் கிடைக்கும்.

**மீனம்:** எதிரியையும் மன்னிக்கும் பெருந்தன்மை உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு மறையும். பணியாளர்கள், நிர்வாகத்தின் ஆதரவுடன் வளர்ச்சியடைவர்.





## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | | 2 | | 1 | | | 9 | |
| | | | | | 8 | 2 | 7 | 1 |
| | | 9 | 2 | | | | 5 | |
| | | | | | 2 | 5 | | 6 |
| | 2 | | | | | | 1 | |
| 6 | | 5 | 7 | | | | | |
| | | | | | 4 | 3 | | |
| 7 | 9 | 8 | 5 | | | | | |
| | 3 | | | 8 | | | | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 3 | 1 | 6 | 4 | 7 | 2 | 5 |
| 1 | 7 | 2 | 3 | 5 | 8 | 6 | 9 | 4 |
| 6 | 5 | 4 | 2 | 9 | 7 | 8 | 3 | 1 |
| 9 | 3 | 8 | 5 | 7 | 1 | 2 | 4 | 6 |
| 7 | 2 | 1 | 4 | 8 | 6 | 9 | 5 | 3 |
| 5 | 4 | 6 | 9 | 2 | 3 | 1 | 8 | 7 |
| 3 | 8 | 5 | 6 | 1 | 9 | 4 | 7 | 2 |
| 2 | 1 | 9 | 7 | 4 | 5 | 3 | 6 | 8 |
| 4 | 6 | 7 | 8 | 3 | 2 | 5 | 1 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண் களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக் கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ் வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங் கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமா கப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



முடி கொட்டுவதைத் தவிர்க்க இலகுவான வழி

ஒருவன் பழைய கட்டிடத்தினூடே சென்று கொண்டிருந்தான்.. அப்போது " அப்படியே நில்.. அசையாதே.." என்று ஒரு சத்தம். ஆனால் எங்கிருந்து வந்தது எனத் தெரியவில்லை.. என்றாலும் அசையாமல் நிற்க, அவன் போகவிருந்த வழியில் ஒரு சுவர் இடிந்து விழுந்தது. இவன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான்.. மற்றொரு நாள்.. பேருந்தில் ஏறப் போனபோது மீண்டும் அதே குரல்.. "இந்தப் பேருந்து வேண்டாம்.." என்றது. அவனும் அதைத் தவிர்த்து அடுத்த பேருந்தில் செல்லும்போது இவன் சென்றிருக்கவேண்டிய பேருந்து கவிழ்ந்திருப்பதைப் பார்த்தான்.. மிகவும் ஆச்சரியத்துக்குள்ளானவனாய், யார் என்னை ஒவ்வொரு முறையும் காப்பாற்றுவது..? என நினைத்தான்.. அதற்கும் உடனடியாக பதில் வந்தது.." நான் உன்காவல் தெய்வம்".

இவன் அடுத்தபடியாக கேட்டான். "ஓ காவல் தெய்வமே... என் கல்யாணத்தப்ப எங்கே போய்த் தொலைஞ்ச..?"



# தாக்குதல் திட்டத்தை ஆய்வு செய்தார் வடகொரிய அதிபர்

அமெரிக்காவின் பசிபிக் பிராந்தியமான குவாம் தீவு மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தும் திட்டம் குறித்து வடகொரிய தலைவர் கிம் ஜாங்உன் ஆய்வு நடத்தியதாக அந்நாட்டு அரசு ஊடகம் தெரிவித்தது.

குவாம் மீது தாக்குதல் நடத்தப் போவதாக கடந்த வாரம் வடகொரியா அறிவித்ததை அடுத்து, பதற்றம் அதிகரித்தது. குவாம் மீது சுற்றி வளைத்திருக்கும் நெருப்பு வளையத்துக்கான தயாரிப்புகள்' முடிவடைந்துள்ள நிலையில், வடகொரியாவின் கேந்திரப் பாதுகாப்புப்படை கமாண்டர், தாக்குதல் உத்தரவுக்காகக் காத்திருக்கிறார்.

அதே நேரத்தில், எந்த முடிவு எடுப்பதற்கும் முன்னதாக, அமெரிக்காவின் செயற்பாடுகளைக் கவனிக்க வடகொரியத் தலைவர் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் கூறுகின்றன. இது, ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைத் தணிக்க உதவும் என கருதப்படுகிறது.




## வேலையாள்கள் தேவை

கொழும்பில் இயங்கும் பொதிகள் சேவை நிறுவனத்திற்கு காசாளர், Bill கிளாக், உதவியாளர் உடன் தேவை.
ஆண்கள் மட்டும்.
உணவு தங்குமிட வசதி இலவசம்.
**077 386 6250**

## வேலையாள்கள் தேவை

No - 12, புகையிரத வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள Samsung (Singhagiri) நிறுவனத்தில் பணிபுரிவதற்கு வேலையாள்கள் தேவை (ஆண், பெண் இருபாலாரும்) ஆர்வமுடையவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையினை 21.08.2017 இற்கு முன்னர் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ அனுப்பிவைக்க முடியும்.
அனுப்பி வைக்க வேண்டிய முகவரி: **Samsung Singhagiri**
**No - 12 புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி.**
**077 789 5613/ 021 492 7006**

**யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்க ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் - 2017**

காலம் :20.08.2017 (ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4.00 மணி)
இடம் : வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலய வளாகம்
கல்லூரி மற்றும் மாணவர் கல்வி வளர்ச்சியில் ஒன்றிணைந்து பணியாற்ற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அனுசரணை: City Homes.lk, usan, mirusuvil. 0777448688
செயற்குழு. பழைய மாணவர் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் சாரதியாக கடமையாற்றும்
**சி.சிகதரன்**
அவர்களின் தந்தையாரான
**தம்பு சிவப்பிரகாசம்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
**பணிப்பாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள்**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



**தோற்றம்**
**21.07.1933**
**மறைவு**
**06.09.2015**
**அமரர்**
**தம்பிஐயா குணநாயகம்**
**(ராசு)**
(உரிமையாளர் - குமரன் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலி, கலைவாணி மில், கொக்குவில்)
*திதி - நவமி (15.08.2017)*

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
இனியவராய் வாழ்ந்து எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டு இரண்டு மறைந்தாலும் எம்
உள்ளங்களில் என்றும் நீங்காது
நிலைத்திருப்பீர்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு.**
**நீங்காத நினைவுகளுடன் குடும்பத்தினர்.**

## அழைப்பு

**யாழ் விருது நாயகன்**
**உயர்திரு. திருநாவுக்கரசு இராசநாயகம் அவர்களின்**
(கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபரும் வடக்கு மாகாண சபையின் பொது நிருவாக அமைச்சின் முன்னாள் செயலாளரும் மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தின் தலைவரும்)
**பணிநயப்பும், "இமயம்" பாராட்டு விழா மலர் வெளியீடும்**
**திரு. தி. இராசநாயகம் அவர்களின் பெயரில் கல்வி உதவி அறக்கட்டளை ஆரம்பித்தலுமான நிகழ்வு**

காலம்: 19.08.2017 (காலை 10:00 மணி)
இடம்: மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்ல விளையாட்டு மைதானம், ஜெயந்திநகர், கிளிநொச்சி.

**சமூக சேவையினால் இமயம் தொட்டு விருது பெற்ற விருது நாயகனை வாழ்த்தி கௌரவிக்க அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.**
**இதனைத் தங்களது தனிப்பட்ட அழைப்பாகக் கருதிச் சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

பொன் நித்தியானந்தம் (முன்னாள் உதவி அரசாங்க அதிபர், கரைச்சி)
தலைவர், மலர் வெளியீடு மற்றும் பாராட்டு விழாக்குழுவும்.

## மரண அறிவித்தல்



**தோற்றம்** 04.07.1938 **மறைவு** 15.08.2017

### அப்பாத்துரை சின்னத்துரை

கோண்டாவில் குமரகோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான அப்பாத்துரை சின்னத்துரை (15.08.2017) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாத்துரை - அன்னப் பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் பூபதியின் அன்புக்கணவரும் உதயகுமார் (சுவிஸ்), ரஜினி (கனடா), ரமணி (சுவிஸ்), ராஜினி (ஜேர்மனி), லோகேஸ்வரன் (பெல்ஜியம்), உஷந்தினி (நெதர்லாந்து), பகீரதன் (கனடா) ஆகி யோரின் பாசமிகு தந்தையும் லிஜியா, குகதாசன், விக்னேஸ்வரன், செல்வகுமார், சுவானியா, சுரேஸ்குமார் ஆகியோரின் மாமனாரும் துளசி, குமரன், சாங்கவி, ஐங்கரன், கபிலன், ஐஸ்வர்யா, அபிராமி, சிவகார்த்திகேயன், ஆவந்திக்கா, நிரோஷன், டினிசியா ஆகியோரின் பேரனும் காலஞ் சென்ற நவரட்ணம் மற்றும் இரத்தினம்மா, பரிபூரணம், சரஸ்வதி ஆகியோரின் சகோதரரும் குடைச்சாமியாரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**குமரகோட்டம், கோண்டாவில்.**
**தகவல்: குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி கமலநாயகி சர்வானந்தா



ஊரெழு கிழக்கைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலநாயகி சர்வானந்தா நேற்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் Dr. ந.சர்வானந்தாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி க.சதானந்தன் தம்பதியரின் அன்பு மகளும் நவாலி வடக்கு காலஞ்சென்றவர்களான திரு. திருமதி இ. நடராசா தம்பதியரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற தர்சினி மற்றும் Dr.கணேஷ்குமார் (யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் துஷ்யந்தியின் அன்பு மாமியும் சஞ்சய், சுருதிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் திருமதி ம. கனகாம்பிகை, விக்னேஸ்வரன் ஆகியோரின் சகோதரியும் யோகேஸ்வரி காலஞ்சென்ற ந. பரமேஸ்வரன் மற்றும் பேராசிரியர் துரை.மனோகரன், ஜெகதாம்பிகை, தட்சணாமூர்த்தி, சாவித்திரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பாரதிநாதன், புனிதவதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2017) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் கோண்டாவில் கிழக்கு, பொற்பதி வீதியிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டையாலடி கோண்டாவில் கிழக்கு இந்து மயானத்துக்கு பி.ப. 4 மணியளவில் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**பொற்பதி றோட், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.**
**Dr. ந. சர்வானந்தா**
**Dr.ச. கணேஷ்குமார் (021 221 2117)**

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா இராசரத்தினம்



கிளிநொச்சி, சங்கத்தார் வயலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசரத்தினம் நேற்று (15.08.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் அன்புக் கணவரும் இராசமலர், செல்வநாயகம், நவரத்தினராசா, செபரத்தினராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பரமேஸ்வரி, நவரத்தினமலர் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அருள்மொழியின் (ஆசிரியர்) அன்புமாமனும் கார்த்திகேசுவின் (ஆஸ்திரேலியா) அன்பு மைத்துனரும் கௌரி, சோதி, இந்திரன், சந்திரன், ரூபன் ஆகியோரின் அன்பு தாய்மாமனும் ஆதவன், ஆதித்தன், அகல்விழி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2017) வியாழக்கிழமை இயக்கச்சியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

## அருளப்பு சில்வெஸ்டர் (அரியநாயகம்)



பிறப்பு 12.12.1947 இறப்பு 13.08.2017

யாழ்ப்பாணம், பாஷையூரைப் பிறப்பிடமாகவும் Sydney, Greenvalley, Australia வை வசிப்பிடமாகவும் கொண்ட அருளப்பு சில்வெஸ்டர் (அரியநாயகம் - ஆஸ்திரேலியா) 13.08.2017 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் திருமதி மேரி பனிமய சீலி சில்வெஸ்டரின் (துங்கம்) ஆருயிர் கணவரும் காலஞ்சென்றவர்களான அருளப்பு மாகிறேற் தம்பதியரின் அன்பு மகனும் ஷிரோமி, ஷிரான், ஷெரின் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜேட், அரன், சார்லி ஆகியோரின் பாசமிகு பாட்டாவும் காலஞ்சென்றவர்களான அம்புறோஸ் சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான அன்ரனிப்பிள்ளை, அருளானந்தம், அல்வின் மற்றும் தோமஸ், ஸ்ரனிஸ்லோஸ், வில்விரீடா, பிரான்சிஸ்கா, தெரன்சியா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற அமிர்தசீலி மற்றும் நெல்சன், வில்சன், காலஞ்சென்ற புனிதசீலி மற்றும் ஜோண்சன், குணசீலி, தியாகசீலி காலஞ்சென்ற கட்சன் மற்றும் பீற்றசன், ஜெயசீலி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிவழிபாடு நாளை (17.08.2017) வியாழக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறுவதால் எதிர்வரும் (18.08.2017) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். திருப்பலியின் பின்னர் அனைவரையும் வீட்டிற்கு அழைக்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**07, அன்ரனிஸ் வீதி, பாஷையூர்.**

**தகவல்: சகோதரர்கள்**

## திருமதி சின்னப்பிள்ளை சிவசாமி



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை சிவசாமி 15.08.2017 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசாமியின் (ஓய்வுபெற்ற மலேரியா தடைப்பகுதி உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - மாணிக்கம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் இராஜகுலேந்திரம், காலஞ்சென்ற இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நல்லகுமாரின் (அதிபர் - யா / ஏழாலை புனித இசிதோர் றோ.க.த.க. பாடசாலை) பாசமிகு தாயாரும் வேலவரராணி (மகளிர் அபிவிருத்தி போதனாசிரியை பிரதேச செயலகம் சண்டிலிப்பாய்) இன் அன்பு மாமியும் கஜந்திகாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2017) புதன் கிழமை மு.ப.11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிறிலங்கா வீதி, உடுவில், சுன்னாகம்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 844 7715**


செவ்வாய்க்கிழமை
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம்: 591 வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 15.08.2017
வெற்றி இலக்கங்கள்
11 29 43 49 B
39 42 50 52
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ.32,301,639/-
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

சீட்டிழுப்பு வாரம்: 176
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 15.08.2017
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 98,302,708/-
E 19 37 57 65
26 36 47 76
தொ.பே. 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

ராசி அதிர்ஷ்டம்
திகதி 2017.08.15
வெற்றி வாரம் 2172
வர்ணம் நீலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 26 40 44 47
வெள்ளிக்கிழமை வெற்றிப் பொதி ரூ. 28, 91,896/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
12 31 34 43
2017.08.18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே. 011 4824834 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

EASY WAY
விரையுங்கள்!
இன்றும் நாளையும் இணைவோருக்கு பயிற்சிக்கட்டணம் ரூபா 1500 மட்டுமே.
புதிய முறையிலான ஆங்கிலப்பயிற்சி
EASY WAY யின் 90 தமிழ்வழிப்பாடங்கள் மற்றும் 90 வீடியோ பாடங்களை கற்பதன் மூலம் எவராலுமே சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.
வகுப்புகளுக்கு வர நேரமற்ற தொழில்புரிவோர், பாடசாலை மாணவர்கள், வீட்டுப்பெண்கள், ஆசிரியர்கள், பல்கலை கழக மாணவர்கள் ஆங்கிலம்பேசவிரும்புவோர் இணையமுடியும்
பயிற்சிக்கட்டணங்களை நேரடியாகவோ அல்லது வங்கி மற்றும் தபாலகங்கள் மூலமோ செலுத்தமுடியும்.
பயிற்சியில் இணைபவர்கள் கூடியது 120 நாட்களுக்குள் கற்று பயிற்சிகளைசெய்து எமக்கு அனுப்பதல்வேண்டும்.
இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் இறுதிப்பரீட்சை நவம்பர் 12, 2017 அன்று இடம்பெறும்.
EASY WAY 403, மனிக்கூட்டு வீதி, யாழ்நகர். 021 320 3313 077 1570 486


# மரண அறிவித்தல்

பிறப்பு 14 . 03 . 1929



இறப்பு 14 . 08 . 2017

திருமதி

## இராஜேஸ்வரி பூர்ணலிங்கம் (Baba Acca)

மானிப்பாய் லோட்டன் வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப்பிட்டி No.30 1/4 றிஜ்வே பிளேசை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி பூர்ணலிங்கம் அவர்கள் 14.08.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. பூர்ணலிங்கம் (ஓய்வுபெற்ற Deputy Controller Immigration) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கணிதசிங்கம் நாகரட்ணம் தம்பதியினரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற நாகலிங்கம் அன்னபூரணம் தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பஞ்சலிங்கம், புவனேஸ்வரி, காலஞ்சென்ற சிவராஜலிங்கம், ரட்ணேஸ்வரி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், பத்மாவதி, காலஞ்சென்ற வைரமுத்து, காலஞ்சென்ற நீலாதாட்சி, காலஞ்சென்ற தேவராஜன், சந்திரசேகரன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் 17.08.2017 வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பார்வைக்கு வைக்கப்பட்டு மாலை 2 மணியளவில் ஈமக்கிரியைகள் ஆரம்பித்து மாலை 5 மணிக்கு கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்**

**தகவல்:**
**திருமதி புவனேஸ்வரி வைரமுத்து** T.P:011-2582767



## சத்தான, ஆரோக்கியமான முளைக்கீரை கட்லெட்

**தேவையான பொருள்கள் :**

முளைக்கீரை - 1 கட்டு, கடலை மாவு - 1/2 கப், பெரிய வெங்காயம் - 1, பச்சை மிளகாய் - 2, இஞ்சிப்பூண்டு விழுது - 1 கரண்டி, கொத்தமல்லி - சிறிதளவு, எண்ணெய் - 2 கரண்டி, உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**

கீரையை நன்கு சுத்தம் செய்து பொடியாக நறுக்கிக்கொள்ளவும்.

வெங்காயம், பச்சை மிளகாய், கொத்தமல்லி போன்றவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும்.

பாத்திரத்தை அடுப்பில் வைத்து அதில் நறுக்கிய கீரையை இடவும் உப்பு மற்றும் சிறிதளவு தண்ணீர் என்பவற்றையும் கலந்து கொள்ளவும். கீரை, உப்பு, தண்ணீர் என்பன நன்கு கலவையாகி வதங்கியதும் கீரையில் இருக்கும் நீரை வடிகட்டி கீரையை மட்டும் தனியாக வைக்கவும்.

மீண்டும் பாத்திரத்தை அடுப்பில் வைத்து, அதில் எண்ணெய் ஊற்றவும். காய்ந்ததும், நறுக்கிய வெங்காயம், பச்சை மிளகாய், இஞ்சிப் பூண்டு விழுது, கொத்தமல்லி, தேவை ஏற்படின் சிறிது உப்பு ஆகியவற்றை சேர்த்து வதக்கவும், கலவை வதங்கியதும் கீரையையும் அதனுடன் சேர்த்து வதக்க வேண்டும்.

பின் ஒரு பாத்திரத்தில் கடலை மாவை இட்டுத் தண்ணீர் மற்றும் உப்புச் சேர்த்து, இட்லி மாவின் பதத்திற்கு கரைத்து வைத்துக் கொள்ளவும்.

அடுப்பில் இந்தக் கலவையை வைத்துக் (மிதமான தீயில்) கிளறி அத்துடன் கீரையையும் சேர்த்து நன்கு கிளறவும்.

இந்தக் கீரைக் கலவையானது சுருண்டு வரும் போது அதனை இறக்கி, ஒரு தட்டில் கொட்டிச் சமப்படுத்தவும்.

சூடு ஆறியதும் துண்டாக வெட்டி அதனை அப்படியே சாப்பிடலாம்.


**காணி விற்பனைக்கு**
திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் 1 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நேரடி விற்பனை மட்டும்) தொடர்பு-076 697 2287

**காணி உடன் விற்பனைக்கு**
சுழிபுரம் பிரதான வீதியில் கோவில், பாடசாலை, பிரதேசசபை, மின்சாரசபை, தபாற்கந்தோர், கடைகள் போன்றவை அருகில் உள்ள நல்ல அமைதியான சூழலில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு கடைகள் கட்டக்கூடிய 6 1/2 பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு-075 489 0615

**தென்னம்பிள்ளை விற்பனைக்கு உண்டு**
எம்மிடம் நல்லினத்தென்னம் பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன்தரக் கூடிய தென்னை நாற்றுக்களும் விற்பனைக்கு உண்டு.
077 659 2044

**தையல் வேலைக்கு ஆள்கள் தேவை**
பெண்களுக்கான ஆடைகள் தைப்பதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை.
கவிதாஸ் தையலகம்
127 12 யூபிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 899 9917

**வேலையாள் தேவை**
யாழ் நகரில் இயங்கும் ஸ்ரூடியோ ஒன்றுக்கு வேலையாள்கள் தேவை. அனுபவம் உள்ளவர்கள் / அனுபவம் இல்லாதவர்கள் விண்ணப்பிக்கலாம். (ஆண்கள் மட்டும்)
077 801 4704

**தேவை**
யாழ் மாநகர சபை எல்லைக்குள் வீட்டுடன் காணி விலைக்கு தேவைப்படுகிறது. (பரப்பு 2-3)
076 885 2015 021 499 1274

## மின்னல்...

தண்ணீர்தொட்டிப் பகுதியைச் சேர்ந்த ரவிக்குமார்றெபோன்சன் (வயது-28) என்ற இளம் குடும்பத் தலைவரே உயிரிழந்துள்ளார்.

ஒரு படகில் 3 மீனவர்கள் கடலுக்குச் சென்ற நிலையில் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு உள்ளாகினார். உயிரிழந்தவரின் சடலம் யாழ்.போதனா மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டது.

திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-8-ரி1)

## காணி...

த்தில் வன்முறை ஏற்பட்டது. பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டு வீசி ஆர்ப்பாட்டம் நடத்தியோரைக் கலைத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு, மங்கலராம விகாரதிபதி அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தலைமையில் நடைபெற்றது.

**விசேட பூசைகள்**

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் காணி அபகரிப்பை தடுத்த நிறுத்தக் கோரி விசேட மத நல்லிணக்க வழிபாடு நடத்தப்பட்டது.

பிள்ளையாரடி ஆலயத்தில் மத வழிபாடுகள் நடத்தப்பட்டன. மங்களாராம விகாராதிபதி தலைமையில் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இணைந்து மத வழிபாடுகளை மேற்கொண்டனர். கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டமும் நடத்தப்பட்டது. சிறுபான்மை மக்களின் உரிமைகளும் காணிகளும் அபகரிக்கப்படுவது உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஆர்ப்பாட்டம் நடத்தியோர் வலியுறுத்தினர். மட்டக்களப்பு மாவட்ட சிங்கள தமிழ் மறுமலர்ச்சிக்கான அமைப்பு இதை ஏற்பாடு செய்தது.

**ஆர்ப்பாட்டம்**

அதன்பின்னர் மட்டக்களப்பு மீராவோடை சக்தி வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணி தனியாரால் அபகரிக்கப்பட்டுள்ளது. அதை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. அம்பிட்டியே சுமணரத்ன தேரர் தலைமையில் பாடசாலை காணிக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**கண்ணீர் புகைத் தாக்குதல்**

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அந்தக் காணிக்கு போடப்பட்டிருந்த வேலியை பிடுங்க முற்பட்டனர். பொலிஸார் தலையிட்டு நீதிமன்றின் தடை உத்தரவுப் பத்திரத்தை வேலியில் ஒட்டினர். தேரர் தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் நீதிமன்ற தடை உத்தரவைப் பிடுங்கி எறிந்தனர். வேலியைப் பிடுங்க மீண்டும் முயற்சித்தனர்.

அவர்களைத் தடுத்து நிறுத்த பொலிஸார் எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கும் இடையே மோதல் நிலமை உருவாகியது. ஆர்ப்பாட்டம் நடத்தியோரைக் கட்டுப்படுத்த முடியாத பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டு வீசி நிலமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

**சமரசம்**

கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அநுர தர்மதாச, மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கீர்த்திரதன் ஆகியோர் சம்பவ இடத்துக்கு வந்தனர். ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுடன் கலந்துரையாடினர்.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நாளை (இன்று) நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களிடம் கூறினர். பாடசாலைக் காணி வரைபடத்தில் உள்ளவாறு காணி பெற்றுத் தரப்படும் என்று கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அநுர தர்மதாச தெரிவித்தார்.

அதன்பின்னர் அம்பிட்டியே சுமணரத்னதேரர் உட்பட ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் கலைந்து சென்றனர். (ற)

## பிரபாகரன்....

வாக்கு களை வேட்டையாட விக்னேஸ்வரன் போன்றோர் பொய் கூறுகின்றனர் என் றும் சாடியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகளுக்கு உரித்துடைய அனைத்து அதிகாரங்களையும் பகிர்ந்தளிக்க வேண்டும். அதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி முழுமையான ஆதரவளிக்கும். கொழும்பில் உள்ள சில அரசியல்வாதிகள் கிராமத்தில் உள்ள தமிழ், சிங்கள மக்கள் தொடர்பில் பேசுவதில்லை. கிராமத்தில் சிங்கள பௌத்தர்கள் போன்று தமிழர்களுக்கு உதவி செய்யும் விவசாயிகள் எவரும் இல்லை.

புதிய அரசமைப்புத் தேவையில்லை என்பது உண்மைதான். ஆனால், மகாநாயக்க தேரர்கள் கூறுவது போன்று அரசமைப்பு மறுசீரமைப்பு கட்டாயமாகும்.

தமிழ் பேசும் மக்களும் இந்த நாட்டின் மக்கள் தான். அவர்கள் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்லர். மலையகத்தவர்களும் இலங்கையர்களே. யாழ்ப்பாணத்தில் தமிழ் பேசுபவர்கள் பரம்பரை பரம்பரையாக இங்குள்ளவர்கள். அவர்களுக்கு ஏதும் தவறிழைக்கப்பட்டிருந்தால் அதனை நாம் பார்க்காமல் வேறு யார் பார்ப்பது? நாங்கள் அவர்களைப் பார்க்காததாலேயே பிரபாகரன் போன்றோர் உதயமாகினர்.

அதன் காரணமாக 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் அனைத்து அதிகாரங்களையும் முழுமையாகப் பகிர்ந்தளிக்க வேண்டும். 19ஆவது திருத்தச்சட்டத்தின் பின்னர் அரச தலைவரின் நிறைவேற்று அதிகாரம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளது. பெண்ணை ஆணாக மாற்றும் அதிகாரம் தற்போதில்லை. தற்போதைய அதிகாரங்களுடன் அரச தலைவர் முறைமை இருந்தால் பிரச்சினையில்லை. யாழ்ப்பாணத்தில் பொய் வாக்குறுதிகளைக் கூறி விக்னேஸ்வரன் போன்றோர் மக்களைத் தூண்டிவிடுகின்றனர். மக்களின் வாக்குளை வேட்டையாடவே அவர் அவ்வாறு செயற்படுகின்றார் -என்றார். (வ-5)

## அனைத்துக்...

ஆராய்வ தற்கான அனைத்துக் கட்சிக் கூட்டத்தை அரச தலைவர் இன்று அவசரமாகக் கூட்டவுள்ளார்.

20ஆவது திருத்தச் சட்டவரைவை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் முன்வைத்து அதற்குரிய அனுமதியைப் பெற்றிருந்தார். அது வர்த்தமானியிலும் வெளியிடப்பட்டது. சட்ட வரைவுக்கு, அரசியல் கட்சிகளும், தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் எதிர்ப்பு வெளியிட்டு வந்த நிலையில், கடந்த வியாழக்கிழமை நடந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மையக் குழுக் கூட்டத்திலும் அதனை எதிர்ப்பதற்கு முடிவெடுக்கப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று முடிவடைந்த பின்னர் மதிய உணவுடன் ஐக்கிய தேசிய முன்னணி அரசின் பங்காளிக் கட்சித் தலைவர்களை அலரிமாளிகையில் சந்தித்து, 20ஆவது திருத்தச் சட்டம் பற்றி தலைமை அமைச்சர் ரணில் விக்ரமசிங்க பேச்சு நடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரான அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்ததாவது:

அமைச்சரவைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் ஐக்கிய தேசிய முன்னணி அரசிலுள்ள பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் தலைமை அமைச்சர் பேச்சு நடத்தினார். அமைச்சரவையில் 20ஆவது திருத்தச் சட்ட வரைவை ஆதரித்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு எதிராக மையக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இது பற்றி அந்தக் கட்சியிடம் விளக்கம் கோரப்படும். அரச தலைவர் தலைமையில் நாளை (இன்று) கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்படவுள்ளது என்றார். (வ-5)

## மருத்துவ...

அங்கி ருந்த மருந்துப் பொருள் கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக் ப்பட்டது.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி தலைமையில் சென்ற சுகாதாரப் பரிசோதகர்கள் சோதனையை நடத்தியுள்ளனர். சோதனையி ன்போது ஹோமியோபதி சிகிச்சைக்குப் பயன்படுத்தும் மருந்துப் பொருள்களை விட மேலதிகமான பொருள்கள் கண்டறியப்பட்டன என்று கூறப்படுகின்றது. அங்கு கடமையில் இருந்த மருத்துவர், தாதியர்களிடம் அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

"இந்த மருத்துவ சேவை நிலையம் பூரணப்படுத்த ப்படாத விண்ணபத்தில் இயங்கியது. அங்கு வழங்கப்பட்ட மருந்துகள் பொதுமக்களுக்கு ஏதுவானவையாக இல்லை. பலருக்கு பல பக்க விளைவுகள் ஏற்பட்டுள்ளன. அவை தொடர்பில் முழுமையான விவரங்களைத் திரட்டிய பின்னர் முற்றுகையிட்டோம். சந்தேகத்துக்கு இடமான பொருள்களை மீட்டு ள்ளோம். இந்த நிலையத்தை நடத்தியவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்." என்று வவுனியா சுகா தார வைத்திய அதிகாரி மருத்துவர் எஸ்.லவன் தெரிவித்தார்.

மாத்தளைப் பகுதியில் இருந்து வந்து வவுனியாவில் இந்த நடமாடும் மருத்துவ சேவை நடத்தப்படுகின்றது என்று கூறப்படுகின்றது. (ற-10)

## ரெலோ...

பா.டெனீஸ்வரனை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறும் கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு அந்தக் கட்சியால் கோரப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன் நேற்று வெளியிட்ட அறிக்கையில், "என்னைப் பதவி நீக்கம் செய்வதற்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் சட்டத்தை மீறுவாரா? அல்லது நேர்த்தியாகச் சிந்தித்து முடிவெடுப்பாரா ? என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

ரெலோ அமைப்பின் உயர்மட்டக் குழுக் கூட்டம் கடந்த 12ஆம் திகதி வவுனியாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரனை அமைச்சுப் பதவியிலிருந்து விலகுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. அவர் பதில் வழங்குவதற்கு 24 மணி நேரம் அவகாசமும் கட்சி வழங்கியிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை, ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனை தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்ட மாகாண அமைச்சர் பா.டெனீஸ்வரன், அமைச்சுப் பதவியிலிருந்து விலகப் போவதில்லை என்ற முடிவை அறிவித்திருந்தார். இதன் பின்னரே, கட்சியின் உயர்மட்டக் குழுக் கூட்டத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டெனீஸ்வரனின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றவரை முதலமைச்சராக ஆளுநர் நியமிக்க முடியும். முதலமைச்சர் தனக்கு விரும்பிய நான்கு அமைச்சர்களை மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து தெரிவு செய்து அவர்களை அமைச்சுப் பொறுப்புக்கு நியமிக்குமாறு பரிந்துரை செய்து ஆளுநருக்கு அனுப்பி வைக்கவும் முடியும். ஆளுநரும் அதற்குரிய சத்தியப்பிரமாணங்கள் ஊடாக குறித்த நபர்களை அமைச்சர்களாக நியமிக்க கடமைப்பட்டுள்ளார்.

தற்போதுள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நியமிக்கப்பட்ட அமைச்சரவை, அவர் தனது சுயவிருப்பின் பேரில் அமைச்சு பதவியிலிருந்து விலகும் கடிதத்தின் ஊடாக நீக்க முடியும். தேர்தலில் அவர் போட்டியிட்ட கட்சியானது சம்பந்தப்பட்ட அமைச்சரின் அடிப்படை மாகாண சபை உறுப்புரிமையை நீக்கம் செய்கின்ற சந்தர்ப்பத்திலும் அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கலாம்.

இல்லாவிடின், முதலமைச்சர் அமைச்சரை பதவியிலிருந்து நீக்குவதாயின், தகுந்த நியாயமான காரணங்களோடு மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவோடு தனது பரிந்துரையை ஆளுநருக்கு அனுப்பிவைக்கின்ற சந்தர்ப்பத்தில் ஆளுநர் அந்தக் கோரிக்கையை ஏற்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நான் பதவி விலகப் போவதில்லை. இதனைப் பகிரங்கமாகவே அறிவித்துள்ளேன். இந்த நிலையில், தேர்தலில் போட்டியிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் என்னை கட்சியின் அடிப்படை உறுப்புரிமையில் இருந்து நீக்குவதாக தேர்தல் ஆணைக் குழுவுக்குக் கடிதத்தை அனுப்பி வைத்தால் என்னை அமைச்சுப் பதவியிலிருந்த நீக்கலாம். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினர் இந்த நிலைப்பாட்டை எடுப்பார்களா? என்ற கேள்வி இங்கு எழுகின்றது.

இரண்டும் சாத்தியப்படாத சந்தர்ப்பத்தில் முதலமைச்சர் தகுந்த நியாயமான காரணத்தைக் காட்டி மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவைப் பெற்று பதவியில் இருந்து நீக்குவார? என்ற கேள்வியும் எழுகின்றது. நீதியரசராகிய முதலமைச்சர் இருக்கின்ற சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக நடக்கப்போகின்றாரா? அல்லது சட்ட முரணாக செயற்படப் போகின்றாரா? என்று பொறுத்திருந்து அவதானிக்க வேண்டியிருக்கின்றது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் வடக்கு மாகாண சபையில் முதலமைச்சரின் செயற்பாட்டில் அதிருப்தியுற்றவர்கள் அவரை நீக்குமாறு ஆளுநரிடம் சென்றனர். ஆளுநர் முதலமைச்சரை நீக்குவதானால் தகுந்த காரணங்களோடு மாகாண சபையில் பெரும்பான்மை ஆதரவை நிரூபிக்குமாறும் கோரியிருந்தார்.

அவ்வாறானதொரு சூழ்நிலையே தற்பொழுது காணப்படுகின்றது. இதற்கு அப்பால் அந்தக் காலப்பகுதியில், முதலமைச்சரை பின்கதவால் அனுப்புவதற்கு தென்பகுதி சிங்கள ஆளுநரோடு சிலர் கைகோர்த்துள்ளார்கள் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டிருந்தது. தற்பொழுது முதலமைச்சர் இத்தகையதொரு இக்கட்டான சூழ்நிலையில், சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படப் போகின்றாரா? அல்லது ஆளுநரின் காலில் மண்டியிடப்போகின்றாரா? என்ற கேள்வியும் எழுகின்றது.

தற்போதுள்ள அரசியல் அசாதாரண சூழ்நிலைகளை நீக்குவதற்கு முதலமைச்சர் சரியாக, நேர்த்தியாக சிந்தித்து ஏனைய சுயநலத்தோடு வருகின்றவர்கள் தொடர்பில் விழிப்பாக இருந்து எமது மாகாண சபையை வினைத்திறனாகக் கொண்டு நடத்துவதற்கு இங்கு காணப்படும் தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை புத்தி சாதுர்யமானதாகவும் சட்டத்துக்கு அமைவாகவும் தமிழ்தேசிய கூட்டமைப்பு பிளவுபடாத வகையில் வெளிப்படையாகவும் எவ்வாறு கையாள்வார் என்பதில்தான் எதிர்கால வடக்கு மாகாண சபையின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் மக்களின் அபிவிருத்தியும் தங்கியுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார். (வ-5)

## உலகநாடுகள்...

விடுவிக்கப்படாததைத் தொடர்ந்து அரசதலைவர், பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஆகியோருக்குக் கடிதங்களை அனுப்பி வைத்திருந்தார். அவற்றுக்கும் உரிய பதில்கள் கிடைக்கவில்லை.

கடந்த 11ஆம் திகதி அரச தலைவருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கும் மிகக் காட்டமான வார்த்தை களைப் பயன்படுத்தி மீண்டும் கடிதம் அனுப்பியிருந்தார். தேவைப்பட்டால் கேப்பாபிலவு காணி விடுவிப்புத் தொடர்பில் கூட்டம் நடத்துமாறும் கேட்டிருந்தார். ஆனால் எதுவும் நடக்கவில்லை.

இதற்கிடையே தற்போதைய அரசியல் நிலவரம் குறித்துப் பேசுவதற்காக அரச தலைவரைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கித்தருமாறும் இரா.சம்பந்தன் அரசதலைவர் மைத்திரிபாலவிடம் கோரியிருந்தார். இரண்டு வாரங்களுக்கு மேலாகியும் அதற்கும் பதில் கிடைக்கப் பெறவில்லை.

எல்லாவற்றுக்கும் மேலாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும் பெரும்பான்மைக் கட்சிகள் இரண்டாலும் திட்டமிட்டே பின்தள்ளப்பட்டு வருகின்றன.

இவற்றையெல்லாம் அடுத்தே உலக நாடுகள் தலையிட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார் இரா. சம்பந்தன். (உ-5)

## சீனி...

உற்பத்தி யாளர்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்காக இறக்கு மதி செய்யப்படும் சீனியின் விலை 8 ரூபாவால் நேற்று நள் ளி ரவு முதல் அதிகரிக்கரிப்பட் டுள்ளது. இருப்பினும் சீனியின் விற்பனை விலையில் மாற்ற மில்லை என்று நிதி அமைச்சு அறிவித்துள்ளது. (வ5)

## அயலுறவு...

அறிவித்திருந்தார். அந்த வெற்றிடத் துக்கு திலக் மாரப்பன நியமிக்கப்பட்டுள்ளார். கூட்டு அரசு பதவிக்கு வந்தபோது சட்டம் ஒழுங்கு அமைச்சராக திலக் மாரப்பன நியமிக்கப்பட்டார். மகிந்த அரசின் காலத்தில் நடைபெற்ற அவன்கார்ட் மோசடி தொடர்பில் பக்கச் சார்பாகச் செயற்படுகின்றார் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் திலக் மாரப்பன பதவியிலிருந்து விலகியிருந்தார்.

இதேவேளை, அயலுறவுத்துறை அமைச்சின் செயலராக பிரசாத் காரியவசமும் தனது பதவியைப் பொறுப்பேற்றார். இந்த அமைச்சின் செயலராக இருந்த எசல வீரக்கோன், சுற்றுலா அபிவிருத்தி அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டதை அடுத்து, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராகப் பணியாற்றிய பிரசாத் காரியவசம் அயலுறவுத்துறை அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார். (வ-5)



# யாழ்ப்பாணப் பல்கலை அணி வெள்ளிப் பதக்கம் வென்றது

யாழ்ப்பாணம், ஓக. 16

அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்துள்ளது.

சப்பிரகமுக மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில், யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழக அணி மோதியது. சிறி ஜெயவர்தனபுர பல்கலைக் கழக அணி 79:35 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றதை அடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணிக்கு இரண்டாம் இடம் கிடைத்தது. (ம-422)

# இமையாணன் மத்தியின் கால்பந்து, கரப்பந்து

யாழ்ப்பாணம், ஓக. 16

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பிரதேசத்துக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையில் 35 வயதுக்கு மேற்பட்டோருக்கான கால்பந்தாட்டத் தொடரையும், கரப்பந்தாட்டத் தொடரையும் நடத்தவுள்ளது. இந்தத் தொடரில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள், குறித்த விளையாட்டுக் கழக நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-108)






# ஆவரங்கால் மத்தி இறுதிக்குள்

யாழ்ப்பாணம், ஓக. 16

யாழ்ப்பாண மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத்தின் தொடரில், இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது ஆவரங்கால் மத்திய அணி.

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்டதாக அரையிறுதி ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் அணி தனதாக்கியது. இதனைத் தொடர்ந்து ஆக்ரோசமாக விளையாடிய மத்திய அணி அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:22, 25:22, 24:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது. (ம-108)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 16

**யங்கம்பன்ஸ் வி.கழக கரப்பந்தாட்டத் தொடர்**

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக மின்னொளியில் நடத்தத் திட்டமிட்ட கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இன்று ஆரம்பமாகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் சிறி முருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. தொடர்ந்து இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் சென்றல் ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொளி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கெருடாவில் விவேகானந்தா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி வளர்மதி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**ஐக்கியம் வி.க. கரப்பந்தாட்டம்**

இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதவுள்ளது. (ம-422)

# அரையிறுதியில் கலைமதி

யாழ்ப்பாணம், ஓக. 16

இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் புத்தூர் கலைமதி அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

ஐக்கிய விளையாட்டுக் கழக மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் அச்சுவேலி ஸ்ரார் அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது. இதில் கலைமதி அணி 27:25, 25:15, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று செற்களையும் கைப்பற்றி நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது. (ம-422)

# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர் வாழ்க்கையின் மிகமோசமான தோல்வி

## சந்திமல்லின் ஆதங்கம் இது



இந்திய அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை இழந்ததை அடுத்து, இலங்கை அணியின் தலைவர் சந்திமல் “என் வாழ்க்கையில் இது மிகவும் மோசமான தொடர்” என்று தெரிவித்தார்.
இந்திய அணி இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. இலங்கை அணிக்குச் சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் கிண்ணத்தை முழுமையாகக் கைப்பற்றியது இந்தியா. இதையடுத்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார்.
‘கடந்த எட்டு வருடங்களில் பன்னாட்டுத் தொடர்களில் நான் சந்தித்த கடினமான தொடர் இது என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. இந்தத் தொடரில் எந்தவொரு ஆட்டமும் ஐந்து நாள்கள் வரை முழுமையாகச் செல்லவில்லை. அதுவே தோல்விக்கு முக்கிய காரணம். என்னுடைய வாழ்க்கையில் இது மிகவும் மோசமான தொடர். அணியின் தலைவர் என்ற முறையில் தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக் கொள்கிறேன். வீரர்களின் மன நிலை சோர்வாக இருக்கும் போது, ரசிகர்களின் ஆதரவும், கை தட்டல்களும்தான் வீரர்களை ஊக்கப்படுத்தும். அதனால் ரசிகர்களின் ஆதரவு எங்களுக்கு தேவை. இதில் இருந்து மீண்டும் விரைவில் வெளியே வருவோம்” என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)



## சின்சினாட்டி தொடரிலும் செரபோவா விலகினார்

அமெரிக்காவின் சின்சினாட்டித் தொடரில் இருந்து காயம் காரணமாக செரபோவா விலகினார்.
கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரியைச் சோதித்துப் பார்த்ததில் மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்து இருந்தது கண்டுபிடிக்கப் பட்டது. இதனால் அவருக்கு சுமார் இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடை முடிவடைந்து கடந்த ஏப்ரலில் மீண்டும் களந் திரும்பினார் செரபோவா. பின்னர் இரு தடவைகள் காயம் காரணமாக விலகியிருந்தார். இதனால் பகிரங்கத் தொடர்களான பிரான்ஸ் தொடர், விம்பிள்டன் தொடர் ஆகியவற்றில் அவர் களமிறங்கவில்லை.
இன்னும் சில நாள்களில் அமெரிக்கத் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் செரபோவா, தான் பங்கேற்பதை உறுதி செய்திருந்தார். இந்தத் தொடருக்கு முன்னோட்டமாகக் கருதப்படுத் சின்சினாட்டித் தொடர் தற்போது ஆரம்பமாகியுள்ளது. மீண்டும் காயமடைந்து சின்சினாட்டித் தொடரில் இருந்து விலகினார் செரபோவா.
இந்த மாதம் 28ஆம் திகதி அமெரிக்கப் பகிரங்கத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. தற்போது காயமடைந்துள்ளதால் இந்தத் தொடரில் செரபோவா பங்கேற்பது சந்தேகமாகியுள்ளது.
“தடை முடிந்து களத்துக்குத் திரும்பிய பின்னர் காயங்களால் தொடர்ந்து ஆட்கொள்ளப் படுகிறேன். இது மிகவும் அச்ச உணர்வைத் தருகிறது. அமெரிக்கத் தொடர் தொடர்பாக தற்போது எதுவும் கருத்துத் தெரிவிக்க இயலாது. எனினும் நான் களமிறங்க கூடுதல் வாய்ப்பு உள்ளது என்று கருதுகிறேன்'' என்று செரபோவா மேலும் தெரிவித்தார். (ம)

எழுதியது எழுதியதே

## ஓய்வு முடிவில் போல்ட் உறுதி

“ஓய்வை மீளப்பெற்று மீண்டும் பன்னாட்டு அரங்குக்குத் திரும்ப மாட்டடேன்” இவ்வாறு தெரிவித்தார் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்டப்பந்தய வீரர் உசைன் போல்ட்.
உலக தடகளத் தொடர் லண்டனில் நடைபெற்றது. இந்தத் தொடர் போல்ட்டுக்குச் சிறப்பாக அமையவில்லை. 100 மீற்றரில் கேத்லினிடம் அவர் தோல்வியடைந்தார். நான்கு வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் ஓட்டத்தில் காயமடைந்து வெளியேறினார். எனினும் போல்ட்டுக்கு உற்சாகமாக விடைகொடுக்கப் பட்டது. ஓர் வீரராக தான் எதிர்கொண்ட இறுதிச் செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே போல்ட் இவ்வாறு தெரிவித்தார்.
“கடினமாக உழைத்தால் எதையும் செய்ய முடியும் என்பதை நான் நிருபித்துள்ளேன். இதனால்தான் நான் இங்கு அமர்ந்து கொண்டு செவ்வி அளித்துக்கொண்டிருக்கிறேன். எனது தாரக மந்திரமே ‘எதுவும் சாத்தியம்’ என்பதுதான். அனைவரும் முயற்சி செய்ய வேண்டும் என்பதையே இது காட்டுகிறது.
இளைஞர்களுக்கு அழுத்தம் கொடுக்க இது சிறந்த செய்தியாக இருக்கும் என நான் நினைக்கிறேன். இளம் தலைமுறையினருக்கு நான் அதை விட்டுச்செல்ல முடிந்தால், அது சிறந்த மரபாக இருக்கும். தடுமாற்றம் காட்டிய ஒரு சம்பியன்ஷிப் தொடர் மட்டும் நான் என்ன செய்துள்ளேன் என்பதை மாற்றாது. அவ்வாறு மாற்றவும் முடியாது. 100 மீற்றர் ஓட்டத்தில் நான் வெண்கலப் பதக்கம் பெற்றதும், சிலர் என்னிடம் வந்து, குத்துச் சண்டை வீரரான மொகமட் அலி தனது கடைசி ஆட்டத்தில் தோல்வியைத்தான் எதிர்கொண்டிருந்தார், அதனால் மிகுந்த மன உளைச்சலுடன் இருக்க வேண்டாம் என்று கூறினார்கள். தடகள வாழ்க்கை முழுவதுமே சிறந்த திறனை வெளிப்படுத்தி சாதித்துக் காட்டியுள்ளேன். அதனால் கடைசி ஓட்டத்தில் அடைந்த தோல்வியானது, இதுவரை விளையாட்டில் நான் செய்ததை மாற்றிவிடாது. நிச்சயமாக இனிமேல் பன்னாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளமாட்டேன். ஓய்வுக்குப் பிறகு மீண்டும் போட்டிகளுக்கு திரும்பி மோசமாகச் செயல்பட்டு, அவமானங்களைச் சந்தித்த பலரைப் பார்த்துள்ளேன். இதனால் தனிப்பட்ட முறையில் இதை நான் விரும்பவில்லை” என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம)



நடுவரைத் தள்ளிவிட்ட விவகாரம்

## 5 ஆட்டங்களில் விளையாட ரொனால்டோவுக்குத் தடை



பார்சிலோனா அணிக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில், நடுவரைத் தள்ளிவிட்ட குற்றத்துக்காக 5 ஆட்டங்களில் விளையாடத் தடை பெற்றார் ரியல் மட்ரிட் அணியின் நம்பிக்கை வீரரான ரொனால்டோ.
இந்த ஆட்டத்தில் இரண்டு மஞ்சள் அட்டை பெற்றதால் (இரண்டு மஞ்சள் அட்டை பெற்றால் சிவப்பு அட்டை பெற்றதாகக் கருதப்படும்) ரொனால்டோ ஆட்டத்தில் இருந்து வெளியேற்றப்பட்டார். சிவப்பு அட்டை பெற்றதால் அவர் அடுத்த ஆட்டத்தில் களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டது. இந்தக் கோபத்தில் ரொனால்டோ நடுவருடன் வாக்குவாதம் செய்து அவரைத் தள்ளிவிட்டார். இது தொடர்பில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது. காணொலியை ஆராய்ந்து பார்த்த பன்னாட்டு கால்பந்து சம்மேளனம் அவர் மேலும் நான்கு ஆட்டங்களில் விளையாடத் தடை விதித்துத் தீர்ப்பிட்டது. இதனால் ஒட்டுமொத்தமாக அடுத்த ஐந்து ஆட்டங்களில் ரொனால்டோ களமிறங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
இந்தத் தடையை எதிர்த்து ரொனால்டோவின் தரப்பில் மேன்முறையிடு செய்ய வாய்ப்



புள்ளது. ரொனால்டோ பிரதிநிதித்துவம் செய்யும் ரியல் மட்ரிட் அணி, தடையை எதிர்த்து இன்று மேன்முறையீடு செய்யும் என்று கருதப்படுகிறது. (ம)

## உலக தடகளத் தரப்படுத்தலில் அமெ. முதலிடம்

உலக தடகளத் தொடர் லண்டனில் அண்மையில் நடைபெற்றது. அமெரிக்கா 10 தங்கப் பதக்கங்கள், 11 வெள்ளிப் பதக்கங்கள், 9 வெண்கலப் பதக்கங்கள் என்று மொத்தம் 30 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது.
கடந்த முறை முதலிடம் பெற்ற கென்யா 5 தங்கப்பதக்கம், 2 வெள்ளிப் பதக்கம், 6 வெண்கலப் பதக்கத்துடன் 2 இரண்டாவது இடத்தைப் பிடித்தது. தென்னாபிரிக்கா மூன்று தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம், இரண்டு வெண்கலம் என மொத்தம் 6 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது. நான்காவது, ஐந்தாவது இடங்களில் பிரான்ஸ், சீனா ஆகிய நாடுகள் உள்ளன.
அமெரிக்கா இந்த வருடம் பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்தமை மட்டுமல்லாது, குறுந்தூர ஓட்டத்தில் உலக ஜாம்பவான் போல்ட்டை அமெரிக்க வீரர் ஜஸ்ரின் வீழ்த்தியமையும் ஆகச் சிறந்த அடைவாகக் கருதப்படுகிறது. (ம)

**கணக்குப் பதிவாளர் தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபல மின்சாதனப் பொருள்களை விற்பனை செய்யும் எமது நிறுவனத்திற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

- கணக்குப் பதிவாளர் (க.பொ.த(உ/த) வணிகப்பிரிவில் கற்றிருத்தல் விரும்பத்தக்கது)

மேற்படி தகைமையுடைய ஆண் / பெண் இருபாலாரும் நாளை (17.08.2017) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுயவிபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும்.

**Jaffna Electricals**
No. 94 (06) Stanley Road, Jaffna.
T.P: 021 222 2353 Fax: 021 222 4302

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில், சிறுவர் நீதிமன்றம் அருகாமையில் அமைந்துள்ள 05 பரப்புக் கொண்ட ஆதனம் விற்பனைக்கு உண்டு.

A.Sathijaseelan - 077 928 4860, 076 889 2168
J.Nishanth - 077 622 6110

## இங்கிலாந்து - மே.தீவுகள் தொடர் நாளை ஆரம்பம்

இங்கிலாந்து - மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. நாளைய ஆட்டம் எட்ஜ்பஸ்டனில் நடைபெறவுள்ளது. இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 25ஆம் திகதி லீட்ஸ் மைதானத்திலும், மூன்றாவது ஆட்டம் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதி லோட்ஸ் மைதானத்திலும நடைபெறவுள்ளன.

இந்தத் தொடருக்காக கடந்த மாத இறுதிப் பகுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி இங்கிலாந்துக்குச் சென்றிருந்தது. சுமார் மூன்று வாரகாலப் பயிற்சியின் பின்னர் அந்த அணி இங்கிலாந்தை எதிர்கொள்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(ம)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA-**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.

www.ambafrance-lk.org
021 222 8093 61,கச்சேரி-நல்லூர் வீதி,யாழ்ப்பாணம்

திருமண பட்டுப் புடைவைகளின் பூங்காவனம்
**இந்தியன் செலக்ஷன்**
**விசேட தள்ளுபடி**
**15% - 50%**




அனைத்து விதமான திருமண பட்டுச் சாறிகள், கொட்டன் சாறிகள், சில்க் சாறிகள், சல்வார்கள், சல்வார் துணிகள், டொப் வகைகள் மற்றும் அனைத்து விதமான ஆடைத் தெரிவுகளுக்கும்.

காலம் 15.08.2017 முதல் 23.08.2017 வரை
இடம் வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**புதிய முகவரியில்...**
**ஒலிம்பியா ஸ்போட்ஸ்**
புதுப் பொலிவுடன் மூன்று மாடிக் கட்டடத்தில் பிரமாண்டமான காட்சியறையில்
**"மாபெரும் மலிவு விற்பனை"**
14.08.2017 முதல் 26.08.2017 வரை
உடற்பயிற்சி சாதனங்கள்
விளையாட்டு உபகரணங்கள்
மற்றும் Jersey வகைகள்
அதிரடி விலைக்கழிவு 5% முதல் 50% வரை
இல.273, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 3490 / 077 384 7842

BAJAJ MOTORCYCLES
PLATINA ComforTec
**எரிபொருள் மீதப்படுத்தலில் முதல்வன்**



விலை 213,800/= ரூபா.

அதிக எரிபொருள் சிக்கனம் — 104 kmpl
இலக்ரிக் ஸ்டார்ட்
மேலதிக வசதியான ஆசனம்
நீண்டதூர பயணத்திற்கு ஏற்ற ஷொக் அப்சோபர்

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
75, ஹைட் பார்க் கோணர், கொழும்பு 2 011-4700600 011-4700677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

...ரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2017 ...சிட்டு வெளியிடப்பெற்றது.